
அரை
மனிதன்
ரா.சீ

# அரை மனிதன்

பேராசிரியர்

டாக்டர். ரா. சீனிவாசன்,

எம்.ஏ.,எம்.லிட்.,பி.எச்.டி.

அணியகம்

5, செல்லம்மாள் தெரு, செனாய் நகர்,

சென்னை - 600 030.

# நூல் விளக்கம்


| | |
|---|---|
| முதற் பதிப்பு | 1977 |
| மறுபதிப்பு | 1998 |
| நூல் பெயர் | அரை மனிதன் |
| ஆசிரியர் | ரா. சீனிவாசன் |
| பொருள் | புதினம் |
| பதிப்பகம் | அணியகம்<br>5 செல்லம்மாள் தெரு,<br>செனாய் நகர்,<br>சென்னை - 30.<br>தொலைபேசி : 644 96 30 |
| தாள் | 13.6 kg. Map litho |
| அளவு | டபுள் கிரௌன் |
| எழுத்து | 10 புள்ளி |
| பக்கம் | 128 |
| விலை | ரூ.30.00 |
| ஒளியச்சு | லேசர் இம்ப்ரெஷன்,<br>சென்னை - 30. |
| அச்சீடு | நெல்சன் பிரிண்டர்ஸ்<br>சென்னை - 600 029. |

# முன்னுரை

'அரை மனிதன்' இது இங்கு வரையப்பட்ட சித்திரம். அவன் உதிரிகளின் வாழ்க்கையில் தொடர்பு பெறுகிறான். அவர்களிடம் உள்ள உயர்ந்த பண்புகளைக் காட்டுவது இப் புதினம்.

பாத்திரப் படைப்பில் இது சிறந்து விளங்குகிறது. 'அம்மா கண்ணு' இது உருவகப் பாத்திரம். 'ஆம்படையானைத் தேடி' அவள் வீட்டைவிட்டு வெளியே வருகிறாள். அதில் அவள் வெற்றி பெறுகிறாள்.

இளைஞர்கள், படித்தவர்கள் பிறந்த குடும்பத்தை மறக்கிறார்கள். அவர்கள் மேல்நிலை எது என்று நினைக் கிறார்கள்? மேல்நிலை, இடைநிலை, கீழ்நிலை என்ற மூன்று நிலைகளைப் பிரித்துக் காட்டுகிறது. 'இனம்' வேறுபடுகிறது. 'மத்திய வர்க்கம்' அவர்கள் நிலை இதில் சித்திரிக்கப்படுகிறது.

கருத்து மிக்க கதை; அர்த்தமுள்ள செய்திகள்; கதைக்கு வேண்டிய கரு, சிக்கல்கள், தீர்வு இவை அழகாகக் கட்டப்பட்டுள்ளன. தோய்வில்லாமல் இயங்குகிறது. அழகிய படைப்பு என்பதில் பெருமை கொள்கிறேன்.

**- ரா. சீனிவாசன்**

## ஆசிரியரின் கதை நூல்கள்

1. வழுக்கு நிலம் (நாவல்)
2. அரை மனிதன் (நாவல்)
3. வெறுந்தாள் (நாவல்)
4. நனவோட்டங்கள் (நாவல்)
5. குப்பைமேடு (சிறுகதைகள்)
6. படித்தவள் (சிறுகதைகள்)
7. பரிசு மழை (சிறுகதைகள்)
8. கிளிஞ்சல்கள் (சிறுகதைகள்)

# "அரை மனிதன்"

## 1

நான் அரை மனிதன்; எப்படி அரை மனிதனாக இருக்க முடியும்? அதாவது சம்பாதிக்க முடியாத மனிதன். அதாவது முழு மனிதனுக ஆக முடியவில்லை. இன்னும் உங்களுக்கு வேறு விதமாக விளக்கினால் நன்றாக இருக்கும். அதாவது என் கால் ஒன்று நொண்டியாகி விட்டேன். நிற்கவேண்டும். அது கூட ஏதாவது பிடித்துக் கொண்டு நிற்க வேண்டும். அது தான் தம்பி கொடுத்தானே மரக்கட்டை. அதை வைத்துக் கொண்டுதான் நிற்கிறேன். ஏன் நடக்கவும் முடியும்.

இந்த ஊரிலேயே நான் தான் பெரிய மனிதன். அதாவது நான் ஒன்றும் ஊழலில் அகப்பட்டுக் கொண்டு என் பெயர் ஒன்றும் பத்திரிகையில் வரவில்லை. அப்படி வந்தால்தான் நீங்கள் பெரிய மனிதர்கள் என்று நினைப்பீர்கள். இப் பொழுது யார் யார் பெரிய மனிதர்கள் என்ற பட்டியல்தான் பத்திரிகைகளில் வருகிறதே. பெரிய பெரிய மனிதர்கள் கையிலே விலங்கு போட்டு இழுத்துப் போகப்படுகிறார்கள். யாராவது நினைத்திருப்பார்களா? என்னமோ உலகத்திலே நல்லது பொல்லது பற்றி ஆத்ம விசாரணைகள் நடக்கின்றன. அவ்வளவுதான்.

நான் பெரிய மனிதன் என்றால் என்ன அர்த்தம். நான் போக வர பெரிய கார், எடுபிடி ஆட்கள் இருக்கிறார்கள் என்பது அர்த்தம் அல்ல. எனக்கு ஒரு கால் 'அவுட்'. அதாவது என்னிடம் இருக்கமாட்டேன் என்று நீங்கிவிட்டது. அதாவது நொண்டி. யாராவது நொண்டியை நீங்கள் பார்த்திருக்கிறீர்

களா? கட்டாயம் அவன் கையில் இரண்டு கட்டைகள் இருக்கும். அதை வைத்துக்கொண்டு நடந்தால் யார் கண்ணி லும் அகப்பட்டுத்தான் தீர வேண்டும். அந்த வகையில் நான் பிரமுகர் இனத்தைச் சார்ந்தவன் தான்.

நீங்கள் நினைக்கலாம். எப்படி ஒரு நொண்டி வாழ முடியும் என்று. அப்படி ஒன்றும் கஷ்டம் இல்லை. நொண்டிதான் இந்த உலகத்திலேயே வாழ முடியும். திறமை சாலிக்குத்தான் போட்டி. அவன் முன்னுக்கு வருவது நிரம்ப கஷ்டம். நான் நின்றாலே பஸ்ஸிலே உட்கார இடம் கொடுத்து விடுவார்கள். யாரைக் கேட்டாலும் கை நீட்டினாலும் போதும். என் கைகளில் கட்டைகள் இருக்கின்றன. உடனே காசு வந்து விழும். அப்படிக் கேட்பதற்கு எனக்குப் பிடிப்பது இல்லை. அப்புறம் எனக்கும் சில அரசியல்வாதிகளுக்கும் வித்தியாசம் இல்லாமல் போய்விடும். அவர்களும் தான் கைநீட்டி வாங்கு கிறார்கள். நானும் வாங்குகிறேன். அப்புறம் யார் என்னை மதிப்பார்கள்!

பிச்சை எடுக்கக்கூடாது. பலபேர் அந்தத் தொழிலுக்கே அகவுரவத்தை உண்டாக்கிவிட்டு இருக்கிறார்கள். சிலபேர் பள்ளிக்கூடத்திலே 'நன்கொடை' என்று சொல்லி நிறைய பணம் வாங்குகிறார்கள். அவர்களை யாரும் மதிக்கிறது இல்லை. அப்புறம் நானும் பிச்சை எடுத்தால் என்னைக் கேவலமாக மதிப்பார்கள். கேவலம் ஒரு பள்ளிகூடத்து நிர் வாகி என்று கேவலப்படுத்தினாலும் கேவலப்படுத்துவார்கள். அதனால் நான் பிச்சை எடுக்கிறது மட்டும் இல்லை.

என் தம்பி என்னைவிட வயது குறைவுதான். அதை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதே இல்லை. தம்பி என்றாலே அதுதானே அர்த்தம். என்றாலும் அவனுக்கு இரண்டு காலும் நன்ருக இருக்கிறது. அதனால் அவன் என்னை விட கொஞ்சம் உயர்வுதானே. அவன் கொஞ்சம் திமிராகத்தான் நடப்பான். அவன் கால் இருக்கிறது. அதனால் அப்படி நடக்கிறான்.

ஏன் சிலபேரை இந்த நாட்டிலே 'தீண்டாதவர்கள்' என்று ஒதுக்குகிறார்கள் என்பது ரொம்ப நாளாகத் தெரிவது இல்லை. என் கால் போன பிறகுதான் அந்த உண்மை தெரிந்தது. எல்லோரும் என்னை 'நொண்டி' என்று கூப்பிட்டார்கள். அதிலும் என் தம்பி கூட அப்படித்தான் கூப்பிட்டான். என்னைக் கொஞ்சம் கொஞ்சம் ஒதுக்க ஆரம்பித்தான்.

இந்த நாட்டிலே உழைத்து உழைத்து நொண்டியாகப் போனவர்கள் பலபேர். அவர்கள்தான் தீண்டாதவர்கள். அவர்கள் காலத்துக்கும் உழைத்தார்கள். சொத்து சுகம் ஒன்றும் கண்டது இல்லை. உழைக்கிறவனுக்குச் சுகம் எப்படி உண்டாகும்? 'உழைப்பே உயர்வு தரும்; கடின உழைப்பு அவசியம்' இப்படி எல்லாம் அங்காங்கே எழுதி வைத்திருப் பதைப் படித்து இருக்கிறேன். அதற்கப்புறம் இந்த உழைக்கிற கூட்டத்தையும் பார்க்கிறேன். அவர்கள் எந்த உயர்வைப் பெற்றார்கள். அவர்கள் அதே ஏழ்மைதான். பற்றாக்குறை தான். போருக்குப் போகாமலே 'பட்டாளம்' என்ற பெயர் அவர்களுக்கு அமைந்து இருக்கிறது. அதுதான் பட்டினிப் பட்டாளம். அவர்கள் இந்த நாட்டிலே ஒதுக்கப்பட்டவர்கள். என் உழைப்பால்தான் என் தம்பி முன்னுக்கு வந்தான். ஆனால் அவன் என்னை உழைப்பாளிகள் போலவே ஒதுக்கி விட்டான். அது எப்படி அவன் மட்டும் விதிவிலக்காக முடியும்?

நான் நொண்டிதானே! நான் எப்படி அவனுக்கு உழைத்தி ருக்க முடியும்? ஆச்சரியமான கேள்விதான். எனக்கு மதிப்பு இல்லை. ஆனால் என் காலுக்கு விலை பத்தாயிரம். அதை வைத்ததுத்தான் அவனை நிம்மதியாகப் படிக்க வைத்தார்கள். அதனால்தான் சொல்லுகிறேன். அவன் என் உழைப்பால் முன்னுக்கு வந்தான் என்று. என்னை யாரும் மதிக்கமாட் டார்கள். ஆனால் காலுக்குப் பத்தாயிரம் கொடுத்தார்கள். அதுக்குக்கூட அதிருஷ்டம் வேண்டும் என்றுதான் நினைக்கிறேன்.

என் தம்பி கெட்டிக்காரன். அவன் எப்படியும் முன்னுக்கு வந்துவிடுவான். அவன் அன்றைக்கு ஓடிச்சென்று காரில் மாட்டிக் கொள்ள இருந்தான். அவன் மாட்டிக் கொள்ளாமல் இருப்பதற்குத்தான் ஓடிப்போய் அவனை இழுத்தேன்; அவன் பிழைத்தான்; நானும் கூடத்தான் பிழைத்துக் கொண்டேன். ஆனால் என் கால் ஒன்றை மட்டும் அந்தச் சக்கரம் அன்று சுவை பார்த்தது. என் ரத்தம் சிவப்பாக இருந் தது. அந்தச் சக்கரம் அந்தச் சிவப்பைத் தொட்டுப்பார்த்தது.

'சிவந்த மண்' அந்த இடம் ஆயிற்று. இந்த நாடு சிவந்த மண் ஆகிறதோ இல்லையோ தெரியாது. அந்த இடம் என் னால் சிவந்தமண் ஆகியது. எல்லோரும் அதிருஷ்டம் என்றார்கள் எனக்கு என் கால் போனதை. அதாவது என் உயி ருக்கு ஆபத்து ஏற்படவில்லையே அதைத்தான் அதிருஷ்டம் என்றார்கள். அதைவிட என் தம்பியின் ஜாதகத்தைப் பாராட்டி னார்கள். அதாவது அவன் ஒரு கண்டத்திலிருந்து தப்பினானே அதற்கு.

நான் எதுக்குச் சொல்ல வந்தேன் என்றால் எங்கள் வீட்டுக்கு இந்த மாதிரி அதிருஷ்டம் வரும் என்று நாங்கள் எதிர் பார்க்கவே இல்லை. அதை வைத்துக் கொண்டுதான் எங்கள் அப்பா ஒரு அச்சுத் தொழில் நிலையம் திறந்தார். அதற்கு முன் னால் எங்கெங்கோ சென்று 'பொறுக்கிக் கொண்டு' இருந்தார். அதுதான் எழுத்துகளைப் பொறுக்கும் கம்பாஸ்டர் வேலை செய்துகொண்டிருந்தார். அவர் எப்படியாவது ஒரு அச்சாபீ சுக்கு அதிகாரி ஆகவேண்டும் என்று ஆசைப்பட்டார். அதை அந்தச் சின்ன வயதிலேயே நான் நிறைவேற்றிக் கொடுக்க முடிந்தது. அதாவது கார் என் காலை முறித்துவிட்டதால் நஷ்ட ஈடு கொடுத்தார்கள். அது ஒரு அதிருஷ்டம் தானே. நான் நிச்சயமாக எந்தக் காலத்திலே பத்தாயிரத்தைப் பார்க்க முடியும்.

இதெல்லாம் திடீர் பணக்காரன் ஆவதற்கு நல்ல வழிகள் என்று நினைக்கிறேன். 'ஒரு ரூபாய் கட்டினால் ஒரு லட்சம்

வரும்' இப்படி ஒருபக்கம் விளம்பரம். மற்றொரு பக்கம் 'கடின உழைப்பிற்கு ஈடு எதுவும் இல்லை'. இதுதான் நம் நாட்டுச் சித்தாந்தம். எதிலும் முழுமையான நம்பிக்கை கிடையாது. அதிருஷ்டத்தை நம்பியும் வாழவேண்டும். உழைப்பையும் நம்பி வாழவேண்டும். ஆனால் என்னைப் பொறுத்தவரை துரதிருஷ்டத்தை நம்பியும் வாழ முடியும் என்பதற்கு என் வாழ்க்கை ஓர் எடுத்துக்காட்டு.

அம்மா எல்லோரைப் போலவேதான் இருந்தார்கள். அவர்களைப் பற்றி எப்படி நான் தனித்து எழுதமுடியும். ஊரிலே உலகத்திலே இல்லாத தனி அம்மா என்று எப்படி அவர்களைச் சொல்லமுடியும். ஒன்றே ஒன்று இரண்டுக்கு மேல் வேண்டாம் என்ற விதியைக் கடைப் பிடிக்கவில்லை. அவர்கள் காலத்திலே மூன்றுபேர் திட்டமிட்ட குழந்தையின் அளவு கோல் என்று நினைக்கிறேன். அதனால்தான் தங்கை ஒருத்தியைத் தாராளமாக இந்த உலகத்துக்குத் தந்தார்கள்.

" அது ஒண்ணு பொறக்காமல் இருந்தால் கவலையே இல்லை" என்று அம்மா சொல்வார்கள். என்னைப்பற்றி அப்படிப் பேசுவது இல்லை. "அவன் நொண்டி. எப்படியாவது பிழைத்துக் கொள்ளுவான்" என்றுதான் சொல்லி வந்தார்கள். எனக்கு அது ரொம்ப ஆச்சரியமாகத்தான் இருந்தது. உலகத்திலே ஏதாவது குறை இருக்கிறவர்கள்தான் அறிவாளிகளாக இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். நான் சொல்வதை நீங்கள் நம்பமாட்டீர்கள். இன்றைக்கு முன்னுக்கு வந்தவர்கள் வருகிறவர்கள் யார்? படிப்பே இருக்காது; அவர்களுக்குப் பட்டங்கள் பதவிகள் எப்படி வருகிறது? அவர்கள் தம் குறைகளைப் போக்கிக் கொள்கிறுர்கள். சங்கீத வித்வான்கள் பலர் குருடர்களாகவும் இருக்கிறார்கள். குருடு செவிடு பள்ளிக் கூடங்களில் முதன்மையாகத் தேறி வெற்றி பெறுகிறார்கள். என்னைப்பற்றி யாரும் அவநம்பிக்கை கொள்வதில்லை.

நான் தம்பியிடம் சொன்னேன். அவன் கேட்டால் தானே. அதுசரி எந்தத் தம்பி அண்ணன் பேச்சைக் கேட்கிறான்.

வேண்டாம் அந்தச் சம்பந்தம் என்று சொன்னேன். அவன் கேட்டால்தானே! பெண் அவனுக்குப் பிடித்து விட்டதாம். நானும் நினைத்துப் பார்க்கிறேன். ஏன் அவன் அப்படிச் சொல்கிறான். அதாவது அவன் கற்பனைக்கு ஏற்றவளாக இருந்தாள். என்ன கற்பனை!

அவன் மேலே எப்படித் தப்பு சொல்ல முடியும். இங்கே அவன் என்னத்தைக் கண்டான். ஏதோ வேளைக்குச்சோறு; அதுகூட பிரமாதம் என்று சொல்லமுடியாது. போட்டுக் கொள்ள சட்டை; படிப்புக்குச் சம்பளம்; இருக்கிறதுக்கு ஒன்றும் வசதியான வீடு இல்லை. விளம்பரப்படுத்துவதற்கு ஒரு ஸ்கூட்டர் வாங்கமுடியாது.

அந்த இடம் அவனுக்கு நல்ல விளம்பரத்தைத் தந்தது. காரே தருகிருர்கள் என்று சொன்ஞர்கள். போகட்டும் ஒரு புதிய காராவது தந்தார்களா? அதுவும் இல்லை. அதே பழைய கார்; புதிய 'பெயிண்டு'. அது தான் என் காலைக் கடித்ததே அதே கார் தான். நான் எனக்குள் சிரித்துக்கொள்வேன். தம்பி அந்தக் காருக்குச் சொந்தக்காரன் ஆனான்.

நான் வருத்தப்படுவதற்கு ஒன்றும் இல்லை. தம்பிக்குக் கல்யாணம் ஆயிற்று. அவனைப் படிக்க வைத்தோம். இந்தக் குடும்பத்துக்கு அவன் பயன்படவில்லை. அவள் எங்கள் வீட்டில் இருக்கமுடியாது என்று அவனே சொல்கிறான். போகட்டும்; அவர்கள் வீட்டில்தான் எங்களை அழைத்துப் போவதுதானே. அந்த இடத்துக்கு நாங்கள் எப்படிப் போக முடியும்?

நொண்டி நாயை யாரும் எளிதாகக் கல்லெடுத்து அடிப் பார்கள். என்னைக் கேவலப்படுத்துவதற்கு வேறு ஒன்றும் தேவை இல்லை. போயும் போயும் நான் அவன் கையேந்தி நிற்க என்னால் எப்படி முடியும்? அப்பாவுக்கு அச்சுத் தொழில்; அம்மாவுக்கு அடுப்பங்கரை; தங்கைக்கு அழுகை; எங்களை விட்டுப்பிரியாத உடன் பிறப்புகள் இவை.

அவள் அதுதான் தங்கை; பத்தாயிரம் கொடுத்தால்தான் அவன் அவளை வைத்துக்கொண்டு வாழ முடியும். நாங்கள் ஒரு பாவத்தைச் செய்திருக்கிறோம். பணத்துக்கு ஆசைப் பட்டுத்தானே நாங்கள் அந்தப் பணத்தை மருமகளாகக் கொண்டோம். அதேபோலத்தான் அவனும் ஆசைப்படு கிறான். நீங்கள் மட்டும் பணக்காரச் சம்பந்தம் வைத்துகொள் ளவில்லையா? அவன் மட்டும் காரில் போகும்போது நான் ஸ்கூட்டரில் போகவேண்டாமா? இந்த மாதிரி உரிமைப் பிரச்சனைகளை அவன் எழுப்பினான். இது எப்பொழுதும் அழுது கொண்டே இருக்கும்.

''என்னை என்னம்மா செய்யச் சொல்றே''

பாவம் அப்பா என்னதான் செய்வார். எல்லா அப்பாவும் செய்கிறமாதிரி கடன் வாங்கி அவளைச் சரிப்படுத்தி அனுப்பி வைத்தார். இப்பொழுதுதான் என் கால் என்னை விட்டு நீங்கியதுபோன்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது. அந்த அச்சு எந்திரத்தைக் கடன்காரர் பெரிய மனது வைத்து விற்றுச் சரிப் படுத்திக்கொண்டார்கள். அப்பா மறுபடியும் கம்பாசிட்டர் ஆகிவிட்டார்.

நான்? என் மரக்கட்டை எனக்குத் துணைசெய்தது.

என்னால் இதைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. என் தம்பிக்காக என் காலை இழந்தேன். என் கால்மேல் அவன் நின்றான். இந்தக் குடும்பமே அந்த அஸ்திவாரத்தின்மீதுதான் நின்றுகொண்டிருந்தது. பூகம்பம் வந்ததுபோல் எல்லாம் இடிந்து போன நிலையில் நான் நின்று விட்டேன்.

இந்த ஊக்கி (Lift) இருக்கிறதே அதை நான் பலமுறை பார்த்து இருக்கிறேன். மற்றவர்களைவிட அது எனக்கு மிகவும் தேவை. அது மேலே போகும்; கீழே வரும். மற்றவர் களைத் தூக்கிச் செல்லும்; தான் மேலே போகாது. மற்றவர் களை உயர்த்திவிட்டு மறுபடியும் அது கீழே வந்து நின்று விடும். நானும் அப்படித்தான் இருந்தேன். என் தம்பி மிக

உயர்ந்து விட்டான். தங்கை உயர்த்தப்பட்டாள்; நான் மறு படியும் பழைய இடத்துக்கு வந்து விட்டேன். இப்பொழுது அது தானும் உயர எழுவதில்லை; யாருக்கும் பயன்படுவது இல்லை; கெட்டுவிட்டது.

கால் இழந்ததுகூட அவ்வளவு கஷ்டமாகத் தெரிய வில்லை. அந்த அச்சு எந்திரம் போனதுதான் ரொம்பவும் வருத்தத்தைத் தந்துவிட்டது. அப்புறம் குடும்பம் நடத்துவதே கஷ்டமாகிவிட்டது. குடும்பம் எங்கே இருக்கிறது. ஒருத்திக் கட்டிக் கொடுத்தோம். மற்றொருவன் கட்டிக்கொண்டு போய்விட்டான். இரண்டு கிளிகள் பறந்து சென்று விட்டன. நான் எப்படிப் பறக்க முடியும். சிறகு ஒடிந்த பறவை எப்படிப் பறக்க முடியும்?

அந்தக் கிழவர் இப்பொழுது தன் எழுத்தை எண்ணிக் கொண்டு காலம் கடத்தினார். அம்மா மட்டும் அவ்வப்பொ ழுது பெண்ணைப் பார்த்துவிட்டு வருவாள். பெண் பெற்றதன் காரணம் இப்பொழுதுதான் விளங்குகிறது. அவள் நிம்மதியாக இருக்கிருள். என்னைப்பற்றியும் மறந்து விட்டார்கள். நானும் அவர்களை மறந்து விட்டேன். என்னை எதிர்பார்ப்பவர்கள் யாரும் இல்லை. நானும் எதையும் எதிர் பார்க்கவில்லை.

## 2

நான் இப்பொழுது பரந்த உலகத்துக்கு வந்து நின்று விட்டேன். என் உடலும் உள்ளமும் உரம் பெற்று விளங்குவன. எதைக் கண்டும் கலங்காத நிலைமை என்னுள் அமைந்துவிட்டது. இப்பொழுது இந்த உலகத்தில் நான் செய்வதற்கு ஒன்றும் இல்லை; செய்வதைப் பார்க்கும் பொழுதுபோக்கு என்னிடம் அமைந்து விட்டது.

எனக்குத் திருமணம் ஆகி இருந்தால் தம்பிக்குமுன் ஆகி இருக்கவேண்டும். அந்தத் துணிவு எனக்கு ஏற்படவில்லை.

எப்பொழுது நான் பிறரை எதிர்பார்க்கும் நிலையை அடைந்து விட்டேனோ அப்பொழுதே மற்றொருத்தி என்னை எதிர் பார்த்து வாழ்வதில் அர்த்தம் இல்லை என்பதை நன்றாக உணர்ந்து கொண்டேன்.

வயிற்றுப் பிழைப்புக்காக நான் என்றுமே கவலைப்பட்ட தில்லை; கவலைப்படப் போவதும் இல்லை. ரயில் நிலையம் எனக்குப் பிடித்த இடமாக இருந்தது. என்னைச்சுற்றி ஒரு கூட்டமே இருந்தது. அவர்கள் கூலி சுமப்பவர்கள். நான் அவர்களுக்குத் தலைவன் என்ற நிலைமை ஏற்பட்டு விட்டது.

அங்கே ‘கார்களை’ நிறுத்தி வைப்பார்கள். அதற்குக் காவல் இருப்பேன். அதிலே எனக்கு வேண்டிய காசு கிடைத் தது. காசு சம்பாதித்தாலும் என்னை வீட்டில் சேர்க்க மறுத்துவிட்டார்கள். அதை ஒரு மதிப்புள்ள வாழ்க்கையாக அப்பா நினைக்கவில்லை.

நொண்டிக்கு வேறு என்ன மதிப்புக் கிடைக்கப் போகி றது. எதிர்பார்க்கவில்லை. அன்று என் தம்பியின் கார் அங்கு வந்து நின்றுவிட்டது; நான் ஓடியிருப்பேன்; அது என்னால் முடியவில்லை. அவனிடம் நெருங்கவில்லை. அவன் தன் மனைவியிடம் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தான்.

“உங்களுக்கு இது அவமானமாக இல்லையா?” என்று அவள் அவனைக் கேட்டாள்.

அதற்கப்புறம் அவனுக்கு ரோஷம் வந்து விட்டது. நான் நொண்டி நடப்பது அவனுக்குப் பிடிக்கவில்லை. அவன் நேரே என்னிடம் வந்தான். பேச அவனுக்குச் சொற்கள் உதவ வில்லை; ஓங்கி அறை கன்னத்தில் விட்டான்.

அவனுக்கு ஒரு படிப்பினையைக் கற்றுத் தர விரும் பினேன். நேரே அவளிடம் சென்றேன்.

“அம்மா! காசு கொடுங்கள்” என்றேன். அவள்முன் நான் ஒரு பிச்சைக்காரன் ஆனேன்.

"வேலை செய்து பிழைக்கக்கூடாதா?" என்றாள்.

"நொண்டி வேலை செய்வது தம்பி அகவுரவம்" என்றேன்.

"அப்படியானால் திருடலாமே" என்றாள்.

"தங்கள் மேலான புத்திமதியை ஏற்றுக்கொண்டேன். முதன்முதலில் உங்கள் வீட்டில்தான் ஆரம்பிக்கப் போகிறேன்".

அவள் இந்தப் பதிலை எதிர்பார்க்வில்லை. அவளுக்குத் தூக்கிவாரிப்போட்டது.

அவன் வேகமாக வந்தான்.

"இன்னுமா நிற்கிறாய்?"

"ஓட முடியவில்லை" என்றேன்.

"அதைக் கேட்கவில்லை. இங்கே என்ன தகராறு செய்கிறாய்?"

"அம்மா என்னைத் திருடச் சொன்னார்கள். பிச்சை எடுக்க வேண்டாம் என்று சொன்னார்கள்."

"சரி போ; அதைச் செய்"

"உங்கள் வீட்டில் வந்து புகுந்து திருடப் போகிறேன்" என்றேன்.

அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

"கால் போனது எனக்கு; அது என்க்குக் கொடுக்கப்பட்ட பணம். அதை மூலதனமாக வைத்துத்தான் உன்னைப் படிக்க வைத்தோம். இப்பொழுது யார் திருடன் என்பதை அவளுக்கு எடுத்துச் சொல்."

"அப்பொழுது நான் திருடன் என்று சொல்லுகிறாயா?"

"அந்தத் திருட்டுப் பொருள் யார் கையில் இருக்கிறதோ அவர்கள்தான் திருடர்கள். அதுதான் இந்த நாட்டுச் சட்டம். எங்கள் உழைப்பால் உருவாக்கப்பட்ட உன்னை அவள் முழுவதும் வசப்படுத்திக் கொண்டாள். இப்பொழுது யார் திருடன் என்பதை அவளுக்கு எடுத்துச் சொல்" என்றேன்.

அதற்குள் போலீஸ்காரர் ஒருவர் அங்கு வந்து விட்டார். என்னைப் பிடித்து இழுத்துச் சென்றார்.

"இது குடும்ப விவகாரம்"என்றேன்.

அவர் தன் வாழ்நாளில் இதைப்போலச் சிரித்து இருக்க மாட்டார். காரிலே செல்லும் ஒரு சுகவாசிக்கும் காலிலே செல்லும் ஒரு நொண்டிக்கும் உறவு இருக்கிறு என்றால் அவரால் எப்படி நம்ப முடியும். அந்த 'ஓனர்' மெச்சிக் கொள்வதற்காக மறு கன்னத்தில் அவர் ஒரு அறை விட்டார்.

நான் எவ்வளவு சீக்கிரம் இயேசு நாதராக உயர்த்தப் பட்டேன் என்பதை அப்பொழுது கொஞ்ச நேரம் சிந்தித்துப் பார்த்தேன்.

அவன் அவளுக்கு வண்டியோட்டினான். அப்படி அவன் என் பார்வையில் பட்டான். அவளுக்கு என்னைப் பற்றிக் கொஞ்சம் பயம் ஏற்பட்டது. அவர்கள் வீட்டில் புகுந்து திருடப் போகிறேன் என்று நம்பி விட்டாள். அவன் என் தம்பி என்ற பாசம் என்னைத் தடுத்தது. அவனுக்கு நான் அண்ணன் என்பதால்தான் அவன் என்னை அடித்தான். நான் அங்கே ரயிலடியில் சுற்றித் திரிவது அவமானம்தானே!

அப்படி என்றால் என்னைப்போல் எத்தனை பேர் இங்குச் சுற்றித் திரிகிறார்கள். அது இந்தச் சமூகத்துக்கு அவமா னம்தானே. யார் இதை எண்ணிப் பார்க்கப் போகிறார்கள். கால் இல்லாவிட்டால் பொதுவாக ஒதுக்கப்படுவார்கள். ஆனால் நான் இங்கு ஒதுக்கப்படவில்லை. நான்தான் அவர்கள் தலைவன் என்ற கவுரவத்தை அளித்தார்கள்.

என்னை 'வாத்தியார்' என்று கவுரவமாக அழைத்தார்கள். அதாவது நல்லது செய்பவன் என்பது அந்தச் சொல்லுக்கு அர்த்தம். இது அவர்கள் அகராதி. எதிரிகளை அஞ்சாமல் தாக்குபவன் என்பது அந்தச் சொல்லுக்குத் தனிப்பொருள். எளியவர்களைக் காப்பவன் என்பது இந்தச் சொல்லுக்கு அர்த்தம் இருந்த்து. அதே சமயத்தில் சம அந்தஸ்தில் வைத்துப் பேசப் பயன்படும் சொல்லாக இது இருந்தது. 'என்னா வாத்தியாரே என்ன சொல்றே' என்றுதான் கேட்பார்கள்.

அவன் அடித்ததை என் சிஷ்யன் ஒருவன் பார்த்து விட்டான். அவன் என் தம்பி என்பது அவனுக்கு எப்படித் தெரியும். அந்தக் கார்போகும்போது அவன் அடித்த கல் குறி தவறிவிட்டது.

"தப்பித்துக் கொண்டான்" என்று அவன் தோல்வியை என்னிடம் சொன்னான்.

அவனிடம் என் தம்பி என்று சொல்வதா இல்லையா என்று கொஞ்சம் நேரம் யோசனை செய்தேன். அப்புறம் அவர்களோடு ஒன்றாகப் பழக முடியாது. தம்பியால் வரு கின்ற பெருமை எனக்குத் தேவை இல்லை என்பது உணர்ந்தேன்.

"அவன் என்னோடு படித்தவன்" என்று சமாளித்துக் கொண்டேன்.

"என்ன அண்ணே, உன்னோடு படித்தவன் என்கிறே. அவன் நிலைமை உன் நிலைமை."

"அதுதான் இந்த நாட்டு நிலைமை. பள்ளியிலே படிக்கும் வரை வித்தியாசம் இருப்பது இல்லை. அப்புறம்தான் வித்தியாசமே ஆரம்பிக்குது. இப்பொழுது சில பள்ளிகளில் சீருடை என்று வைத்திருக்கிறார்களே அது தெரியுமா? அதைப் பார்த்திருக்கிறாயா?"

"அதுதான் எல்லாம் ஒரே மாதிரியாக இருக்கும். இந்தப் பெண் பிள்ளைகள் படிக்கிற பள்ளிக்கூடத்திலே எல்லாம் ஒரே ஊதா; இல்லாவிட்டால் ஒரே வெள்ளை; இல்லா விட்டால் ஒரே ரோஜா."

"அதுதாண்டா ராஜா சீருடை என்பது. நம்ப போலீசுகார அண்ணன் எல்லாம் காக்கி. டிராபிக்குப் போலீசு எல்லாம் வெள்ளை. அப்பத்தான் ஒரு ஒழுங்கு இருக்குது".

"நாம்கூட ஏதாவது ஏன் ஒரு யூனிபாரம் தைத்துப் போட்டுக் கொள்ளக் கூடாது."

"நாம் உதிரிகள். நாம் இப்படி ஒரு கூட்டம் இருப்பதே பலபேருக்குத் தெரியாது. அப்புறம் நம்மை வேட்டை ஆட ஆரம்பித்து விடுவார்கள். அப்புறம் உள்ளே போக வேண்டியதுதான்".

அதற்குள் ஒருவன் பேசினான்.

"உள்ளே போனால் என்ன! வெளியே இருந்தால் என்ன! எல்லாம் ஒன்றுதான்".

அது அவன் அனுபவமாக இருந்தது.

அதுக்கப்புறம் ஒரு "டீ" அடித்துவிட்டுப் படுத்துக் கொண்டோம். நான் மட்டும் அதிகமாகப் படம் பார்க்கப் போவது இல்லை. என் கூட்டம் அநேகமாகத் தியேட்டரில் தான் இருப்பார்கள். அவர்கள் பார்க்காத படமே இல்லை.

நான் அப்பொழுது நினைத்துப் பார்த்தேன். வாழ்க்கை பெரிய பங்காளக்களில் தானா இருக்கிறது. கூடப்பிறந்தவன் தான் தம்பியா, இங்கே இருக்கிறவன் ஒவ்வொருவனும் என் தம்பிதான். ஆனால் என் தங்கை அவள் தன் கணவனோடு வாழ்கிறாள். அவளுக்குச் செய்ய வேண்டியது எல்லாம் செய்து விட்டோம். நான் அவர்களைப் பற்றிக் கவலைப்படு கிறேன். அவர்கள் என்னைப் பற்றிக் கவலைப்படுவது இல்லை.

எனக்குத் தலையணை இல்லாமல் தூக்கம் வருவது இல்லை. இப்பொழுது அது அவசியமா என்றுகூட நினைப்பது உண்டு. பாய், துப்பட்டி இல்லாமல் வீட்டில் உறங்க மாட்டேன். அது இல்லாமல் தூங்க முடியும் என்பதைக் கற்றுக் கொண்டேன்.

இது என்ன பிழைப்பு. அவள் தான் என் தம்பி மனைவி. "திருடக் கூடாதா?" என்று கேட்டாள். அதே கேள்வியைத் தான் கேட்கிறேன். திருடினால் என்ன சே! பெரிய மனிதர்கள் செய்யும் அற்பத்தனத்தை நான் செய்ய விரும்பவில்லை. சட்டத்தின் உள்ளிருந்து பிறர் உழைப்பைத் திருடுகிறார்கள். நான் சட்டத்தின் வெளியே இருந்து அதைச் செய்தால் அவர்களுக்கும் எனக்கும் வித்தியாசம் இல்லாமல் போய்விடும். ஏதோ ஒரு நாவலைப் படித்த கவனம். அதன் ஆசிரியர் மிக அழகாகப் பிரித்துக் காட்டி இருக்கிறார். சாதி இரண்டு வகைப் படும். உழைப்பவர்; மற்றவர் உழைப்பைத் திருடுபவர்; சுரண்டப்படுபவர். சுரண்டுகிறவர்கள் இப்படித்தான் பார்க்க வேண்டும் என்று கூறுகிறார். திருடுகிறேன், பாவம் அவன் என்னைப் போலச் சுரண்டப்பட்டவனாக இருந்தால்! அது கொடுமை. அப்படித்தான் திருடிவிட்டால் நான் என்ன சாதித்துவிடப் போகிறேன். என் தங்கைக்கு, அவள் கணவன் இப்பொழுது என்னிடம் பேசமாட்டான். நான் அங்குச் சென்றால் தங்கைக்கு அவமானம். நொண்டி, முடம் எல்லாம் இங்கு வருவதற்கு இது என்ன மருத்துவமனையா? என்று கேட்பான். வாழ்க்கையில் ஒதுக்கப்பட்டவர்கள் நாங்கள். நாங்கள் எப்படி அவர்களோடு ஒட்டி உறவு ஆட முடியும்?

திருடுவதும் சில சமயம் அவசியம்தான் என்று பட்டது. இல்லாவிட்டால் திருட வேண்டிய நிலைக்கு ஒரு சிலர் தள்ளபட்டிருக்கிறார்கள். என் கதை யார் எண்ணிப் பார்க்கப் போகிறார்கள். அங்கங்கே வீடு புகுந்து திருடுகிறார்கள். கொலைகள்கூட ஒன்று இரண்டு நடந்து விட்டதாகச் செய்தித் தாள்கள் செய்திகளைத் தருகின்றன. ஏன் இந்தச் செய்தி

களைத் தருகிறார்கள். சமுதாயத்தில் இந்த விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தத்தானே. தனித்தனி வீடுகள் கட்டிக் கொண்டு நிம்மதியாக ஒதுங்கி வாழ்கிறவர்களுக்கு இப்படி அதிர்ச்சிகள் ஏற்படத்தான் செய்கின்றன. அப்படி யாரும் எங்கேயும் ஒதுங்கி வாழ முடியாது. சமுதாயத்தில் வாழமுடியாத நிலையில் திருட்டுத் தொழிலுக்குத் தள்ளப்படுகிறார்கள் என்பதை எண்ணிப் பார்த்தேன். சமுதாயத்தில் வாழக்கூடிய வசதி உடையவர்கள் கொள்ளை அடித்தார்கள். அதைக் கண்டு யாரும் பீதி அடைவதில்லை. எங்கோ யாரோ ஓரிருவர் திருடும்போது அது விளம்பரப் படுத்தப்படுகிறது. அதைப் பற்றி எங்கும் பேசுகிறார்கள். லட்சக்கணக்கில் ஏன் கோடிக் கணக்கில் ஊழல் நடக்கிறது. அச்செய்திகளைக் கண்டு யாரும் பீதி அடைவதில்லை; கவலைப்படுவதும் இல்லை. எங்கோ சில ஆயிரங்கள் கொள்ளை அடிக்கப்படுமாயின் உடனே அதைப் பற்றிப் பேட்டிகள் விமரிசனங்கள் விவரங்கள் தரப்படுகின்றன. முன்னதை மறந்து விடுவார்கள். பின்னதை மறவாமல் பேசுவார்கள். ஏன்? இது தன்னைப் பற்றியது. தங்கள் வீட்டிலும் யாராவது புகுந்தால் அந்த அச்சம்தான் இதைப் பற்றி அதிகம் நினைக்கச் செய்கிறது இரண்டைப் பற்றியும்தான் நினைத்துப் பார்க்க வேண்டும். முன்னதைத் தடுக்கப் பொது வாழ்வு சீர்பட வேண்டும். பின்னதைத் தடுக்க இந்த உதிரிகள் வாழ்வதற்கு வழித் தேடி தரவேண்டும்.

இப்படி என் நினைவுகள் அவள் சொல்லிவிட்டுச் சென்ற சில சொற்களால் தோன்றக் காரணம் ஆயின. அதற்குள் பேச்சுக்கு அங்கு கூலிப் போர்ட்டர் நண்பர் வந்து சேர்ந்தார்.

"என்னப்பா! இன்னைக்கு உன் கன்னம்"

"புளிச்சுப் போச்சு"

"அதுசரி உன் கன்னத்தை யார் இனிக்க வைக்கப் போகிறார்கள். நீ என்ன பெண்ணா என்ன?" என்று கிண்டலாகப் பேசினார். கன்னத்துக்குப் புளிப்பும் இனிப்பும் தோன்றும்

என்ற செய்தியைச் சுவைபடப் பேசினார். அது எனக்கு வியப்பைத் தந்தது.

"யார் அவன்?" என்று கேட்டார்.

"எல்லோரும் நம் உடன் பிறப்பாளிகள் தாம்" என்றேன்.

"அப்ப ஒவ்வொருத்தனிடமும் அடி வாங்க வேண்டியது தான்" என்றார்.

"இயேசு நாதர் சொல்லியிருக்கிறார். ஒரு கன்னத்தில் அடித்தால் நீ மறு கன்னத்தையும் காட்டு. அதைத்தான் செய்து காட்டினேன்" என்று கூறினேன்.

"ஆமாம், நீ ஏன் இந்த பிளாட்பாரத்துக்கு வந்து விட்டாய்?" என்று கேட்டார்.

"என்னைப் போல் நடைவாசிகள் நிறைய இருக்கிறார் களே அவர்களை எல்லாம் கேட்பது இல்லையே?"

"புதிதாக யார் வந்தாலும் இப்படித்தான் விசாரிக்கத் தோன்றும். அப்புறம் யார் உன்னைப் பற்றி விசாரிக்கப் போகி றார்கள். ஆமாம் உன் கால்"

"கால் போனதால்தான் நான் இப்பொழுது அரை மனிதனாக இருக்கிறேன்"

"அப்படி என்றால்?"

"முழு மனிதனாக ஆக முடியவில்லை. உழைக்க முடியா ததால் பிழைக்க முடியவில்லை"

"கால் என்ன ஆயிற்று?"

"அது பறிபோய் விட்டது"

"அப்படி என்றால்?"

"அதாவது ஆக்சிடெண்டு"

"ஏதாவது தொழில் செய்து பிழைக்கலாமே"

“அச்சுத் தொழில் எங்கள் வீட்டுத் தொழில். அதுவும் கடனால் நசிந்து விட்டது. மிச்சம் மீதி எதுவும் இல்லை.”

“உனக்குக் கால் இல்லையே! நீ கடன் கேட்டால் அரசாங்கம் கொடுப்பார்களே. உனக்கு ஏற்கெனவே நடத்திய தொழில் தெரியும். அதை வைத்துக் கொள். அப்பாவையும் வைத்து அழகாகத் தொழில் நடத்தலாமே.”

அவர் சொன்னது எனக்குப் புதுச் செய்தியாக இருந்தது. பலபேர் சொல்லி இருக்கிறார்கள். வழிதான் தெரியவில்லை. நாட்டிலே தொழில் தெரிந்தவர்களுக்குக் கடனுதவி தருகிறார்கள். நானும் கேள்விப்பட்டிருக்கிறேன்.

“உன்னைப் பார்த்தால் இங்கு வரத் தகுதியில்லை என்று தெரிகிறதே”

“எங்கேயும் எனக்குத் தகுதி இல்லை. அப்படித்தான் நினைக்கிறார்கள்..”

“உனக்கென்னப்பா நீ என்ன படித்துவிட்டா இருக்கிறாய கவலைப்படுவதற்கு; அவர்களுக்குதான் இந்த நாட்டில் வேலையில்லை. உனக்கு என்ன? கால் போனது உனக்கு அதிருஷ்டம். எல்லோரும் உதவி செய்வார்கள்” என்று சொன்னார்.

நான் எப்போதும் என் துரதிஷ்டத்தைக் கண்டு அதிகம் வருத்தப்படுவதில்லை. ஆனால் அந்த இடத்தை விட்டு வருவதற்கு எனக்கு விருப்பம் ஏற்படவில்லை. என்னமோ அந்தச் சூழ்நிலை பிடித்து விட்டது.

“இன்றைக்குப் பேப்பர் படித்தாயா?”

அவர் தவறாமல் பேப்பர் படிப்பது வழக்கம்.

“இந்த ஊழல் ஊழலென்று அனாவசியமாக எல்லாரையும் பிடித்துப் போடுகிறார்களே அதைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?”

"அது ரொம்ப பழங்கதை. அந்த அரசியல் சூழ்நிலையில் அப்படித்தான் ஒவ்வொருவரும் செய்வார்கள். அதாவது அவ னவன் தன் சொந்த முயற்சியால் முன்னுக்கு வந்தவர்கள். மேலும் மிகவும் கீழ்மட்டமான நிலையிலிருந்து வந்தபிறகு அதிகாரம் கைக்கு வந்ததும் அனுபவிக்க வேண்டுமென்ற ஆசை வந்து விட்டது. அனுபவித்தார்கள்."

"இருந்தாலும் இவ்வளவு கொள்ளை அடிக்கக் கூடாது. பொது வாழ்க்கையில் பகல் கொள்ளையாகத்தான் ஆகி விட்டது."

"இது நம்நாட்டு அரசியல் முறை. அது அவர்களுக்குத் தொழில் ஆகிவிட்டது. எதையும் செய்ய முடியவில்லை யென்றால் வக்கீல் படிப்பு படிக்கிறான். அல்லது அங்கும் இங்கும் கஷ்டப்படுகிறான். தேர்தலில் நிற்கிறார்கள். வெற்றி பெற்றதும் அவன் பணத்துக்குப்பட்ட கஷ்டம் தெரிகிறது. உடனே வாய்ப்பு வரும்போது சம்பாதிக்கிறான். இப்ப டித்தான் ஒவ்வொருவரும்"

"செய்யட்டும். ஏதோ இலைமறைவாகக் காய் மறை வாகப் போயிருந்தால் பரவாயில்லை. இப்படி லட்சம் லட்சமாகக் கொள்ளையடித்தால்"

"அவனுக்குத் தேவைப்பட்டது; வாய்ப்புக் கிடைத்தது. அதுமட்டுமல்ல. தன்னைச் சுற்றி ஒரு கூட்டத்தையே அமைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அது எல்லா நிலையிலும்"

"தலைவன் என்றால் அப்படித்தான்; பலபேரை விலை கொடுத்தும் வாங்கவேண்டியிருக்கும். இந்த அரசியல் முறை அடியோடு மாற வேண்டும்."

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. நாளும் சுமைதூக்கும் சுமைதாங்கியாய் இருக்கும் கூலி போர்ட்டர் அவர் இப்படி புதிய தத்துவத்தைச் சொல்கிறாரே என்று.

''எப்படி மாற வேண்டும்'' என்று கேட்டேன்.

''தலைகீழாக மாற வேண்டும்.''

''அப்படி என்றால்''

''தலைகால் தெரியாமல் நடக்கக்கூடாது. ஒழுங்காக இயங்க வேண்டும்.''

அதற்குமேல் அவரால் விளக்க முடியவில்லை.

''ஆமாம் நீங்கள் ஒரு சங்கம் அமைத்துக் கொள்ள வேண்டும்'' என்றேன்.

''ஏன் நீ எங்கள் சங்கத்துக்குத் தலைவராக இருக்கவேண்டுமென்று ஆசைப்படுகிறாயா?''

''ஏன், இந்த நாட்டுக்கே தலைவனாகத்தான் இருக்க ஆசைப்படுகிறேன். அதற்கொன்றும் அவ்வளவு கஷ்டமில்லை. ஆனால் தலைமைப்பதவியைக் காப்பாற்றிக் கொள்வதுதான் கஷ்டம்'' என்றேன்.

''நல்லது செய்தால் தானாகத் தலைவனாக ஆக முடியும்.''

''அதுசரிதான் நாட்டுக்கு நல்லது செய்தால் அது முடியும்.''

''பின் வீட்டுக்கா செய்வார்கள்?''

''அப்படிச் செய்தவர்களுக்கு இன்று நாட்டிலே இடமில்லை.''

''இந்தச் சுமைதாங்கி வேலை கஷ்டமாக இல்லையா?''

''ஏம்''பா! யாருமே இப்படி என்னைக் கூப்பிட்டதில்லை. போர்ட்டர் என்றுதானே கூப்பிடுகிறார்கள்.''

''தமிழிலே சிலர் ''கூலி'' என்று கூப்பிடுகிறார்கள். அதைவிட நான் சொல்வது நன்றாக இருக்கிறது.

"எங்களைப் பார்க்கும்பொழுது அவர்களுக்கு அந்தக் கூலிதான் நினைவுக்கு வருகிறது. அதனால்தான் அவர்கள் அப்படிக் கூப்பிடுகிறார்கள். அது இந்த நாட்டில் மனிதனை மதிப்பிடும் நல்லமுறை."

"என் கண்ணுக்கு உன் சுமைதான் நினைவுக்கு வருகிறது. அதனால்தான் அப்படிச் சொன்னேன்."

"போர்ட்டர் என்றால்"

"அதற்கும் சுமைதாங்கி என்றுதான் பொருள். அவன் தொழிலால் அழைக்கின்றான். இவன் தான் கொடுக்கின்ற கூலியைக் கொண்டு அழைக்கின்றான். இது இந்த நாட்டின் மனோபாவம். மனிதனை மனிதனாக மதிக்காத சமுதாயத்தின் பார்வை இப்படித்தான் இருக்கும்" என்றேன்.

"கஷ்டப்படாமல் யார் வாழ முடிகிறது?"

"கஷ்டப்படலாம். ஆனால் அவமதிப்பை எப்படித் தாங்கி கொள்ள முடியும்."

"இந்தப் பயணிகள் மதிப்பு யாருக்கு வேண்டும். அவர்கள் கூலி என்று அழைக்கிறார்களே. அந்தக் கூலி யையே சரியாகக் கொடுத்தால் போதும். அந்த வேலை கிடைத்தால் போதும்."

"அதிகமாகச் சம்பாதிக்க வேண்டும் என்ற ஆசை வராதா?"

"இந்த ஒரு தொழிலில்தான் அந்த ஆசை கிடையாது. சுமந்தால்தானே கூலி. ஆனால் நாங்கள் சேர்த்து வைப்போம்" என்று தன் வாழ்க்கையின் அடிப்படையை விளக்கினார். மேலும் தொடர்ந்தார்.

"நாங்கள் கிராமங்களிலிருந்து குடியேறியவர்கள். படிப்பு அதிகமாகப் படிக்கவில்லை. அங்கே விவசாயம் செய்து அலுத்துவிட்டவர்கள். அதனால் எந்தப் பயனும் காண

வில்லை. காசு சம்பாதிப்பதற்கு நாங்கள் வேறு என்ன தொழில் கற்றிருக்கிறோம். மூட்டை தூக்க யாரும் கற்றுத் தர வேண்டியது இல்லை. வாழ்க்கையே சுமை என்று சொல்வார்கள். அதில் உழல்கின்ற எங்களுக்கு மூட்டை தூக்கு வது சுமையாகத் தெரியவில்லை. நறுக்கென்று நாலு காசு சம்பாதிக்க முடிகிறது. ஆரம்பத்தில் இங்கே இடம் பிடிக்கிறது. கொஞ்சம் கஷ்டம். அதுக்குக்கூட இப்போது கொஞ்சம் அதிகம் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்தப் ''பில்லை'' வாங்க. அதை வாங்கிவிட்டால் அப்புறம் எந்தக் கவலையும் இல்லை.''

''உம் பிள்ளைகளை இந்தத் தொழிலுக்கு விடுவீர்களா?''

''நீ என்னப்பா குமுதம் ஆசிரியர் பேட்டி காண்பது போலக் கேட்கிறாயே, இப்பதான் வருணாசிரம தர்மமே மறைந்து விடுகிறது. அவனவன் தன் தொழிலைத் தவிர மற்றவர் தொழிலைக் கவனிக்கிறான். அவனவன் தன் பிள்ளைகளைப் படிக்க வைத்து முன்னுக்கு வருகிறான். நீ போய்.''

''எந்தச் சுமைதாங்கியும் தன் பிள்ளையை அந்தத் தொழி லுக்கு அனுப்பமாட்டான் அல்லவா?''

''அப்படி முழுவதும் சொல்லவும் முடியாது. வேறு எதுக்கும் உதவாத பிள்ளையை உருப்படியாக ஏதாவது தொழிலிலே விட வேண்டும் என்றால் இதுதானே கிடைக்கிறது.''

''உங்களுக்கும் சீருடை கொடுத்திருக்கிறார்களே''

''இந்த முரட்டுச் சட்டை அழுக்குப் படியாமல் இருக்க, சிகப்பு; போகிறவர்களை நிறுத்தி வைக்க''

''Red Signal என்று சொல்.''

இதைச் சொல்லும்போது மறுபடியும் அந்தச் சிகப்பு நிறம் நினைவுக்கு வந்தது. அந்தச் சிவப்புத் துணி மறுபடியும் இந்த

நாடு சிவப்பு நிறம் அடையாமலே மாற்றத்தை உண்டாக்க முடியும் என்ற எண்ணத்தை என்னுள் ஓடச் செய்தது. தொழிலாளி சிகப்புக் கொடியைக் காட்டுவதுபோல எனக்குக் காட்சி அளித்தது. தொழிலாளி மற்றவர்கள் தன்னைக் கவனிக்கும் படி காட்டுகின்ற சைகையாக அது இருந்தது. அந்தச் சிகப்பு மற்றொரு பொருளை நினைவுப்படுத்தியது. சிவப்பு விளக்கு ரயிலிலே வண்டியை நிறுத்துவதற்காகப் பயன்படுத்தப்படு கிற அந்தச் சிகப்பு விளக்கு அல்ல; ஆடவர்களைக் கவர்ந்து அழைக்கின்ற விளக்கு. "சிவப்பு விளக்கு" எரியுமா என்ன? இரவு படுக்கையறையில் விளக்குச் சிகப்பாகத்தான் எரியும்.

அங்கே இருந்துதான் அவள் தப்பித்து வந்தாள் என்று நினைக்கிறேன். அவளும் care of பிளாட்பாரம் ஆகி விட்டாள். அவள் யார் கூப்பிட்டாலும் வருவாள். அதாவது எந்தச் சின்ன வேலை சொன்னாலும் செய்வாள். பக்கத்திலே இருக்கிற கடைக்காரர்கள் எடுபிடி வேலை சொல்ல அவற்றைச் செய்வாள். அவளை ஏதாவது கிண்டல் செய்வார்கள். அவளுக்கு ஒரு "டீ" வாங்கிக் கொடுத்தால் போதும்! அவள் முகத்தில் கொள்ளை இன்பம் காண முடியும்.

"ஏன்'மே ஓடி வந்து விட்டாய்?" என்று சாதாரணமாகக் கேட்டார்கள்.

"மா'''என்பது அவர்களைப் பொறுத்தவரை 'மே' ஆயிற்று.

அவள் ஒரு காலத்தில் மாவாகத்தான் இருந்திருக்கிறாள். பின்னால்தான் மே ஆனாள்.

நான் மட்டும் அவளை 'மா' என்றுதான் கூப்பிட்டேன். அதனால் அவள் என்னிடம் ரொம்ப மரியாதை காட்டினாள்.

சுமைதாங்கி நண்பர் என்னை அபாய அறிவிப்புச் செய்து வைத்தார். இந்தப் பிளாட்பாரத்தில் சிலதுகள் வரும்; நீ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். 'சீப்பாக'க் கிடைக்கும். சீப்பாகப் போகக் கூடாது என்று சொல்லி இருக்கிறார்.

எனக்கு அவளிடம் எந்தவிதமான வெறுப்பும் தோன்ற வில்லை. என்னைப்போலவே அவளும் ஒரு நொண்டி தானே. நான் காலை இழந்தேன். அவள் ஏதோ ஒன்றை இழந்தாள். அவ்வளவுதானே வித்தியாசம். நான் குடும்பத்தில் ஒதுக்கப்பட்டேன். அவள் சமூகத்தில் ஒதுக்கப்பட்டாள்.

அவள் என்னிடம் நெருங்குவாள். நானும் அவளிடம் என்னையும் அறியாமல் ஒதுங்கினேன்.

இந்த உறவுதான் என்னை அந்த இடத்தைவிட்டு நீங்க மனம் இடம் கொடுக்காமல் செய்து விட்டது. அவள் சொன்னாள். "நானும் முதன் முதலில் இதே பிளாட்பாரத் தில்தான் இறங்கினேன். ஏன் ஊரைவிட்டு வந்து விட்டேன் தெரியுமா?"

"அதை நான் தெரிந்து கொள்ள வேண்டுமா" என்று கேட்டேன்.

"சரி! நான் சொல்லாமல் இருக்க முடியவில்லை."

"எனக்குத் தெரியும் பிழைப்பற்றவர்கள்தான் இந்த நகரங் களுக்குக் குடி வருகிறார்கள்" என்றேன்.

"நான் ஒரு பிழைப்புக் கெட்டவள் என்று நினைக்கிறாயா?"

"அப்படி நினைக்கவில்லை. எங்கே இருந்தாலும் உன் ஒருத்திக்குத்தானா சோறு கிடைக்காமல் போய்விடும்."

"பின் ஏன் ஓடி வந்து விட்டேன் தெரியுமா?"

"சரி சொல்லித் தொலை"

"எனக்கு வீட்டில் இருக்க முடியவில்லை"

"அப்படின்னா சினிமாவிலே சேரலாம் என்று நினைத்து வந்து விட்டாயா?"

"அதெல்லாம் இல்லை"

''பின்?''

''வாழ்க்கையைத் தேடி''

''உனக்கு என்ன வேலை தெரியும்?''

''அது இல்லை. பச்சையாகச் சொல்லட்டுமா? ஆம்படை யானைத் தேடி.''

''ஓ! அவர் இங்கு என்ன உத்தியோகஸ்தர்?''

''இல்லை''

''கூலியாளா?''

''எவனாவது ஒருவன் வேண்டும் அவ்வளவுதான். அதை நீங்கள் மாப்பிள்ளை தேடி என்பீர்கள்; நான் அதற்கு அடுத்த நிலையைக் குறிப்பிட்டேன். அவ்வளவு தான்''

அவளுக்கு ஒரு மாப்பிள்ளையைத் தேடித் தரமுடியாமல் போய்விட்டது என்பதை உணர்ந்தேன். சே! இவ்வளவு பச்சையாகப் பேசுவாள் என்று எதிர்பார்க்கவில்லை.

''இப்படி உண்மை சொல்கிறேனே என்று பயப் படுகிறாயா?''

''உண்மையைக் கண்டு சில சமயம் பயந்துதான் ஆக வேண்டியிருக்கிறது.''

''நான் இருந்த விடுதி அப்படி. அங்கே போன பிறகு கொஞ்சம் வெளிப்படையாகப் பேசிப் பழக்கம்!''

''இப்படிக்கூட துணிந்து கெட முடியுமா.''

''கெடுவது எல்லாம் துணிந்து தான்'' என்று சொன்னாள்.

''நீங்கள் நினைக்கிறீர்கள். அந்த வீட்டில் கலியாணம் காட்சி எதுவுமில்லாமல் அப்படியே காலம் கடத்த முடியும் என்று நினைக்கிறீர்களா. என் பெற்றோர்கள் கைவிட்ட பிறகுதான் எனக்கு இந்தத் துணிச்சல் வந்து விட்டது.''

என்னால் இந்த உண்மையைக் கிரகித்துக் கொள்ள முடிய வில்லை.

"உங்களுக்குத் தெரியாது; இப்போது இந்த நாட்டிலே எல்லோரும் நினைத்துப் பார்க்க வேண்டிய ஒன்று. இன்று எவ்வளவு பேர் ஆபீசுக்குப் போகிறார்கள். அவர்கள் வாழ்க்கையில் எவ்வளவு துன்பப்படுகிறார்கள் என்று உங்க ளுக்குத் தெரியாது. அவர்கள் முகப்பவுடரும் சிகப்பு வாயும் அவர்களைப் பொலிவு உடையவர்களைப் போலக் காணச் செய்கிறது. அவர்கள் பலபேர் வாழ்க்கையில் வெறுப்பைத் தவிர வேறு எதையும் கண்டதில்லை."

"ஆமாம். நீ உன்னை வைத்துக் கொண்டு பேசுகிறாய். அவர்களுக்காவது தொழில் இருக்கிறது. உனக்கு? இது எவ்வ ளவு பெரிய தவறு?"

"தவறே இல்லை. நான் ஒருத்தி கெட்டுவிட்டதால் இந்த உலகமே கெட்டு விட்டது என்று நினைக்கக் கூடாது. இ... ஆண்கள் கட்டுப்பாடாக வாழ முடியாது. அவர்கள் தவறும் செய்யக் கூடாது. பிறன் மனைவியை நெஞ்சாலும் கருதக் கூடாது. அக்கம் பக்கத்தில் யாரையும் கெடுக்கக் கூடாது மனைவி முரண்பாடு கொண்டாலும் அவளுக்கு அடிமையாக வேண்டும். அவள் இட்டது தான் பிச்சை. எவ்வளவோ சமூகச் சிக்கல்களை நாங்கள் தவிர்க்க முடிகிறது. யார் வந்தார்கள் எப்பொழுது வந்தார்கள்; ஏன் வந்தார்கள் என்ற கேள்விகளை நாங்கள் கேட்டதே இல்லை. அவர்களுக்கு வேண்டியது இந்த உடம்பு. அவர்கள் உழைப்பை நாங்கள் வாங்கிக் கொண்டு அவர்களிடம் பணமும் பெற்றுக் கொள்ளுகிற தொழில் ஒன்று இருக்கிறது என்றால் இதுதான். இதில் ஒன்றும் எங்களுக்குக் கஷ்டம் இல்லை. அவன் வெறிக்கு நாங்கள் இணங்குகிறோம். அவனிடத்தில் நாங்கள் அன்பு செலுத்துவதுபோல் நடிக்க வேண்டும். அவனை விரும்புவதாகச் சொல்ல வேண்டும். அதற்குக்கூட சிலபேர் காத்துக் கொண்டிருப்பது இல்லை."

''மனிதன் ஒழுங்கு கட்டுப்பாடு என்ற சொற்களால் ரொம்பவும் வேதனை அடைகிறான். எந்தத் தப்பும் செய்யமல் இருந்தால் அவனுக்கே சலிப்பு ஏற்பட்டு விடுகிறது. மனிதன் நல்ல மனம் பெற நாங்கள் மிக அவசியம். அது பல பேருக்குத் தெரியாது. ஆனால் யார் இங்கே மற்றவர்களுக்காகப் பயன்படுகிறார்களோ அவர்களைச் சமுதாயம் ஒதுக்குவது வெறுப்பது இயல்புதான். நாங்கள் இந்தத் தொழிலைப் பகிரங்கமாகச் செய்வது இல்லை.''

''எங்களை அறிமுகப்படுத்தும் பொழுது இடைத் தரகர் எங்களைக் குடும்பப் பெண் என்று தான் அறிமுகப்படுத்துவார்கள். அதாவது புதிதாக வந்தவர்கள் என்றுதான் சொல்லுவார்கள். அப்படிச் சொன்னால்தான் எங்களுக்கே 'ரேட்டு' அதிகம். இதிலே ரொம்ப நடிப்பு வேண்டியிருக்கிறது. ரொம்பவும் வயதான 'இளைஞர்கள்' அவர்களும் வருவார்கள். அவர்களால் எங்கள் உடம்பு கெடுவது இல்லை. மிக நல்லவர்கள். அவர்களிடத்தில் அபரிதமான அன்பைச் செலுத்துவோம். அவர்களுக்குத் தங்களுக்குத் தக்க வாலிபம் இல்லையே என்ற மனச் சிக்கலோடு நெருங்குவார்கள். நாங்கள் மிகவும் அவர்களால் கவரப்பட்டவர்கள் போல் நடிக்க வேண்டும்.''

''இதிலே ஒரு கஷ்டம் இருக்கிறது. நாங்கள் சம்பாதிப்பதைவிட எங்களை வைத்து நடத்துகிறவர்கள் ரொம்பவும் வசதி பெற்றுவிடுகிறார்கள். ஏனென்றால் நாங்கள் அஞ்சி அஞ்சி இத்தொழிலை நடத்த வேண்டி இருக்கிறது. அவர்கள் அதை நன்றாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். நாங்கள் போலீசுக்கு அஞ்ச வேண்டியிருக்கிறது. சில சமயம் அவர்கள் எங்களை வேட்டையாடி கோர்ட்டில் நிறுத்தி விடுவார்கள்''

''நாங்கள் எங்கள் ஆடை வாங்குவதற்காக மானத்தை விற்கிறோம்'' என்று எங்கோ ஒரு கவிதை படித்து இருக்கிறேன். அவள் பேசும்பொழுது அந்தக் கவிதை நினைவுக்கு வந்தது.

மேலும் தொடர்ந்தாள். "வெளிச்சத்துக்கு வரும்பொழுது தான் கூச்சம் ஏற்படும். இதில் வேடிக்கை என்ன தெரியுமா? ஒரு மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்னால் நான் ஒருமுறை நிறுத்தப் பட்டேன். அவரை எப்பொழுதோ இதற்கு முன் பார்த்த நினைவு. அவரைப் பார்த்து நான் சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை. நான் தலை கவிழ்க்கவில்லை. அவர் தலை கவிழ்த்துக் கொண்டே கேட்டார்.

"நீ விபச்சார விடுதியில் இருந்ததுண்டா?"

"அது விபசார விடுதி அல்ல; அங்கு வருகிறவர்கள் தான் அப்படி அதை ஆக்கி விடுகிறார்கள்" என்று அவருக்குப் பதில் சொன்னேன்."

"வருகிறவர்களைக் கேட்கவில்லை. இருக்கிறவர் களைத்தான் கேட்கிறேன்"

"வருகிறவர்கள் இருக்கிறவர்கள் இருவரும் சேர்ந்தால் தானே அது நீங்கள் சொல்லும் விடுதியாகிறது" என்று சொன்னேன்."

"அவர் அப்பொழுது என்னிடம் பேசியபோது நீங்கள் யார் என்று கேட்டது இல்லை. அவர் மட்டும் இப்பொழுது என் பெயர் தொழில் இதெல்லாம் விசாரித்தார்."

"பிறகு அவரே முடிவுக்கு வந்தார். உன்னைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லை. நல்ல பெண்ணாக இருக்கிறாய். இனிமேல் இந்தத் தவறு செய்யமாட்டாய் என்று நினைக் கிறேன் என்று கூறி விடுதலை தந்தார்."

"நல்ல பெண்ணாக இருக்கிறாய் என்று சொல்லிவிட்டு இனிமேல் தவறு செய்யாதே என்று கூறுவதில் ஒருமுரண் பாடு இருப்பதை உணர்ந்தேன்."

"வாழ்க்கை முரண்பாடு கொண்டதுதானே. அவரும் அதற்கு விதிவிலக்கல்ல என்பதை அறிந்து கொண்டேன்."

அவள் தன் அனுபவங்களில் சிலவற்றை மட்டும் சொன்னாள். அதிகம் சொல்லி இருப்பாள். நான் அவளை விரும்ப வேண்டும் என்ற அக்கறை அவளுக்கு இருந்தது.

''நீ என்னைக் காதலிக்க முடியுமா?'' என்று துணிந்து கேட்டேன்.

''நீ அந்த விடுதிக்கு வந்திருந்தால் இந்த வார்த்தையைச் சுலபமாகச் சொல்லி இருப்பேன். அங்கே அப்படித்தான் சொல்ல வேண்டும்'' என்றாள்.

''அப்பொழுது நீ''

''அதை வெறுத்துத்தானே வெளியேறி விட்டேன். அது ஒரு அனுபவம். ஒரு அனுபவத்தைப் பெற்ற பிறகு மறுப டியும் அதைப் பெற நான் விரும்பவில்லை''.

சிலபேர் அனுபவத்தையே முதலீடாக வைத்துப் பேசு வதைப் பார்த்திருக்கிறேன். திறமை இல்லாவிட்டாலும் அனுபவசாலிகளும் தொழிலில் உயர்வு கிடைக்கிறது. இந்த ஒரு இடத்தில் மட்டும் அனுபவசாலிக்கு மதிப்பு இல்லாததை உணர்ந்தேன்.

எங்கள் அப்பா அச்சுத் தொழில் நடத்தும்போது ஒரு சில ஆசிரியர்கள் புத்தகம் அச்சிட எடுத்து வருவார்கள். அவர்கள் சொல்லுவார்கள் தாம் முப்பத்தைந்து வருடம் ஒரே தொழில் நடத்துவதாகவும், தனக்கு மிஞ்சி யாரும் இல்லை என்றும் சொல்லிக் கொள்வார்கள். அதைவிட சில அனுபவசாலிகள் இருக்கிறார்கள். வயதானாலும் வேலையை விடமாட்டார்கள். அவர்களுக்கு இளைஞர்கள் மீது நம்பிக்கை ஏற்படுவதில்லை.

அவர்களைப்போல் பேசாமல் அந்த அனுபவத்தையே வெறுக்கிற புத்திசாலியாக அவள் காணப்பட்டாள்.

''அப்படியானால் என்னை''

''உனக்கும் மற்றவர்களுக்கும் ஒரு வித்தியாசத்தைப் பார்த்தேன். நீ ஒருவன்தான் என்னை 'மா' என்று மதிப்பு

வைத்து அழைத்தாய். இங்கே மற்றவர்கள் எல்லாம் என்னை ஆடு மேய்த்தார்கள். அவர்கள் பார்வையில் நான் வேறு; உங்களுக்கு நான் வாழ்க்கை நண்பர். அதாவது உங்களை எனக்கு வேண்டிய ஒருவராக ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் நீங்கள் எனக்கு வேண்டியது இல்லை'' என்றாள்.

என் தங்கையைப் பிரிந்த பிரிவை அவள் சரிப்படுத்தி விட்டாள். இந்தப் பரந்த உலகில் தம்பியர்கள் இருக்கிறார்கள். தங்கைமார்களும் இருக்கிறார்கள் என்பதை உணர முடிந்தது.

அவளைப் பற்றி எல்லோருக்கும் தெரியும். ஆனால், அவள் வம்புக்கு யாரும் போக மாட்டார்கள். அந்தச் சுமை தாங்கி நண்பர் இருக்கிறாரே அவர் அந்த மாதிரி பிரச்சாரம் செய்து வைத்திருக்கிறார். அந்தப் பயத்தினாலேயே அவ ளிடம் யாரும் நெருங்குவதில்லை. அவள் எனக்குத் தெரிந்த யாரையும் அந்த விபத்துக்குள் ஆக்கியது இல்லை.

ஒரு நாள் துணிந்து கேட்டேன். ''இப்படி சொல்லுகிறார் களே'' என்றேன்,

''சொல்லட்டுமே அந்த அச்சம்தான் மற்றவர்கள் என்னை அணுகாமல் காப்பாற்றுகிறது'' என்று சொன்னாள்.

கால் இல்லாத எனக்கு எவ்வளவோ உதவியாக இருந்தாள். இரண்டு தங்கைகளை ஒப்பிட்டுப் பார்க்கிறேன். அவள் பத்தாயிரம் தந்தால்தான் போவேன் என்று பிடிவாதம் செய்தாள். இவள் பத்துக்காசு கொடுத்தால்கூட என்னிட மிருந்து வாங்கமாட்டாள். அவள் காசு மட்டும் யாரிடமும் வாங்கமாட்டாள். அந்த நல்ல பழக்கம் அவளிடம் இருந்தது. அதைக் கையாலும் தொடமாட்டாள். 'நாஸ்தா' வாங்கித் தந்தால் போதும்; சில சமயம் அவளிடம் வேறு வழியில் லாமல் காசும் நடமாடும். அதைப் பத்திரப்படுத்த வேண்டும் என்ற அக்கரையே அவளிடம் காண முடியவில்லை.

''இப்பொழுது உன்னை உங்கள் வீட்டார் தேட மாட்டார் களா?''

"அந்த நினைவே அவர்களை விட்டு அகன்று விட்டது. அதை மாற்றுவதற்கு அவர்கள் ஒரு சடங்கையே செய்து விட்டார்கள். ஐயரைக் கூப்பிட்டுப் புண்ணியவசனம் செய்து விட்டார்களாம். அதாவது நான் அவர்களைப் பொறுத்தவரை செத்தாருள் வைக்கப்பட்டு விட்டேன். அதாவது என் நினைவே அவர்களுக்கு வரக்கூடாது என்பது அவர்கள் எண்ணம்."

என் உடன்பிறந்த தங்கையைப் பற்றி மட்டும் எனக்கு எங்கே எண்ணம் வருகிறது. ஆனால் மறைந்துவிடும். எனக்குத் தங்கை இருக்கிறாள் என்று நினைக்கும்பொழுது அவளுக்காக ஒரு கால் என்ன இரண்டு கால்களையும் இழக்கத் தயார். அவனுக்கு உழைத்ததைவிட அவளுக்குக் கொடுத் ததில் எங்களுக்கு ஒரு மனநிறைவு இருக்கிறு. என் தாய்க்கு அவள்தானே ஆதரவு. வந்தவள் தம்பிக்கு ஆதரவு நிச்சயம். அவன் எங்கள் குடும்பத்துக்கு ஆதரவாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவனை அப்படியே விடுவதால் பயன் இல்லை. என் தங்கையை வைத்தாவது அவன் காப்பாற்றட் டுமே.

அப்பா ஒரு அச்சுத் தொழிலாளியாம். மிகவும் கேவல மாக நினைக்கிறான். அவ்வாறு அவள் அவனை நினைக்கும்படி செய்து விட்டாள்.

ஒருநாள் அவர் வயிற்று வலியால் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தார். நான்தான் நொண்டியாகி விட்டேன். எப்படி அவருக்கு ஓடி ஆடி உதவி செய்ய முடியும். யாரோ அவ னுக்குப் போன் செய்தார்களாம். அவர் போய்விடுவார் என்று சொன்னார்களாம். மகன் கடமை என்ன என்பதை அவன் நன்கு உணர்ந்தவன். 'கொள்ளி வைக்க ஒரு புள்ளை வேண்டும்' என்ற பழமொழி தோன்றிய நாட்டில் அவன் தன் கடமையை உணராமலா இருப்பான். அவன் காரில் வேகமாக வந்தான். மருத்துவ மனைக்கு அழைத்துப் போனான்.

அவனோடு படித்தவனாம். யாரோ டாக்டர் அவனிடம் அழைத்துச் சென்றான்; அவன் அவ்வாறு "யார் இந்தக் கிழம்?" என்று கேட்டானாம். அவர் அழுக்குப் படிந்த ஆடை அவனை எண்ணச் செய்திருக்கிறது. அவருக்கு அவன் பிறக்க வில்லை என்பதை அறிந்தான். 'எங்க வீட்டு வேலையாள்' என்று நம்பும்படி அறிமுகம் செய்தான்.

"உங்களைப் போன்ற தாராள மனப்பான்மை இந்த நாட்டில் வளர வேண்டும். உண்மையிலேயே இந்த நாடு முன்னேறிவிடும். ஒரு தொழிலாளிக்காகத் தாங்கள் இவ்வளவு இரக்கம் காட்டுகிறீர்கள்" என்று தத்துவம் பேசினார். அந்த மருத்துவ நிபுணர்.

இறைவன் என் கால்களை எடுத்துக் கொண்டார். அதைப் போலவே என் அப்பாவின் காதுகளைச் செவிடாக ஆக்கி யிருக்கக் கூடாதா? அதை அவரால் தாங்கிக் கொள்ள முடிய வில்லை. 'தன்னை ஒரு தொழிலாளி' என்று குறிப்பிட்டதை அந்த முதலாளியால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

"டே! என் மகனா நீ" என்று கேட்டார். அவர் சந்தே கத்தை அவன் தீர்த்து வைக்க நினைக்கவில்லை. மேலும் தொடர்ந்தார்.

"பெரியவரே சும்மா இருங்க இது ஆஸ்பத்திரி." என்றாள் அங்கிருந்த நர்சு.

"இது என்ன மனநோய் ஆஸ்பத்திரியா" என்று அப்பா அங்கிருந்தவர்களைக் கேட்டார்.

"இது வயிற்று நோய் ஆஸ்பத்திரி" என்று அங்கு வந்த மனநோயாளி ஒருவன் சொன்னான். அதாவது அங்கு வருகிற வர்கள் அந்த ஆஸ்பத்திரியின் சாப்பாட்டைச் சாப்பிட்டால் வயிற்று நோய் வரும் என்பது அவன் விளக்கம்.

அவன் கொஞ்சம் 'லூஸ்' என்று அங்கிருந்தவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். அவன் எதையும் மறைத்து வைக்க

மாட்டானாம். தப்பாக நினைக்க வேண்டாம். மனதில் எதையும் வைத்துக் கொள்ள மாட்டானாம். அந்த ஆஸ்பத்தி ரியின் மருந்துகள் திருடு போவதில் இருந்து டாக்டர்கள் பிரைவேட் பிராக்டிக்ஸ் செய்து கொள்ளையடிக்கும் வரை ஒன்றுகூட மறைக்காமல் பேசிக் கொண்டிருப்பானாம்.

அவன் இப்படிப் பேசுவதாலேயே அவனை 'டிஸ்சார்ஜ்' செய்வது இல்லையாம் வெளியே போனால் இதையே உளறிக் கொண்டு இருப்பான் என்பதற்காக. அவன் ஒரு விசித் திரமான மனிதன். அவனைப் பற்றி நானும் நிரம்பக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவனுக்குப் புறம்கூறுவதே தொழில். இப்படி எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அவனைப் பற்றி ஏன் நான் புறம்கூற வேண்டும். பின்னால் அப்பா ஒருசமயம் யாரிடமோ சொன்னாராம். அவர் என்னிடம் வந்து போனார். அதற்கப்புறம் தன் மகன் வீட்டுக்கு எந்தக் காரணத்திற்கும் போவது இல்லை என்று தீர்மானித்து விட்டாராம்.

'டேய்! உனக்குக் கருமாதி செய்துவிட்டேன்'' என்று வயிறு எரிந்து பேசினாராம். அதற்கப்புறம் அவர் நெஞ்சில் எழுந்த கனல் அவியவே இல்லை. ''இரண்டு பிள்ளைகளைப் பெற்றேன்; ஒருவன் படித்தான்; பண்பு இழந்தான்; மற்றொ ருவன் காலை உடைத்துக் கொண்டு ஊர் சுற்றுகிறான். யாரால் எனக்கு நன்மை'' என்ற கேள்வியை விடாமல் அவர் கேட்டுக் கொண்டு இருக்கிறார்.

அப்பாவுக்கு இப்பொழுது கண் ''காட்டிராக்ட்''. எழுத்தைப் பார்க்க முடிவதில்லை. ஆறுமாதம் போனால்தான் 'பொறை' எடுப்பார்களாம். அதுவரை குருடாகத்தான் வாழ வேண்டுமாம். வைத்தியர் அப்படிச் சொல்லி விட்டார். கம்பாஸ்டர் வேலைக்கு அவர் தற்காலிகமாக லாயக்கற்றவர் ஆகிவிட்டார். பாவம், பழைய பாட்டு ஒன்று நினைவுக்கு வந்தது.

''மூன்று குளம் வெட்டினேன்
அதில் இரண்டு குளம் பாழ்
ஒன்றிலே தண்ணியே இல்லை''

அந்தப் பாட்டுதான் எனக்கு கவனம் வருகிறது. நான் எந்தக் குளம் என்பதே எனக்குத் தெரியவில்லை.

இந்த நாட்டிலே முதியவர்கள் ஒதுக்கப்பட்டவர்கள் ஆகி விட்டனர். என் அப்பாவைப் பற்றி நினைக்கும்போது அந்த எண்ணம்தான் வந்தது. இளைஞர்கள் அமெரிக்காவையும் மேல் நாட்டையும் படிக்கிறார்கள். அவனவன் மணம் செய்து கொண்டதும் தனிக்குடித்தனம் போய் விடுகிறார்கள். கூட்டுக் குடும்பங்கள் சிதறிப் போகின்றன. வளர்ச்சிதான்; இல்லை என்று சொல்லவில்லை. இந்த முதியவர்களை யார் கவனிப் பார்கள். காலத்துக்கும் உழைத்த அந்தக் கரங்களுக்கு ஓய்வு வேண்டாமா. அந்தக் கடமையை அவன் மறந்து விட்டான்.

மனைவிக்கு உரிமை தரவேண்டும். அதனால் ஒருவன் தன் உரிமையை இழக்க வேண்டுமா. பெண் சில நாளாவது தாய்வீட்டுக்குச் சென்று தன் பெற்றோர்களைப் பார்த்து வரு கிறாள். அவளுக்கு இந்த உணர்வு இருக்கிறது. அந்த உணர்வு இவனுக்கு இருக்க வேண்டாமா. அவள் தன் கடமையைச் செய்கிறாள். அவன் தன் கடமையை மறந்து விட்டான்.

தந்தை மகனுக்குச் செய்யும் உதவி அவனை முன்னுக்குக் கொண்டு வருவது. அவன் புகழில் தன் வாழ்வைக் காண்கிறான். ஆனால் அதே தந்தையைத் தான் தன் அப்பன் என்று சொல்லிக் கொள்ள அவன் வெட்கப்பட்டான். அப்புறம் இதைப் போலவே பலர் இருக்கின்றார்கள் என்பதைத் தெரிந்து கொண்டேன்.

அவன் என்ன செய்வான். அவன் வாழ்வின் உச்சியில் ஏறிவிட்டால் மறுபடியும் கீழே பார்க்கும்பொழுது எல்லாரும் சின்னவர்களாகத்தான் தெரிகிறார்கள். யானை எல்லாம் எரு மையாகத் தெரியும். பசுக்கள் எல்லாம் ஆடுகளாகத் தெரியும்.

ரொம்பவும் மேலே போய்விட்டால் மனிதன் மனிதனாகவே தெரியாது. சிற்றெறும்புகள் ஊர்வதைப் போலத் தெரியும். பலபேர் தம் சொந்தக்காரர்களைச் சின்ன வேலையில் அமர்த்த மாட்டார்கள். அது அவருக்கு அவமானமாம். அதாவது தான் ஜமீன்தார் பரம்பரையிலே வந்தவன் என்று மற்றவர்கள் நினைத்துக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகிறான்.

அவன் பள்ளிக்கூடம் படிக்கும்பொழுதே அம்மா சில சமயம் சோறு எடுத்துப் போவார்கள். அவனுக்கு வெட்கம். சாப்பாட்டுக்காரி என்று சொல்லியிருக்கிறான். அதற்காக அம்மா கவலைப்பட்டது இல்லை. அவள் உழைத்தாள். அத னால் அவள் சந்தோஷப்பட்டாள். சமுதாயத்தில் அவன் வாழத் தெரிந்தவன் என்பதற்காக அவள் மகிழ்ச்சி அடைந் தாள். அப்பாவுக்கு அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவருக்குத் 'தாய் மனம்' இல்லை. தன் மகனின் கவுரவத்துக் காகத் தானே அப்படிச் சொல்லிக் கொள்கிறான். சட்டை துணி போல இந்தப் போலிக் கவுரவம் இருக்கிறது என்பதை அவர் எண்ணிப் பார்க்கவில்லை. எதற்காகப் பிரமாதமாக உடுத்துகி றார்கள். அழகுக்காக இல்லை. கவுரவுத்துக்குத்தான். தான் பெரிய ஆபீஸர் என்றால் கோட்டும் சூட்டும் தேவை என்று நினைக்கிறான். கலியாணத்திலே பிறர் மதிக்க வேண்டும் என்பதற்காகத் தாய்மார்கள் உடுத்திக் கொண்டு வருகிறார்கள். பாவம் ஒழிந்து போகட்டும். ஒரு நாளைக்குத்தானே. மற்ற நாள் எல்லாம் அவர்கள் இந்த நாட்டின் பொது உடை யில்தான் காணப்படுகிறார்கள். அதுவும் இந்தச் சீருடை வந்து குழந்தைகளின் மனத்திலேயே உடையின் மேல் இருக்கும் மோகத்தையும் வேகத்தையும் குறைத்து விட்டது.

இந்தக் கொலு பொம்மை நாட்களில் இவர்களும் அந்தப் பொம்மைகளைப் போல அழகாக உடுத்துகிறார்கள். பார்க்க ரம்மியமான காட்சிகள்.

நாம் ஒன்று நினைக்க மற்றவர்கள் வேறுவிதமாக நினைக்கத் தொடங்கி விட்டார்கள். நான் அந்தப்

பெண்ணோடு சுற்றுகிறேனாம். அவள்தான் என்னைச் சுற்றி வருகிறாள். நடைவாசியை (அதுதான் பிளாட்பாரம் என்பதற்கு அழகான மொழி பெயர்ப்பு) நான் துணைவியாக்கிக் கொண்டேனாம். அவள் எத்தனையோ கைமாறி விட்டாளாம். விடுதி கண்டவளாம். கன்னாபின்னா என்று பேசிக் கொள்கிறார்கள். அதையும் தாங்கிக் கொள்ள வேண்டியதுதான். அவள் எனக்குத் துணையாக இருக்கிறாள் என்பதற்கு நான் ஏன் குபேரனின் மகனா! அல்லது பட்டுக்கோட்டை ஜமீன்தாரின் பெயரனா. சாதாரண அச்சுத் தொழிலாளியின் அச்சுத்தானே. என் குலப் பெருமையைப் பற்றிப் பேசுவதற்கு எனக்கு என்ன இருக்கிறது. எனக்குப் பெருமை இருந்தால்தானே என் குலத்துக்குப் பெருமையைக் கூட்ட முடியும். கால் இழந்த நொண்டி; நாடோடி நிலையில் வாழ்கிறேன்.

சுமைதாங்கி நண்பர் சொன்னதுபோல் ஏன் தொழில் நடத்தக் கூடாது; அப்பாவுக்கு என்னைத் தவிர யார் ஆதரவு இருக்கிறார்கள். அதே சமயத்தில் நொண்டிக்கும் ஒரு கால் கட்டாக அந்த நடைபாதை வந்து சுற்றிக் கொண்டாள். அவளை நான் வீட்டுக்கு அழைத்துப் போக முடியுமா. அவள் பழைய வரலாறு. அதுவும் நினைத்துப் பார்க்க வேண்டிய ஒன்று. அப்பாவுக்கு ரோஷம் பொத்துக்கொண்டு வரும். கண்ட கசமாலம் எல்லாம் வீட்டுக்குள்ளே நுழைந்து விட்டது என்று பேசி விடுவார். அவள் 'கசமாலம்தான்'. அதே பேர்தான் நிலைத்திருக்கட்டுமே. அவளை நினைக்கும்பொழுது 'கம்சலை' என்ற கதாபாத்திரம் நினைவுக்கு வருகிறாள்.

எங்களுக்கு வேறு என்ன வேலை. கண்ட புத்தகங்களைப் படிப்பதுதானே வேலை. இந்தப் பசங்க சினிமா பார்த்தாலும் பார்க்கிறாங்க. ஒவ்வொரு பாட்டுப் புத்தகத்தையும் வாங்கிக் கொண்டு வந்து விடறானுங்க. அதிலேகூட கவிதை இருக்கு; அவனுங்க நம்புறானுங்க. நான் அச்சாபீஸிலே பார்த்திருக்கிறேன். அவனவன் 'புதுக்கவிதை' என்று

அச்சடிக்கக் கொண்டு வந்து விடுவாங்க. ஆள் ஒல்லியாக இருப்பார்கள். ஆனால் கவிஞர்கள் என்று சொல்லிக் கொள்வார்கள். கவிஞர்கள் என்றால் பாரதி போலத் தலைப் பாகை கட்டிக் கொண்டு இருப்பார்கள் என்று நினைத்த உண்டு. பாரதிதாசனைப் படத்திலே பார்த்திருக்கிறேன். 'மீசை' நன்றாக இருக்கிறது. அவர்களை எல்லாம்தான் கவி ஞர்கள் என்று சொல்லுவதைக் கேட்டிருக்கிறேன். இந்தச் சினிமாப் புத்தகத்தைப் பார்க்கும்பொழுது இதிலேயும் கவி ஞர்கள் இருக்கிறார்கள் என்பதை அப்பொழுதுதான் தெரிந்து கொண்டேன். ஆனால் மேல் மட்டத்திலே இருக்கிறவர் களுக்கு இந்த உண்மை தெரியாது. இங்கே என் 'சிஷ்யர்கள்' எல்லாம் அந்தப் பாட்டைத்தான் பாடுகிறார்கள். என் 'கஷ் மாலம்' சே அப்பா அந்தச் சொல்லிலே சொல்லலாம். அவர் பழகிய உலகம் அது. அவருக்கு இந்த உலகம் எப்படித் தெரியும். தெரிவதற்கு வாய்ப்பு ஏது. இவர்கள் யாருக்கும் முக வரிகூடக் கிடையாது. அதனால் இவர்களை யாரும் சீண்டுவதுகூட கிடையாது. அவள் பெயர் அம்மாகண்ணு. நான் அவளை 'மா' என்று கூப்பிட்டேன். அது அம்மா என்பதன் சுருக்கம். அதைத்தான் மற்றவர்கள் 'மே' என்று சொன்னார்கள். அந்த விடுதியில் அவளைக் "கண்ணு" என்று அவர்கள் அழைத்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். நம் கதைக்கு அவளை 'மே' என்று கூப்பிட்டால் போதும் என்று நினைக்கிறேன். எல்லாரும் அப்படித்தானே அவளைக் கூப்பிட்டு இருப்பார்கள். அந்த 'மே' ஒரு முக்கியமான பாத்திரம் ஆகிவிட்டாள். இந்தச் சூழ்நிலையில் அவளுக்கும் சினிமாப் பாட்டு பாடுவதில் ரொம்பவும் பிரியம். 'மச்சானைப் பார்த்தீங்களா' என்ற பாட்டை ரொம்பவும் திரும்பத் திரும்பப் பாடுவாள். அது அவளுக்குப் பிடித்த பாட்டு; சும்மா இருக் கும்பொழுது அவளைக் கிளறி விட்டால் அந்தப் பாட்டை அழகாகப் பாடுவாள்.

அவர்கள் என்ன சங்கீத வித்வான்களிடமா பாடம் கேட்கி றார்கள். அதுதான் ரிகார்டு, ரேடியோ, சினிமா. இதுதான்

சங்கீத வாத்தியார். நீங்கள் குருவிக்காரைப் பார்த்திருப்பீர்கள். அவர்கள் சில சமயம் எங்களைச் சுற்றிக் கொள்வார்கள். 'பாடு' என்று சொன்னால் போதும். ஆனால் அவர்களுக்குக் காசு தரவேண்டும். கையிலே டப்பா. அது எல்லாத்துக்கும் பயன்படும். அது பாடுவதற்கு இசைக் கருவியாகவும் அமையும். அந்த 'டான்சுகள்' பிரமாதமாக இல்லாவிட்டாலும் மனசுக்கு ரொம்ப பிடித்து இருக்கும். எல்லாம் 'இமிடேசன்'தான். இருந்தாலும் அதுபோதும். சங்கீத வித்வான்கள் பக்க வாத்தியம் இல்லாமல் பாடமாட்டார்கள். அதற்குக் காரணம் இருக்கிறது. அவர்கள் குரல் தனித்துப் பார்த்தால் தெரியாமல் இந்தத் தொழிலுக்கு வந்தவர்கள் என்பதைக் காட்டிவிடும். இங்கே குரலிலே யார் மேலேயும் குற்றம் கண்டு பிடிக்க முடியாது. எல்லாம் கிழிச்சல்தான். இருந்தாலும் அதிலே கலர் இல்லாமல் இல்லை.

நான் கம்சலைப் பற்றிச் சொல்ல வந்தேன். அங்கே ரிக்ஷாக்கள் எப்பொழுதும் நின்று கொண்டு இருக்கும். இப்பொழுதுதான் இழுக்கும் வண்டி மறைந்து விட்டதே. எல்லாம் சைக்கிள் ரிக்ஷாதான். அங்கே அவர்கள் ராஜாக்கள்தான். சும்மா கால்மேல் கால் போட்டுக் கொண்டு அந்தச் சீட்டிலே சாயந்து கொண்டு இருப்பதைப் பார்த்தால் இங்கேயும் சுகம் இருக்கத்தான் செய்கிறது என்பதை உணர முடியும்.

அந்த ரவுடி பையன் 'ரங்கன்' அவன்தான் என் தம்பி கார்மேல் கல்லை வீசினான்; அவன்தான் அந்தப் புஸ்தகம் வைத்துக் கொண்டிருந்தான். 'சினிமாவுக்குப் போன சித்தாளு'. அது சினிமாப் பாட்டுப் புத்தகம் படிக்கிறமாதிரி இருந்தது. பேரு அப்படி இருந்தது. அதை அங்கிருந்தவர்கள் எல்லாம் ரசித்துப் படித்தார்கள். ஆனால், அதே சமயத்திலே வாத்தியார் தாக்கப்பட்டது அவர்களுக்குப் பிடிக்கவில்லை.

வாத்தியார் தாக்கப்பட்டிருக்கக் கூடாது. அவர் படத்திலே இருக்கிற மகத்துவம் பலபேருக்குத் தெரியாது. 'நல்லது

வாழும்' என்ற நம்பிக்கையை ஊட்டுவதே அந்தப் படங்கள் தானே. மேல் மட்டத்திலே இருக்கிறவர்கள் கலையை ரசிக்கிறார்கள். நாங்கள் கதையிலே ஏதாவது நீதி இருக்கிறாதா என்றுதான் பார்க்கிறோம். முக்கியமா 'பயப்படக்கூடாது'. இது எங்கள் வாழ்கைக்கு ரொம்ப அவசியம். கஷ்டம் வந்தால் தாங்கிக் கொள்ள வேண்டும். இதெல்லாம் அது சொல்லிக் கொடுக்கிறது''. 'அடி உதை' எங்கள் உலகம் அதை அதிலே பார்க்க முடிகிறது என்று அந்தப் பையன் ரங்கன் சொன்னான்.

அதற்குள் அவள், அதுதான் 'மே' நடுவிலே குறுக் கிட்டாள். ''வாத்தியாரைப் பற்றி நான் கவலைப்படவில்லை. அதனால் அவர் குறைந்து போகமாட்டார்.''

''அந்தக் கம்சலையை அசிங்கப்படுத்தியதுதான் எனக்குச் சரி என்று படவில்லை'' என்று சொன்னாள்.

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஏழைகளின் சமுதா யத்தை உயர்த்த வேண்டிய ஆசிரியர் மிகவும் தாழ்த்தி விட்டார் என்ற எண்ணம் எனக்கு உண்டாயிற்று. அவர்கள் மொழியைப் பயின்று அப்படியே தத்ரூபமாகக் காட்டும் ஆசி ரியர் அவர்களைத் தாழ்த்துவதால் என்ன பயன். அந்த கதாபாத்திரத்திலே வருகின்ற நடிகனைத் தாக்குவதற்கு மாறாக அவளைத் தாக்கியது அவ்வளவு பொருத்தமாகப் படவில்லை.

ஏழைகளின் வாழ்க்கையைத் தீட்டும் கதை அது. ஆனால் அவர்கள் வாழ்க்கையை உயர்த்த அது பயன்படவில்லை என்பதை அதைப்படித்துப் பார்த்த பிறகுதான் தெரிந்தது. அதன் ஆசிரியர் பெயர் எனக்குத் தெரியவில்லை. அது கிழிந் துவிட்டிருந்தது. அதைப்பற்றி நானும் கவலைப்படவில்லை. சினிமா கதைப் புத்தகங்கள் எல்லாம் அப்படித்தான் கிழிந்து கிடந்தன. ஆசிரியரைப் பற்றி யார் கவலைப்படுகிறார்கள். விஷயம்தானே முக்கியம்.

அப்பா அவளை உள்ளே சேர்க்கமாட்டார். மருமகள், அவள் உள்ளே நுழையமாட்டாள். எனக்கு அந்தச் சூழ்நிலையில் பழகிய பிறகு அந்த பந்த பாசங்களை அறுத்துக் கொள்ள முடியவில்லை. பொறுக்கிகள்கூடச் சுற்றுகிறேன் என்று என்னைப் பற்றிப் பேசவும் கேட்டிருக்கிறேன். வேறு யார் என்னோடு சுற்றுவார்கள்? அதைத்தானே திருப்பிக் கேட்கத் தோன்றுகிறது.

அவர்கள் பார்வையில் அவ்வாறு அவர்கள் படலாம். அவர்களைப் போக்கிரிகள் என்றும் அழைக்கக் கேட்டிருக் கிறேன். அவர்கள் பார்வையில் அப்படிப்படுகிறார்கள். என் பார்வையில் அவர்களும் மனிதர்கள்தான் என்று நினைக்கச் செய்கிறது.

அந்த ரயிலடியில் மனித சஞ்சாரம் நீங்கிவிடும். ரயில் சஞ்சாரமும் அடங்கிவிடும். ரயில் அதிகாரிகள் குளிருக்கு அஞ்சி அடக்கமாக உள்ளே போய்விடுகிறார்கள். அந்தப் பரந்த இடம் அப்புறம் எங்களுக்குத்தான் சொந்தம். பெஞ்சு களில் படுத்துக் கொள்வோம். யாரும் கேட்கமாட்டார்கள். மேலே அழகான கூரை; கீழே சிமெண்டுத் தரை; காற்று வச திக்குக் குறைவு இல்லை. நாங்கள் யாருக்கும் 'குடிக்கூலி' கொடுக்க வேண்டுமே என்ற அவசியம் இல்லை. மறுபடியும் நினைத்துப் பார்க்கிறேன். பங்களாக்களில் வசிக்கிறவர்களும் நிம்மதியாகத் தூங்குகிறார்கள்; நாங்கள் அடைக்கக் கதவே இல்லை. அவர்கள் எங்களை நினைத்து அஞ்சுகிறார்கள். நாங்கள் யாரை நினைத்தும் அஞ்சுவதில்லை. நாங்கள் அவர்கள் வீடுகளில் புகுந்து திருடுவோம் என்று நினைக்கி றார்கள். 'நாங்கள் அவர்களைப் பற்றி நினைப்பதில்லை. 'திருடு' என்ற பயம் இல்லாமல் தூங்குகிற மனிதர்கள் இருக் கிறார்கள் என்றால் அது நாங்கள்தான். நான் அவர்களோடு ஒன்று ஆகிவிட்டேன்.

# 3

இந்தச் சுதந்திர வாழ்க்கையில் நாங்கள் காண்பது போராட்டம்தான். என்றாலும் போராட்டத்தில்தான் வாழ்க்கையைக் காண முடிகிறது. எங்கள் உடல் மழையிலும் வெய்யிலும் பட்டு உரம் ஏறிவிட்டது. காற்றுக்கும் மழைக்கும் நாங்கள் அஞ்சுவதில்லை. 'இயற்கை அன்னை' என்று சொல்லுவார்கள். அவர்கள் அன்னையைக் கண்டிருக்கலாம். இயற்கையை எங்கே கண்டிருக்கப் போகிறார்கள். கூட்டம் கூட்டமாகக் காக்கைகள் வாழ்வதைப் போலத்தான் என்று கற்பனை நயம்பட எழுதுவார்கள் எங்கள் அச்சகத்தில் வெளியான நூல்களில். அதை இப்பொழுதுதான் பார்க்கிறேன். எங்கே வேண்டுமானலும் கூடு கட்டுவோம்; உடனே வந்து பிரித்துப் போடுவார்கள்.

போலீசுக்காரர்களுக்கு எந்தக் கேசும் கிடைக்காவிட்டால் யாரையாவது கூப்பிடுவார்கள். அவர்கள் உதவிக்காக எங்களில் ஒரு சிலர் உள்ளே இருந்துவிட்டு வருவதும் உண்டு. 'நொண்டி' அதனால் என்னைத் தொட விரும்புவதில்லை. என் தங்கை 'மா'வுக்கு . உதவியாக நான் இருக்கவேண்டிய சூழ்நிலை தானாக அமைந்துவிட்டது.

அப்படியும் அவளைச் சுற்றி 'அவன்', 'இவன்' வட்டமிடுவார்கள். என் பக்கத்தில் காலாக நீட்டிக் கிடக்கும் கட்டைகளுக்கு அஞ்சிக் கொஞ்சம் எட்டவே இருப்பார்கள். அவள் சொல்லுவாள். "என் பழைய வரலாற்றை அறிந்திருக்கிறார்கள். நான் விரைவில் இணங்கி விடுவேன் என்று எதிர்பார்க்கிறார்கள். அதுதான் நடக்காது. பெண்ணுக்குத் துணை கணவனாவது இருக்க வேண்டும்; உடன்பிறந்த சகோதரனாவது இருக்க வேண்டும். இரண்டும் இல்லாத நிலையில்தான் காப்பு இல்லாமல் போய்விடுகிறது."

"எனக்கு உடன்பிறந்த சகோதரன் இருந்திருந்தால் நான் வெளியே வந்திருக்க மாட்டேன். பொதுவாக அந்த மாதிரிக்

குடும்பங்களில் அவனுக்கு மணமாக வேண்டுமே என்பதற்கா கவது பெண்ணை முதலில் மணம் முடிப்பார்கள். தங்கையை வைத்துவிட்டு அண்ணனுக்கு மணம் முடிக்க மாட்டார்கள். அப்படி எனக்கு ஒரு அண்ணன் வாய்க்காமல் போய் விட்டான். நான் வெளியே வந்திருக்க மாட்டேன். அவன் அன்பில் வாழ்ந்து இருப்பேன். 'என்னமோ ஓடிவிட வேண்டும்' என்று தோன்றுகிறது. சொல்லாமல் கொள்ளாமல் வந்துவிட்டேன். யாரோ என்னை அடித்துக் கொண்டு போய்விட்டதாகப் பேசிக் கொண்டார்கள். அந்த பாக்கியம் எனக்குக் கிடைத்திருந்தால் அதற்காக நான் வருத்தப்பட்டு இருக்க மாட்டேன். அந்தமாதிரி தைரியசாலிகளைச் சந்தித்ததே இல்லை. என்னோடு நிரந்தரமாக வாழும் உறுதி எந்த இளைஞனுக்கும் இருந்ததை நான் பார்த்தது இல்லை.''

''மேலும் இந்தப் போலீசுகாரர்கள் தொல்லை. அவர்க ளுக்கு அஞ்சியே மிக எளிதில் அங்கே புகல் அடைந்து விட்டேன். அந்த மாஜிஸ்ட்ரேட்டு என்னை வெளியே அனுப் பியதும் மறுபடியும் உள்ளே போக விரும்பவில்லை. ஓரே காரணம் நான் மறுபடியும் அந்த மாஜிஸ்ட்ரேட்டின் முகத்தில் விழிக்க விரும்பவில்லை. நான் 'நல்ல பெண்' என்று சொல்லிய பிறகு கெட்டவளாக விரும்பவில்லை.''

''நேரே இங்கே புகலிடம் அடைந்தேன். கொஞ்சம் நாள் கஷ்டமாகத்தான் இருந்தது. அப்புறம் சரியாகப் போய்விடு கிறது. என்னைப்போல் இங்கு ஒரு பைத்தியம்கூடச் சுற்றிக் கொண்டிருந்தது. அதைப் பார்த்ததும்தான் எனக்கு தைரியம் வந்து விட்டது. அந்தப் பைத்தியத்திடம் யாரும் நெருங்க மாட்டார்கள். அவள் உடனே கல்லை எடுத்துக் கொள்வாள். அது அவளுக்குத் தற்காப்பு. எத்தனையோ பேர் அவளைப் பார்க்கிறார்கள். யாராவது துணிந்து அவளுக்கு ஒரு நல்ல சேலை தர முன் வருகிறார்களா யாரும் வருவது இல்லை. அந்தக் கந்தல்தான் அவள் பெண்மையை மறைத்தது. அண்ணே, 'டீக்காசு' என்பாள். அப்பொழுது மட்டும் தன்

மனநிலையில் இருப்பாள். அப்பொழுது எல்லாம் அந்தக் கம்சலையை நினைத்துக் கொள்வேன் அவளும் இப்படித்தானே பைத்தியமாகத் திரிந்து இருப்பாள். ‘அரங்கேற்றம்’ படம் பார்த்தாயா! அதில் அவள்தான் தம்பிக்காக உதவினாள். வாழ்க்கையில் அரங்கேறினாள். பெற்ற தாயும் கற்ற தந்தையும் உற்ற உறவினரும் அவளைத் தீண்டாதவளாக ஒதுக்கி விட்டார்கள். அவள் எங்கெங்கோ சுற்றினாள். கொஞ்சம் தவறு செய்தால் இந்தச் சமுதாயம் விடாது. அதுவும் பெண் தவறு செய்து விட்டால் அவளைச் சாகும் வரை வாழவிடாது. உடல் சாவுதான் இறப்பு என்றால் மனத்தின் சாவுதான் பைத்தியம். அந்தப் பைத்தியம் இங்குதான் சுற்றிக் கொண்டு இருக்கும். அவளோடு சித்தப் பிரமை பிடித்த ‘ஆள்’ ஒருவனையும் நீ பார்த்திருக்கலாம். அவன் பீடிக்கு நெருப்புக் கேட்பான். அவ்வளவுதான். அதற்கு அப்பால் அவனைப் பற்றி இந்தச் சமுதாயத்துக்குத் தெரியாது; தெரிந்து கொள்ள முயல்வதும் இல்லை. அவன் மனமும் செத்துவிட்டது. அவர்கள் எல்லாம் வெறும் நிழல்களாக இங்கே சுற்றிக் கொண்டிருப்பார்கள்.''

‘‘இவர்கள் எல்லாம் மனசால் செத்தவர்கள். பலர் உணர்வே அற்றவர்கள் இங்கு இருக்கிறார்கள். எதிலும் ஆசை இருப்பது இல்லை. இங்கே கிழம் ஒன்று சுற்றிக் கொண்டு இருக்கும். அதுக்கு ஒரே ஆசை காசு கேட்பது. வேறு எந்த நல்ல உணர்வும் கிடையாது. யாரும் அதிகம் கொடுக்க மாட்டார்கள். கிடைப்பதை ஒளித்து வைக்கும். அதை யாராவது அடித்துக் கொண்டு போய் விடுவார்கள். அதற்கப்புறம் ‘லபோ திபோ’ என்று அடித்துக் கொள்ளும்.''

‘‘அவர்கள் எல்லாரையும் பார்த்திருக்கிறேன். அவர்களுள் ஒருத்தியாகத்தான் நான் இங்கே சுற்றிக் கொண்டு இருக்கிறேன். அந்த மாஜிஸ்ட்ரேட்டு என்னை தண்டித்து ‘ஹோமுக்கு’ அனுப்பியிருந்தால் நான் உருப்பட்டு இருப்பேன். என்னைப்போல் வழுக்கி விழுந்தவர்கள் எனக்குத்

துணையிருப்பதைக் கண்டு நான் சந்தோஷப்பட்டு இருப்பேன். நான் மட்டுமல்ல. என்னைப்போல் பலபேர் இருக்கிறார்கள் என்பதில் ஆறுதல் அடைவேன். ஆனால் அங்கே என்ன வாழ்க்கையைக் கண்டிருக்கப் போகிறேன். சில இளைஞர்கள் வந்து அழைத்துக் கொண்டு போய்த் திருமணம் செய்து கொள்கிறார்கள். உண்மையில் அவர்களை வாழ்த்துகிறேன். மனிதப்பண்பு உடையவர்கள் அவர்கள். எனக்கு அந்த ஆசை இல்லை. யாருக்காவது ஏதாவது சேவை செய்ய வேண்டும். அதிலேதான் திருப்தி'' என்று தன்னைப் பற்றி அவ்வப்பொழுது பேசுவாள். அதைக் கேட்பதில் எனக்குச் சிலசமயம் நேரம் போவதே தெரிவதில்லை. பின் அந்த பிளாட்பாரத்தில் விக்கிரமாதித்தன் கதையை யார் கேட்க முடியும். நல்லதங்காளின் கதையைத்தான் கேட்க முடிந்தது.

அங்கு வந்த சிறுவர்களின் கதை கேட்பதற்கு மிகவும் பரிதாபகரமாய் இருக்கும். உபரிப் பொருள்கள் சந்தைக்கு வருவதைப் போல் வீட்டுக்கு வேண்டாத பிள்ளைகள் தாம் இங்கு வந்து குவிகிறார்கள். அம்மாவை இழந்தவர்கள்; தந்தையின் பெயரைக் கேட்க மறந்து விட்டவர்கள், சிற்றன்னையின் கொடுமையால் சீரழிக்கப்பட்டவர்கள், எப்படியாவது பிழைக்க வேண்டும் என்ற ஒரே லட்சியத்திற்காக ஓடி வந்தவர்கள் தாம் என் தோழர்கள்.

என் தங்கையிடம் எல்லோரும் மரியாதை காட்டினார்கள். அவள் நியாயமாக ஒரு மருத்துவமனையில் இருக்க வேண்டியவள். அவளைப்போல அன்பு செய்கிறவர்கள் இருந்தால் அந்த நோயாளிகளுக்கு எவ்வளவு ஆறுதலாக இருக்கும்.

அவள் சொன்னாள், ''உனக்குக் கால் இல்லை. அதனால்தான் உன்னை விரும்புகிறேன்'' என்று.

''என்னை விட்டு ஓட முடியாததால்'' என்று சொல்லி இருக்கிறாள்.

அவளை விட்டு நான் எப்படி ஓட முடியும். அப்படியும் அப்பாவின் நிலைமை எனக்குப் புரிகிறது. சுமைதாங்கி நண்பர் சொல்லியதுபோல் தொழில் நடத்தவும் முயன்றேன். சொத்து இருந்தால்தான் நம்பி கடன் கொடுப்பார்களாம்; அல்லது சொத்து இருப்பவர்கள் ஜாமீன் கொடுத்தால்போதும் என்று சொன்னார். மறுபடியும் என் தம்பியைக் கேட்க அப்பாவுக்கு விருப்பம் இல்லை. அம்மா அவன் நன்றாக இருந்தால்போதும் என்றார்கள். 'தங்கை' அவள் தன் கணவனின் அடிமை. அவ்வளவுதானே அவன் எதிர்பார்த்தது. அதற்காகத்தானே அவளுக்குத் திருமணமே நடந்தது. அந்த ஒரு குடும்பத்தைச் சரிப்படுத்தி முடியுமானால் அதை விருத்தி செய்து அதிலேயே சுற்றிச் சுழல்வதுதானே பெண்ணின் லட்சியம். அதை அவள் செம்மையாக நிறைவேற்றி வந்தாள்.

'காட்டராக்ட்' கண் அவர் பார்வையை மழுக்கி விட்டது. அவருக்கு நிச்சயமாகப் பண உதவி செய்ய வேண்டும். இங்கே நான் எனக்காகச் சேர்த்து வைத்தால் மற்றவர்களுக்கும் எனக்கும் வித்தியாசம் இல்லாமல் போய்விடும். சாதாரண மனிதனாக நான் வாழ விரும்பவில்லை.

இன்றைய சராசரி மனிதன் செய்வதே இதுதானே. தனக்கு வேண்டியதைச் சம்பாதிப்பது; கொஞ்சமாகச் செலவு செய்வது; மீதி சேர்த்து வைப்பது. பிறகு இந்தச் சமுதாய சடங்குகளுக்கு மொத்தமாக ஒழித்து விடுவது. மேலும் எங்களில் யாரும் மூன்று வேளை சாப்பிட்டுப் பழகியது இல்லை. அது உடம்புக்கு கெடுதி என்பது தெரியும். அத்தகைய வாய்ப்பு எங்களுக்குக் கிடைப்பது இல்லை. அந்த நிலையில் நாங்கள் எப்படிச் சேர்க்க முடியும். கொஞ்சமாகக் காசு நடமாடினால் சூதாடித் தோற்று விடுவார்கள். அதுவும் நன்றாக இருக்கிறது. எங்களுக்குள் பணப்புழக்கம் ஏற்படும். பொழுதும் போவதற்கு வழி ஏற்பட்டு விடுகிறது. பெரிய மனிதர்களிடம் இருக்கும் இந்த நல்ல பழக்கங்களே அங்குப் பலரிடம் காண முடிந்தது.

இதுவரை நாங்கள் பொது உடைமைவாதிகளாக இருந்தோம். தேவைக்கு மேல் சம்பாதிப்பதில்லை. சில சமயம் எந்த வேலையும் கிடைக்காதபோது எங்களில் பலர் பலவித மாக மாறிவிடுவதுண்டு. அதைப்பார்க்கும்பொழுது எனக்கு மிகவும் வேதனையாக இருக்கும்.

சினிமா டிக்கெட் விற்பது முதல் பிக்பாக்கெட் வரை சில சமயம் இறங்கி விடுவது உண்டு. ரங்கன் இப்படி மாறுவான் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. துணிந்து பல காரியங் களில் இறங்கி விடுவான். அவனைக் கண்டால் யாருக்குமே கொஞ்சம் பயம் தான். எடுத்தவுடன் அடித்து விடுவான். அத னாலேயே அவனுக்கு 'ரவுடி' என்ற பெயர் அவனோடு சேர்ந்து விட்டது. ஆரம்பத்தில் கூலிவேலைக்கு வந்தவர் கள்தாம் அங்கு வேலை கிடைக்காதபோது இந்த மாதிரி தப்பான வேலைகளில் இறங்கி விட்டார்கள். அந்த நிலை மையில் எங்கள் கூடுகள் கலைக்கப்படும்.

போலீசுகாரர்கள் அடித்துத் துரத்தி விடுவார்கள். அப்பொ ழுதுதான் இந்த நகரம் எவ்வளவு பெரியது என்பதை எங்களால் உணர முடிகிறது. ரயிலடியே எங்களுக்குச் சாசுவ தமாய் இருப்பதில்லை.

அப்பாவுக்கு எப்படியோ மணியார்டர் செய்து வந்தேன். அவள் 'மே' என் கதையைக் கேட்டு இருக்கிறாள். அவள் எனக்கு எப்படியும் உதவுவது என்று தீர்மானித்து விட்டாள். அதை என்னால் தடுக்க முடியவில்லை. என் தம்பியின் பெயரில் அவ்வப்பொழுது மணியார்டர் செய்து வந்தாள். அவள் தொழிலில் இறங்கி விட்டாள் என்று நினைப்பதைவிட வேறு விதமாக யூகித்துக் கொள்ள முடியவில்லை. இது எனக்குத் தெரியவே தெரியாது. பின்னால்தான் தெரிந்தது. இல்லாவிட்டால் அவளைக் கண்டித்து இருப்பேன்.

என் தம்பியைவிட அவள் எவ்வளவு உயர்ந்தவள் என்பதை அவ்வப்பொழுது நினைத்துக் கொள்வேன். அது

அவளுக்குப் பழகிவிட்ட தொழில்; அதை அவள் விட முடிய வில்லை. அதனால்தான் அவளை வெறுக்கவில்லை. என் மனம் அந்த வகையில் மிகவும் பண்பட்டு விட்டது. நான் அவளைக் காதலிக்கவில்லை. அது அதைவிட ஒரு பெரிய உண்மை; ஆனால் அவள் எனக்காக வாழ்ந்தாள். என் உறவை விரும்பினாள். ஆனால் என்னை விரும்பவில்லை.

இன்னும் சொல்லப் போனால் உடலால் நினைக்காமல் உள்ளத்தால் ஒன்றுபடும்படி ஏதாவது சொல் இருந்தால் அது இதுதான். அதைச் சாதாரண அன்பு என்று என்னால் சொல்ல முடியாது. இந்த உடல்தான் எங்களுக்குத் தடை; இல்லா விட்டால் நாங்கள் எங்களைக் காதலர்கள் என்று சொல்லிக் கொண்டால் தவறு இல்லை என்று நினைக்கிறேன். அவள் எனக்காக வாழ்கிறாள். நான் இந்தச் சமூகத்துக்காக வாழ்கிறேன். அந்தச் சமுதாயத்தில் என் தம்பி ஓர் அங்கம். என் அப்பா ஓர் அங்கம். அவன் சுரண்டும் இனத்தில் சேர்ந்து விட்டான்.

அப்பா சுரண்டப்பட்ட இனத்தில் ஒருவர். நான் இரண்டும் கெட்ட நிலையில் ஓர் உதிரியாக வாழ்ந்து கொண்டி ருக்கிறேன். எனக்கு அழகான பெயர் இந்தச் சமுதாயம் தந்திருப்பது 'நொண்டி'. அப்படி என்றால் எதுக்கும் உதவாதவன்; உணர்ந்திருக்கிறது. இரண்டும் அல்லாத இனம்தான் இந்த 'உதிரிகள்' இவர்களைப் பற்றி யாரும் எண்ணிப் பார்த்தது இல்லை. அவர்களுள் ஒருவனாக நான் தள்ளப்பட்டு விட்ட பிறகுதான் அவர்கள் யார் என்ன செய்கிறார்கள். இந்த நாட்டின் எதிர்காலம் என்ன என்பதைப் பற்றி எண்ணத் தூண்டியது.

முதலாவதாக இவர்களுக்கு வாக்குரிமை இல்லை. அத னால் இவர்களுக்கு எந்தப் பொறுப்பும் இல்லை. அந்தப் பொறுப்பைச் சமுதாயம் அளிக்க மறந்து விட்டது. இவர்க ளுக்கு முகவரியே இல்லை. முகவரியை அமைத்துக் கொடுக்க இந்தச் சமுதாயம் மறுத்து விட்டது. மிக எளிதில் சொல்லி விடு

கிறார்கள். 'கேர் ஆஃப் பிளாட்பாம்' என்று. அதன் அர்த்தம் என்ன? எங்களுக்கு முகவரி கிடையாது. போலீசுக்காரர்கள் எங்களை அவ்வப்பொழுது வேட்டையாடுவது சகஜம். எங்காவது ஏதாவது ஒரு கொலை நடந்தாலும் நாங்கள் சந்தேகப் பேர்வழிகள் ஆகிவிடுவோம். நாங்கள் எல்லோரும் அந்த நிலைக்குப் போவதில்லை. ஒரு ரங்கன் போதும். எங்க ளுக்கு இந்தப் பெயரை வாங்கிக் கொடுக்க. என் தலைமையைவிட அவன் தலைமையில்தான் இந்தக் கூட்டத் துக்கு நம்பிக்கை ஏற்படுகிறது. நான் அறிவு சொல்ல முடியும். அவர்களை ஒழுங்காக நடந்து கொள்ளச் சொல்ல முடியும். அது நான் கற்று வந்த பாடங்கள். என் பாடம் அவர்களுக்குச் சிலசமயம் ஒத்து வருவது இல்லை. இந்தச் சிகப்புத் தலைப் பாகை அண்ணன்கள் (அதுதான் சுமைதாங்கி நண்பர்கள்) எங்களைச் சிலசமயம் 'விரட்டி' அடிப்பார்கள். அவர்களுக்கே கூலி கிடைக்காதபோது அவர்களுக்கு எங்களைக் கண்டால் வெறுப்பு வந்துவிடும். நான் மட்டும் அந்தக் காரைச் சுற்றிக் காவல் இருப்பேன். அது ஒரு சேவையாக அமைகிறது. அதா வது எங்கள் கூட்டமே அதில் கை வைத்துக் கொள் ளாமல் பார்க்கின்ற பொறுப்பை நான் ஏற்றுக் கொள்கிறேன், அவர்க ளுக்கு வண்டிக்குப் பத்து காசு தான் வாங்குவேன். அது ஒருவகையான கவுரவமான பிச்சை தான்.

அதற்கும் ஒரு சிலருக்கு மனம் வராது. சட்டம் பேசு வார்கள். எங்களுக்குப் பார்த்துக் கொள்ளத் தெரியும். நீ போ என்பார்கள். போலீசுகாரரை அழைப்பதாக மிரட்டுவார்கள். அவர்களுள்ளும் சின்ன மனம் படைத்தவர்கள் ஏராளம். பார்த்திருக்கிறேன். காசு அவர்களுக்குப் பெரிதல்ல. அது அவர்கள் தொழில் பழக்கம்; வாழ்க்கை நெறி. எதிலும் கச்சித மாக இருந்து பழகியவர்கள்.

அம்மா அப்பாவுக்கு ரொம்ப சந்தோஷம். 'தம்பி' அனுப்பி வைத்த எம்.ஒ. வரும்பொழுதெல்லாம் அவன் புகழை வாயாரப் பேசுவார்கள். அவன் வீட்டுக்கு வராவிட்

டால் என்ன! மாதாமாதம் அனுப்பிவிடுகிறான். அவனைப் படிக்க வைத்தது வீண் போகவில்லை. மாதம் ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கிறான். மாமனார் வீடு பெரிய இடம் (அதாவது மைல் கணக்கில் அல்ல; எல்லாம் அடி கணக்குதான்) எல்லாம் அவர்களே கவனித்துக் கொள்கிறார்கள். அவள்தான் ஒரு மாதிரி. தன் புருஷன் சம்பாதனை இந்தப் பக்கம் வரக்கூடாது. அதிலே அவள் கரார்.

"அவங்க வீட்டு நாய் மட்டும் மாதம் இருநூறு ரூபாய் சாப்புடுது. அது கொடுத்து வைத்தது. அதுதான் காவல். அந்தப் பெரியவன் எப்பவோ சொல்லிவிட்டானாம். "உங்கள் வீட்டில் திருடப்போகிறேன்" என்று. அதுமுதல் அவளுக்கு அதுவே பயம். கனவிலேகூட "திருடன் நொண்டி" என்று இந்த இரண்டு சொற்களை அவள் சொல்லிக் கொண்டிருக்கிறாளாம். அவன் எவ்வளவோ சமா தானம் சொல்லிச் சொல்லிப் பார்கிறான். "நொண்டி எப்படித் திருட முடியும்? நான் பார்த்துக் கொள்கிறேன் என்று சொல்லிப் பார்த்தான். ஒன்றும் முடியவில்லை. அதெல்லாம் முடியாது. 'அல்சேஷியன்' நாய் கட்டாயம் ஒன்று தேவை என்று ஒற்றைக் காலால் நின்றாளாம். (அவள் நொண்டியல்ல என்னைப் போல ஒற்றைக் காலில் நிற்க; அதாவது நிலையாக நின்றாள் என்பது அர்த்தம்) அதற்குப் பிறகுதான் அவன் அந்த நாயே வாங்கினானாம்.

"இந்த நொண்டிக்கு ஏன் இப்படி புத்தி கெட்டுவிட்டதோ தெரியலை. இப்படி ஏன் சொல்லணும்" என்று அம்மா சொல்லுகிறாள். போதாக்குறைக்கு எங்கேயோ பங்களாவிலே தனிவீடாம். ஆம்படையான் வேலைக்குப் போயிருந்தாராம். புள்ளை பள்ளிக்கூடம் போயிருந்தானாம். வேலைக்காரி கடைக்குப் போயிருந்தாளாம். இப்படி ஒவ்வொருவரும் ஒரு இடத்துக்குப் போனதுக்கப்புறம் பட்டப்பகலிலே வீடு புகுந்து அவளைக் கொலையே செய்து விட்டானாம். போதாக்குறைக்கு இந்தச் சமாசாரத்தை எல்லாம் பத்திரிகை

களும் போட ஆரம்பித்து விட்டாங்க. ஒரு பத்திரிகை எஞ்சி இருக்கிற குடும்பத்தைப் பேட்டி கண்டு அந்த மூன்று பேரு போட்டோவையும் போட்டு வைத்து விட்டது. அந்த அம்மா மகாலட்சுமி மாதிரியா லட்சணமா இருக்காங்க எப்படித்தான் அவங்களைக் கொல்ல அவனுக்கு மனம் வந்ததோ தெரிய வில்லை. அந்த மனுஷன் அப்படியே பேயறைந்தால் மாதிரி ஆகி விட்டார். அந்தப் புள்ளை பாவம் அநாதையாகப் போய்விட்டது. பட்டணம் வந்த கொடுமை; அந்தக் குடும்பம் இந்தக் கதிக்கு வந்துவிட்டது. அதுதான் ‘பட்டினப் பிர வேசம்'' என்ற படத்திலே காட்டுகிறார்களே. கிராமத்திலே இருந்து வந்த குடும்பம் எப்படிச் சீரழிந்து போய்விட்டது என்று காட்டியிருக்கின்றார்கள். இதைப் பட்டணத்து ஜனங் கள்தான் போய்ப் பார்க்குதங்க. இது இந்த நகரத்துக்கே அவமானம். என்ன செய்யறது. உள்ளதைத்தானே காட்டியி ருக்கிறாங்க. எப்படிச் சொல்ல முடியும். அதுதான் உள்ளது என்று. எவ்வளவோ நல்லது இருக்கிற இடத்திலே இந்த மாதிரி சில கெட்டதுகளும் ஏற்படத்தான் செய்யுது.

இந்த மாதிரி பத்திரிகைச் செய்தி வந்ததும் மருமகளுக்குத் தூக்கமே இல்லை. நகை நட்டு எல்லாம் பத்திரமா அம்மா வீட்டுக்குக் கொடுத்து அனுப்பி விட்டாளாம். இப்ப பலபேரு அதிகமாக நகை போடறது இல்லை. இந்தப் பத்திரிகைச் செய்தி வந்ததும் அது அது அதிகமாக நகை போட்டுக் கொண்டு வெளியே வருகிறது குறைந்து போய்விட்டது. கலி யாணத்திலே கூட அதிகமாகப் போட்டுக் கொள்வது இல்லை. எல்லாம் ‘லாக்கர்லே’ வைத்துப் பூட்டி வைத்து விடுகிறார்கள். இப்ப கேட்டால் எல்லாம் அப்படித்தான் சொல்கிறார்கள். நகை இல்லாவிட்டால்கூட இப்படிச் சொல்லித் தப்பித்துக் கொள்வது நாகரிகமாகப் போய்விட்டது. இந்தக் காலத்திலே நகைகளைப் போட்டுக் கொண்டு வெளியே வருவது அவ்வ ளவு நல்லதாகப்படவில்லை. அது மற்றவர்களை உறுத்துது. எவனாவது மோப்பம் பிடித்துப் பின்னாலேயே வந்து இப்படி எல்லாம் நினைக்க ஆரம்பித்து விட்டார்கள். இப்ப

எங்க தம்பியின் மனைவி நகை அதிகம் போட்டுக் கொள்வது இல்லை. அது 'பாஷன்' ஆகிவிட்டது என்று சொல்லுகின்ற அளவுக்கு நான் சொன்ன ஒரு சொல் ஒரு பெரிய மாற்றத்தை உண்டு பண்ணி விட்டது.

இதெல்லாம் என் அம்மாவைப் பார்க்கப் போகும் பொழுது அவள் பேசத் தெரிந்து கொண்டேன். என்னால் என் அம்மாவைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. அவர்களுக்குப் பெரிய வருத்தம். நான் கால் ஒடிந்து போய்க் கிடக்கிறேன் என்பதற்காக அல்ல. கால் ஒடிந்த எனக்கு ஒரு கால் கட்டுப் போட்டு விட்டால் அவர்கள் நிம்மதியாகக் கண்களை மூடிக் கொள்ள முடியும் என்று நினைக்கிறார்கள். "டே!" நீ வீட்டோடு வந்து விடு; தம்பி மாதாமாதம் பணம் அனுப்புகிறான். உனக்கு என்று தானா உலை வைக்கப் போகிறோம். அப்பா உன்னை அச்சாபீசில் சேர்த்து விடுகிறாராம். அங்கே கம்பாஸ்டர் வேலை செய்யாவிட்டாலும் பைண்டிங் வேலை செய்யலாம்" என்று அறிவுரை சொன்னார்கள்.

என்னால் அந்த உதிரிகளை விட்டுப் பிரிய மனம் வரவில்லை. நான் இங்கு வந்து விட்டால் எந்தத் தம்பி பணம் அனுப்புவாள்? இதெல்லாம் அம்மாவுக்கு எப்படித் தெரியும்.

அவர்கள் நிம்மதியாக வாழ்ந்தால் போதும். அம்மா எப்படியாவது பிழைத்துக் கொள்வாள்; பேர்த்தியை எடுத்துக் கொண்டால்கூடப் போதும். பொழுது போய்விடும் என்று சொல்லுவார்கள். அப்பாதான் பிரச்சினை மிகவும் முக்கியம். கண் 'காட்டிராக்ட்' தீர்ந்து விட்டால் அந்த எம்.ஓவை மறுத்து விட்டாலும் மறுத்து விடுவார். அவ்வளவு வைராக்கியம் அவருக்கு.

எங்கள் வாழ்க்கை ரயில் வண்டிப் பயணிகளைப்போலத்தான். முந்நூறு மைல் பயணம் செய்யும் பயணிகளைப் பார்த்திருப்பீர்கள். அந்த ஒன்பது மணி நேரத்தில் தனி உறவு

ஏற்பட்டு விடுகிறது. சுக துக்கங்கள் எல்லாம் விசாரிக்கப் பட்டுத் தீர்ந்து விடும். அதுவும் பெண்களாக இருந்தால் 'பிள்ளைக்கு எப்ப கலியாணம். ஏன் சரியான இடம் கிடைக்க லையா. ஏன் எங்க பக்கம்கூட உங்க மனுஷாள் இருக் கிறார்களே என்று தொடங்கிப் பேரன் பேர்த்திகள் படிப்பு வரையும் பேசி முடித்து விடுவார்கள். மருமகள் உண்டாகி இருப்பதிலே இருந்து மசக்கைப் பலகாரம் வரை விடாமல் பேசி முடிப்பார்கள். ஆண்கள் அரசியலைத் தவிர வேறு பேசாமல் கச்சிதமாகப் பேச்சை முடித்து விடுவதைப் பார்த்து இருக்கிறேன். 'அவன் இவன்' என்றுதான் பெரிய பெரிய தலைவர்கள் அவர்கள் அகராதியில் இழுக்கப்படுவார்கள். "என்ன சார் விசாரணை வேண்டியிருக்கு. எல்லாம் இப்ப டித்தான் இருப்பாங்க. அம்பட்டன் குப்பையைக் கிளறினால் வேறு என்ன கிடைக்கும். அரசியலே இப்படித்தான்" என்று சாதாரணமாகப் பேசுவார்கள்.

"அப்படிச் சொல்லக்கூடாது. இந்த விசாரணைகளால் பெரிய நன்மை இருக்கிறது. வருங்காலத்திலே எல்லோரும் திருந்தி நடப்பார்கள்" என்று நம்பிக்கை உள்ளவர்கள் பேசு வார்கள்.

"இனிமேல் அகப்பட்டுக் கொள்ளாமல் ஜாக்கிரதையாக நடந்து கொள்வார்கள்" என்று பட்டும் படாமலும் இரண்டு அர்த்தம் வரும்படி ஒருசிலர் பேசுவார்கள். எல்லாரும் ஒரு சிரிப்புச் சிரிப்பார்கள். கலகலப்பாக அந்த நேரம் ரயிலோடு ஓடிக்கொண்டு இருக்கும். அந்த உறவு மறுபடியும் நினைத்துப் பார்க்கக்கூடிய நினைவுகளாக அமைந்து விடும்.

அதைப்போலத்தான் எங்கள் ரயிலடிக் கூட்டம். அங்கே இருப்பவர்கள் யாரும் நிலையாக இருப்பதில்லை. அவர்கள் வாழ்க்கைப் பயணம் எப்படி எப்படியோ திசை மாறும். ரயிலடி ஒரு சந்திப்புத்தானே! என்றாலும் அவ்வப்பொழுது நாங்கள் அங்குதான் சந்தித்துக் கொள்வோம். எனக்கு அங்கு தான் சுதந்திரமாக வாழ முடிகிறது. நானும் வாழ்கிறேன். மற்ற

வர்கள் வாழ்வதையும் பார்க்கிறேன். அவளும் அந்த இடத்தை விட்டுப் போக விரும்பவில்லை. அவளுக்கு அது பழக்கமான இடமாகிவிட்டது.

அவள் எங்கே போகிறாள். எப்படிச் சம்பாதிக்கிறாள் என்பதைத் தெரிந்து கொள்ள முயல்வதில்லை. ஆனால் அவள் தொழில் அவளுக்குத் தெரியும். அங்கே அக்கம் பக்கம் லாட்ஜிகளில் அவளுக்குச் சில சமயம் கிராக்கிகள் கிடைக்கின் றன என்பதைத் தெரிந்து கொண்டேன். ஒருநாள் என் தம்பியின் காரை அங்கே பார்த்தேன். அதில் அவன் மனைவி இல்லை. அதற்கப்புறம்தான் அப்பாவுக்கு அவன்தான் மணி யார்டர் செய்கிறான் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டேன்.

எனக்கு அது ஒரு பெரிய அதிர்ச்சியைத் தந்தது. மறுப டியும் அவன் வாழ்க்கை என்னோடு எப்படி எல்லாம் பிணைகிறது என்று எண்ணிப் பார்க்கிறேன். சமுதாயத்தை மூன்று நிலைகளிலே பிரித்துப் பார்த்தேன். மேல்நிலை; இடை நிலை. எங்களைப் போன்ற உதிரிகளின் நிலை. உதிரிகளிடமும் அவர்கள் உறவு நீங்குவதில்லை என்பதை எண்ணிப் பார்க்க முடிந்தது.

அவள் என்னோடு பழகும்போது பச்சிளங் குழந்தை யாகப் பழகுவாள். அண்ணா! என்று அழைக்கும்பொழுது அவள் நெஞ்சுதான் அப்படிக் கூப்பிடும். இதயத்துக்கு வாய் வைத்திருந்தால் அது இப்படித்தான் பேசும். அவள் ரகசிய மான சில உறவுகள் வைத்திருந்தாள். சில லாட்ஜிகளில் அவர்களுக்குக் கமிஷன் கிடைக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டேன். இவர்களுக்கு நல்ல உடை வசதிகள் எல்லாம் தந்து இருக்கிறார்கள். நான் ஒருவன் இல்லை என்றால் மறுப டியும் அவள் அந்த மேல் நிலைக்குத் தாவி விடுவாள். அதையும் அவள் எனக்காகத்தான் செய்கிறாள். நான் நொண்டி. அவள் என் காலாக இருந்து உழைக்கிறாள். எப்படி அவளை உதறித் தள்ள முடியும்.

“அண்ணா! நீ மேலே படித்த பாடங்களை எல்லாம் இங்கே ஒப்புவிக்காதே. அவை அங்கே அவர்கள் கடைப்பிடிக்கட்டும். சமுதாயம் அவர்கள் கட்டுக்கோப்பில்தான் இருக்கிறது. அது அங்கே அவர்கள் அந்த நல்ல பண்புகள் அடைவதற்குச் செய்த முயற்சி. இந்தச் சமுதாயம் அந்த ஒழுங்கான வாழ்வை அமைக்க எவ்வளவோ பாடுபட்டு இருக்கிறது. பெரிய பெரிய ஞானிகள் பாடுபட்டு இருக்கிறார்கள். வள்ளுவர், சங்கரர் போன்ற நீதிமான்களும் ஞானிகளும் அவர்களுக்கு உயர்ந்த லட்சியங்களைத் தந்து இருக்கிறார்கள். காந்தி, அண்ணா, காமராசர், பெரியார் போன்றவர்கள் நீதிக்கும், நேர்மைக்கும் போராடி இருக்கிறார்கள். இந்தச் சமுதாய ஒழுங்கு கட்டுப்பாடு அறியாமை நீங்கி நல்ல நெறியில் வாழ வேண்டும் என்று பாடுபட்டு இருக்கிறார்கள். அந்த நெறியில் அவர்கள் பாடுபடுகிறார்கள். ஆனால், அவர்கள் முழு வெற்றி காண முடியாது.”

“இந்தச் சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வுகள் இருக்கும்வரை நீதிகள் ஆட்டம் கொடுத்துக் கொண்டுதான் இருக்கும். உங்கள் தம்பி உயர்ந்தவன், படித்தவன், அந்த நீதிகளை அறிந்தவன்தான். ஆனால் ஏன் சுதந்திரமாக வாழ முடியவில்லை. ‘தந்தை தாய்ப் பேண்’, ‘தாய் சொல் துறந்தால் வாசகம் இல்லை’, ‘தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை’ என்று அவனும்தான் படித்து இருக்கிறான். இராமயணம் பெரிய காவியம். தாய் சொல்லக் கேட்டுத் தந்தை தந்த ஆட்சியை உதறித் தள்ளினாள் அந்த உத்தமன். இன்று மருமகள் வீட்டுக்கு வந்ததும் யார் சீதையைப் போல் பெரியவர்களுக்குத் தொண்டு செய்து கொண்டு நடக்கிறார்கள். அவள் சொல்லைக் கேட்டு நாட்டு ஆட்சியை அல்ல வீட்டைத் துறக்கிறார்கள் இந்தத் தம்பிமார்கள். அவர்கள் நீதி அறிந்தவர்கள்; கடமை உணர்ந்தவர்கள்; அவன் இந்த ‘ஏற்றத் தாழ்வு’ என்ற சக்கரத்தில் அகப்பட்டுக் கொண்டவன்தான். அவன், தன் மனைவியிடம் உயிரை வைத்திருந்தால் நீங்கள்

அவனை இங்குப் பார்க்க முடியாது. உன் தம்பி மனைவி உங்களுக்குச் சேவை செய்ய மறுத்தாள். இங்கே 'அவள்' உங்களுக்கு உயிர்விடக் காத்திருக்கிறாள். இதுதான் வாழ்க்கை. மனிதன் நல்லவன்தான். இந்த வர்க்கப் பாகுபாடு கள்தாம் அவன் பண்பைக் கெடுத்து விட்டது. எல்லாரும் இப்படித்தான் கனவு காண்கிறார்கள். ஒவ்வொருவரும் அந்த மேல் நிலையைக் கண்டு மோகம் கொள்கிறார்கள். எப்படியா வது பணக்காரனாகிவிட வேண்டும். அப்புறம் நிம்மதியாய். இருக்கலாம். உழைக்க வேண்டிய அவசியம் இருக்காது. காலத்துக்கும் கைகட்டிக் கொண்டு நிம்மதியாகக் காலம் கடத் தலாம். வழிவழியாகக் குடும்பம் நன்றாக இருக்கும். இப்படித்தான் இளைஞர்கள் கனவு காண்கிறார்கள். ஏன் ஒவ்வொரு வரும் கனவு காண்கிறார்கள்.''

''நீயும் நானும்தான் நடுத்தெருவில் இருந்து கொண்டு இதை வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்கிறோம். நீ சில சமயம் பொருமுகிறாய். நான் ரசிக்கிறேன். இதுதான் வேறுபாடு.''

''உன் தம்பியை வெறுப்பதால் பயன் இல்லை. அவனைப் போன்றுவர்களால்தான் எங்களுக்கு நிறைய வாரிக் கொடுக்க முடியும். உழைக் கும் கூட்டம் எங்களிடம் வர முடி யாது. அவர்களுக்குப் பணத்தின் அருமை தெரியும். யாராவது உழைப்பாளியை நீ இங்கே லாட்ஜிகளில் காண முடியுமா. எல்லாம் வெளியூர்க்காரர்கள் என்று நினைக்கிறாயா? இல்லை. உள்ளூர்க்காரர் கள்தாம். அவர்களிடம் அதிகம் பணம் இருக்கிறது.''

''பணம் இல்லாதவர்களும் பண்பு கெடுகிறார்கள். அது தான் நம் சகாக்கள். பணம் இருக்கிறவர்களையும் அது கெடுக்கிறது. அதுதான் உன் தம்பி. பணம், உள்ளவனையும் கெடுக்கும்; இல்லாதவனையும் கெடுக்கும். நடுத்தர மக்கள் தாம் பணத்தால் கெடாதவர்கள். மானம், ஒழுக்கம், பண்பு

இவை அவர்களிடத்தில்தான் இருக்கின்றன. அவர்களை நம்பித்தான் இந்தத் தேசமே உருவாக வேண்டும். அவர் கள்தாம் இந்த நாட்டுப் பண்பாட்டின் காவலர்கள். நாம் இங்கே உதிரிகள். கெட்டுபோவதால் அவர்கள் கெட்டு விடு வார்கள் என்று நினைக்காதே. நாம் கெடுவதைத் தவிர வேறு வழி இல்லை. எந்த வர்க்கப்பிரிவு உன் தம்பியைக் கெடுத் ததோ அதுவேதான் இங்கு உள்ளவர்களைக் கெடுக்கிறது. நீ இங்கு வருவதற்கு வாய்ப்பே இல்லை. வரவும் கூடாது. ஆனால் உன் கால்கள் உன்னை இங்கு இழுத்து வந்து விட்டது'' என்று அவள் தன்னை விளக்கிப் பேசினாள்.

''அவள் என் தம்பி'' என்று அவளிடம் சொன்னேன். அவள் 'தனக்கும், அவனுக்கும் ரயில் பயணம் ஏற்பட்டது' என்று வெளிப்படையாகச் சொல்லவில்லை. அவனை அவள் தெரிந்து வைத்திருக்கிறாள். அது அவள் பேச்சிலிருந்து தெரிந்து கொண்டேன்.

அவன் 'என் தம்பியின் துணைவி' என்று நினைக்கும் பொழுது அவளை ஏன் வெறுக்க வேண்டும். நான் மத்தியதர வாழ்க்கையை விட்டுக் கீழே வந்து விட்ட பிறகு அந்த அள வுகோல் கொண்டு அவளை மதிப்பிட விரும்பவில்லை. வாழ்க்கயின் அளவுகோலால் பார்க்கும்பொழுது அவளை விரும்புவதைத் தவிர வேறு எதுவும் என்னால் செய்ய முடியவில்லை.

நடக்க முடியாத எனக்கு அவள்தான் 'நாஸ்த்தா' வாங்கி வருவாள். சில சமயம் இரண்டு பேரும் சேர்ந்தே உணவு விடு திக்குச் செல்வோம். அவள் காசு மட்டும் நான் வாங்க மாட்டேன். அவளும் என் காசால் சாப்பிட மாட்டாள். அந்த வகையில் நாங்கள் சுதந்திரவாசிகளாக வாழ்ந்தோம்.

என்னோடு அவள் வரும்பொழுது சிலர் பொறாமையால் புழுங்குவார்கள். இந்த நொண்டி அதிருஷ்டசாலி. இந்த மாதிரி 'உருப்படி' நமக்குக் கிடைக்கில்லையே என்று உற்று உற்றுப்

பார்த்து ஒரு மாதிரியாக விலகியவர்களையும் பார்த்திருக் கிறேன். மற்றவர்கள் கண்களில் அவள் என் துணைவி. நினைத்துப் போகட்டுமே. இந்தச் சொற்களில் என்ன அர்த்தம் இருக்கிறது?

## 4

அம்மாக்கண்ணுவின் போக்கு விசித்திரமாக இருந்தது. அவள் நல்ல உறவுகள் கிடைத்தும் அவற்றை அவள் தன் வாழ்க்கை உயர்வுக்குப் பயன்படுத்தவில்லை. பற்றும் பசையும் அற்ற நெஞ்சோடுதான் வந்தவர்களிடம் பழகினாள். “இந்த உலகம் எனக்கு இந்த அளவில்தான் மதிப்புத் தருகி றது; ஆனால் அதைச் சொல்லியே மதிப்பைக் குறைக்கிறது. நான் செய்யும் தொழில் அவர்களைக் கவர்கிறது; என்னைப் பாராட்டுகிறார்கள். ஏன் புகழவும் செய்கிறார்கள். பிறகு எனக்கு நன்கொடையும் தருகிறார்கள். நான் இந்த ஆடவர்கள் ஒரு சிலரை சந்தோஷப்படுத்துகிறேன். அவர்கள் பணத்தைத் தருகிறார்கள்.” என்று கூறுகிறாள்.

கள்ளோ காவியத்தில் மங்கை பம்பாயில் ஒரு ஹோட்டல் கடையில் உட்காருகிறாள். அதனாலேயே அந்தக் கடையில் அபரிமிதமான வியாபாரம் நடக்கிறது. பணம் வந்து சேர்கிறது. அவள் அவர்களுக்கு விருந்தாகிறாள்; இவள் பலருக்கு மருந்தா கிறாள். அதாவது அவசியம் ஆகிறாள். அதை வைத்துத்தான் என் குடும்பத்தை உயர்த்துகிறாள். என் அப்பாவுக்குத் தெரிந்தால் அதைவிட அந்தக் கண்களையே இழந்து விடுவார். ஒரு “குச்சிகாரியின்” பணம். அது எப்படி அவருக்குத் தெரியப் போகிறது. அது தம்பியின் பணம்தானே.

என் தம்பி இப்படிக் குட்டிச்சுவர் ஆவான் என்று எதிர் பார்க்கவில்லை. பாவம் அந்தக் குடிப் பெண்ணுக்குத் தெரிந்தால் எவ்வளவு மனம் புண்படும். என் தம்பியை இவள் கெடுக்கிறாள் என்றால் அவளை எப்படி இனியவளாக ஏற்றுக்

கொள்ள முடியும். நான் தானே காரணம்? என் குடும்பத்துக் காகத் தானே அவள் உழைக்கிறாள். அவன் நேரடியாக அப்பாவுக்குக் கொடுக்க மாட்டான்; மறைமுக வழியில் அந்தப் பணம் அவருக்கே போய்ச் சேருகிறது.

என்னமோ அம்மாகண்ணுவிடம் அவனுக்கு ஒரு வெறியே உண்டாகிவிட்டது. நான் அவளைப் போக வேண்டாம் என்று தடுத்து விட்டேன். அவன் அவள் இருக்கும் இடம்தேடி வந்தான். பிறகு உண்மை தெரிந்து கொண்டான் அவள் நடைவாசி என்று. திடீரென்று அவனுக்கு ஓர் நடுக்கம் உண்டாகி விட்டது. அவளால் தனக்கு என்ன நோய் வருமோ என்று அஞ்சி விட்டாள்.

டாக்டரிடம் சென்று தற்காப்புக்காக ஊசிகளும் போட்டுக் கொண்டான் என்று கேள்வி. இவள் "சமூகத்துக்கு விரோதி" என்று நினைக்கத் தொடங்கினேன். இவளால் எத்தனை குடும் பங்கள் கெடுகின்றன. இவளை நானே போலீசில் பிடித்துக் கொடுத்து விடலாம் என்று நினைத்தேன். பிறகு எங்கோ படித்த நினைவு. "ஒருவரை அவர் பால் உணர்வு நடத் தையைக் கொண்டு மதிப்பிடாதே. அவரால் சமூகத்துக்கு நன்மையா தீமையா என்றுதான் மதிப்பிட வேண்டும்" என்று எங்கேயா படித்தேன். அப்படிப் பார்த்தால் இங்கே இருக்கிற ஒவ்வொருவரும் சமூகவிரோதிகள்தாம். ரங்கன் ரவுடியாகி விட்டான். கையில் ஒரு கத்தி வைத்துக்கொண்டிருப்பான். யாராவது முறைத்தால் சதுக்கென்று கிழித்து விட்டு ஓடி விடுவான். மறுபடியும் நாலுநாள் அந்தப் பக்கம் தலை காட்ட மாட்டான். அவனுக்கு ஏனோ அம்மாகண்ணுவிடம் ஓட்டம் விழுந்தது.

அவனே சொல்ல ஆரம்பித்தான். "அண்ணே" இது நல்லா இல்லை. இவள் "பிசினஸ்" பண்ணுகிறாள். உங்க ளால்தான் பார்க்கிறேன்" என்றான்.

என்னிடம் தனி மதிப்பு வைத்திருந்தான். நான் நல்ல நிலையிலிருந்து வந்ததால் அவன் மதிப்பு காட்டினான். நான்

பரம்பரை ஆண்டி அல்ல; பஞ்சத்து ஆண்டி என்பதால் என்னை மதித்தான்.

"அவளை எங்காவது ஓடிவிடச் சொல்"என்றான்.

"அவள் எல்லா இடத்திலும் ஓடி அலுத்துத்தான் இங்கே வந்திருக்கிறாள்."

"உங்கள் 'சப்போர்ட்டு' அதனால்தான் தைரியம் வந்து விட்டது அவளுக்கு."

அவள்தான் எனக்கு ஆதரவு என்பதை எப்படி விளக்க முடியும்.

"இப்பொழுது பழகுவது இல்லை, நிறுத்திவிட்டேன்" என்றேன்.

"அதுதான் நினைத்தேன், ஏன் அண்ணே நான் அவளை".

"கலியாணம் பண்ணிக்கிறியா"

"அது நம்ம அகராதியிலே எப்படிண்ணே முடியும்"

"அப்படின்னா"

'அவளை நான் 'கீப்பாகத்' தான் வச்சிக்க முடியும். அடிக்கடி நான் பிரிய வேண்டுமே. என் ஆட்சி விக்கிரமாதித்தன் ஆட்சி தானே! காடாறு மாதம் நாடாறு மாதம்.'

"அவள் இஷ்டம்" என்றேன்.

அதற்குள் அம்மாகண்ணு அங்கு வந்தாள்.

"என்ன சொல்றே அம்மாகண்ணு" என்றேன்.

"எதைப்பற்றி"

"ரங்கன்"

"அதுவா நடக்காது. நாம் ரவுடிகளுக்கு எல்லாம் பணிந்து விட்டால் அப்புறம் நமக்கு என்ன மதிப்பு இருக்கிறது. என்

னால யாருக்கும் குத்தையாக இருக்க முடியாது. அப்படின்னா நான் எப்பவோ யாருக்கோ பயன்பட்டு இருப்பேன். உங்க தம்பி என்னைக் குத்தகையாக வைத்துக் கொள்வதாகச் சொல்லி இருக்கிறான். பணத்துக்கே மசியாத நான் பலத்துக்கா பணியப் போகிறேன். எனக்கு இது தொழில் அல்ல. அவசியத் துக்காக விபசாரம் போனவள்''என்று மேலும் விளக்கினாள்.

''என்னை என்ன அவள் பிச்சைக்காரன் என்று நினைக்கி றாளா? நாளைக்கு அவளுக்கு ஒரு நெக்லஸ் தரப்போகிறேன். அது அவளுக்குத் தரப்போகிற பரிசுப் பணம். மறுக்க வேண்டாம் என்று சொல் அண்ணே'' என்றான் ரங்கன்.

என் சுய நலம் அவன் கருத்துக்குத் துணை செய்தது. என் தம்பி அவள் பின்னால் சுற்றுவது எல்லாம் அவள் தனியாக இருக்கிறாள் என்பதால்தான். அவன் என்னை நம்புகிறான். எனக்கும் அவளுக்கும் தொடர்பு இருக்காது என்று அவனுக்கு நன்றாகத் தெரியும். ரங்கன் அவளை மொத்தமாக வைத்துக் கொண்டால் அவளைப் பற்றிய பிரச்சினை ஒழியும். அவள் எனக்கு உதவாவிட்டால் போகிறாள். தம்பியைக் கெடுக் காமல் இருந்தால் போதும்.

என் அம்மாவுக்குத் தெரிந்தால் அவள் மனம் எவ்வளவு வேதனைப்படும். நான் அவள் பின்னால் சுற்றுகிறேன் என்று நம்புகிறாள். தம்பி அவளை நாடி இங்கு வருகிறான் என்றால் அவள் மனம் எவ்வளவு வேதனைப்படும்.

அவள் யாரோ எங்கோ கெட்டுத் தொலைந்தாள் என்று கேட்கும்பொழுது ஒரு கதைபோல இருக்கிறது. அதைக் கேட்கவும் சுவராசியமாக இருக்கிறது. அவளிடம் நெருங் காமல் பழகியபோது அவள் என்னைச் சுடவில்லை. அவள் என் தம்பியைச் சுடும்பொழுது அவள் மேல் ஏன் வெறுப்பு உண்டாகிறது. மிக மேல் நிலையில் வாழும் ஒருவனை நான் கீழே கொண்டுவர முடியவில்லை. தோற்றுவிட்டேன். ஏன் பழைய இடத்தைப் பார்க்கவும் வைக்க முடியவில்லை. இவள்

அவனை மிக விரைவில் கீழே கொண்டு வந்து விட்டாள். கீழ்த்தரமான உணர்ச்சிகளுக்கே ஆற்றல் அதிகம் என நினைக்கிறேன். அவற்றின் வேகம் உயர்ந்த எண்ணங்களுக்கு இருப்பதில்லை என நினைக்கிறேன்.

வரவர அந்தச் சூழ்நிலை பிடிக்கவில்லை. இந்தச் சூழ்நிலையைத் திருத்த முடியாது என்பதை உணர்ந்தேன். இவர்கள் உலகமே தனி உலகமாக அமைந்து விட்டது. ஏழைகளிடம் இரக்கம் காட்டுவது அவசியம்தான். இந்த உதிரிகளிடம் இரக்கம் காட்டுவது அவ்வளவு நல்லதாகப்படவில்லை.

இங்கே வாழ்பவர் அனைவரும் சந்தர்ப்பவாதிகளாகவே வாழ்கிறார்கள். அடிக்கடி இவர்களைச் 'சமூக விரோதிகள்' என்று பத்திரிகைகள் குறிப்பிடும். அதை நான் நன்றாகப் பார்க்க முடிந்தது. சட்டத்துக்குப் புறம்பான செயல்களில் பெரும்பாலோர் ஈடுபட்டனர்.

மறுபடியும் இந்த மத்திய தர ஒழுங்குகள் அளவுகள் எப்படியோ என்னைப் பிடித்துக் கொண்டன. நான் அயோக்கியர் மத்தியில் அகப்பட்டுக் கொண்டது போன்ற உணர்வு தோன்றியது.

திடீரென்று விபத்து ஒன்று ஏற்படுகிறது என்றால் அவர்களின் பார்வை அந்த ஆள் மீது செல்லாது. அவன் பாக்கட்டில்தான் செல்லும். முதலில் அதைப் பார்த்துவிட்டுப் பிறகுதான் வேடிக்கை பார்க்க ஒதுங்குவார்கள்.

இவர்களுள் பலபேர் கள்ளக் கடத்தல் கூட்டங்களுக்கு உதவி புரியச் சென்று விட்டார்கள். அவர்களே தலைவர்களும் ஆகிவிட்டார்கள். அவர்களுள் ஒரு சிலர் தொழிற் சங்கங்களின் தலைவர்களாக இருந்து கிளர்ச்சிகளை நடத்தி லாபம் அடைகிறார்கள். போலித் தலைவர்களாக இயங்கி நாட்டைக் குழப்பத்தில் ஆழ்த்துகிறார்கள். ஆரம்பத்தில் இவர்கள் மீது இரக்கம் இருந்தது. இப்பொழுது அது மறைந்து விட்டது. என்றாலும் நான் அம்மாகண்ணுவை வெறுக்க

முடியவில்லை. அவள் ஒரு தியாகியாகவே பட்டாள். அவள் என்மீது உயிர் வைத்திருந்தாள்.

நான் நொண்டி; ஓட முடியாது என்பதால்தான் என்னைச் சுற்றிக் கொண்டிருப்பதாகக் கூறினாள். இப்பொழுது என் சுய நலம் காரணமாகத்தான் அவளை வெறுக்கத் தொடங்கினேன். என் தம்பியைக் கெடுக்கிறாளே என்பதால்தான் அந்த வெறுப்பு. அதற்காக அவளை ரவுடி ரங்கனிடம் ஒப்புவிப்பது அதைவிடக் கொடுமை.

அம்மா என்னைப் பற்றி நினைத்துச் கலக்கமடைந்தாள். அப்பா மறுபடியும் கண் பெற்றுத் தொழில் நடத்தினார். தம்பியின் பணமும் அவருக்கு நின்று விட்டது. ‘மே’யும் யாரையும் அதற்குப் பின் ‘பொருட்’படுத்தவில்லை.

தம்பி அவளையே வேண்டும் என்று லாட்ஜ் முதல்வரிடம் சொல்லியிருக்கிறான். அவர் கூப்பிட்டு அனுப்பி யிருக்கிறார்.

“நீ ஏன் என்னை வெறுக்கிறாய்?”

“உன்னை மட்டும் அல்ல; உன் ‘கூட்டத்தை’யே வெறுக்கிறேன்.”

“உனக்காக நான் நெக்லஸ் கொண்டு வந்திருக்கிறேன்.”

“யாருடையது அது?”

“என் மனைவியினுடையது அது.”

“அவள் கேட்டால் லாக்கரில் இருக்கிறது என்று சொல்லி விடுவேன். தேவைப்பட்டால் புதிது வாங்கி வைத்து விடுவேன்” என்றான்.

“இன்று கொடு; நாளைக்குப் பதில் சொல்லுகிறேன்” என்றாள்.

அவன் அவள் கழுத்தில் போட நினைத்தான்.

“உங்கள் மாலையை விரும்பவில்லை. கையில் கொடுத்தால் போதும்” என்றாள்.

அவன் கொடுத்துச் சென்றான்.

## 5

நான் அவள் வரவில்லையே என்று காத்துக் கிடந்தேன். எத்தனை காலம் பறவைகளைப் போலப் பறக்க முடியும். அவள் எதிர்காலம் என்ன? என் எதிர்காலம் என்ன? யார் பதில் சொல்வது எனக்கே விளங்கவில்லை. இங்கே ஓடும் ரயிலுக்கு எங்கே ஓட வேண்டும் என்று தெரியும். அதன் வெளிப்புறத் திலே அது போக வேண்டிய இடம் எழுதப்பட்டிருக்கிறது. ஓடும் பஸ்களுக்குக்கூட இங்கேதான் போக வேண்டும் என்று எழுதி மாட்டப்பட்டிருக்கிறது. வெளியே வாழும் மனிதர்க ளுக்கும் நோக்கம் இருக்கிறது. இங்கே சிதறிக் கிடக்கின்ற உதிரிகளுக்கு மட்டும் வாழ்க்கையில் நோக்கம் என்பதே இல்லை. அவர்களுடன் சேர்ந்த எனக்கு மட்டும் என்ன நோக்கம் உண்டாகப் போகிறது?

பணம் கிடைக்கும்; அதைச் சேர்த்து வைப்பது அவசியம் என்று உணராத சாதி இவர்கள். அந்த அந்த நிலைமைக் கேற்பப் பழக்கங்களையும் ஏற்படுத்திக் கொள்வார்கள். வாழ்வின் நோக்கத்தை நாமாக ஏற்படுத்திக் கொள்கிறோம். சில சமயம் மற்றவர்கள் ஏற்படுத்தித் தருகிறார்கள். இதுதான் வாழ்க்கை நெறி.

நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைச் சூழ்நிலை தான் கற்றுத் தருகிறது. வாழ்க்கையில் நமக்கு லட்சியங்கள் இருக்க வேண்டும் அல்லது நம்மைச் சார்ந்தவர்களுக்கு லட்சி யங்கள் இருக்க வேண்டும். தனி ஒரு மனிதனுக்கு இதுதான் அவன் லட்சியம் என்று உணர்த்த முடிவதில்லை. மற்றவர் களுக்கு அவன் என்ன செய்ய வேண்டும் என்பதிலேயே லட்சியங்கள் உருவாகின்றன.

அவளுக்கு நான் என்ன செய்ய வேண்டும். அவள் எனக்கு என்ன செய்ய வேண்டும் என்பதில்தான் எங்கள் எதிர் காலம் அமைய வேண்டும். என் அப்பாவின் லட்சியம் தொழில் செய்ய வேண்டும்; கடனில்லாமல் வாழ வேண்டும். அம்மாவின் லட்சம் மகள் குறையில்லாமல் வாழ வேண்டும். என்னைப் பற்றிய நொண்டி எண்ணங்கள் அவ்வப்பொழுது அவளுக்குத் தோன்றி மறைந்து கொண்டிருக்கும்.

அப்பாவுக்கு என்னைப்பற்றிய நல்ல எண்ணமே கிடை யாது. அப்படி நல்ல எண்ணம் இல்லாவிட்டால் 'அவன் பேச்சை மட்டும் எடுக்க வேண்டாம்' என்று பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். அதே போலத்தான் அவர் என்னைப் பற்றி முடிவு செய்துவிட்டார். அவர்களுக்குச் சுமையாக இருக்கக் கூடாது என்பதற்காகத்தானே நான் வெளியே செல்லுகிறேன். என் சுவைக்காகவா நான் போகிறேன்? ஒரு பெண்ணும் ஆணும் பழகினாலே அதில் ஏதோ இருக்க வேண்டும் என்ற தத்துவத்தில் பழகிவிட்ட சமுதாயத்தில் நானும் அவளும் ஒன்றாக இருப்பதில் ஒரு தத்துவத்தை எப்படிக் காண முடி யாமல் இருக்க முடியும்?

ஆனால் என்ன தத்துவத்தைக் காண முடியும். நெருங்கிப் பேசினால் மேல்மட்டத்தில் அவர்கள் காதலர்கள்; இடை மட்டத்தில் அவர்கள் கணவன் மனைவி; கீழ் மட்டத்தில் அவர்கள் சந்தேகத்திற்கு உரியவர்கள்.

என்னைப் பொறுத்தவரை ஒரு கேள்விக்குறிதான். நான் என் பெற்றோர்களுக்கு ஒரு கேள்விக்குறிதான். ஏன் நானே எனக்கே ஒரு கேள்விக்குறிதான். நான் என்ன செய்ய வேண்டும்? யாருக்காக வாழ வேண்டும்? இப்படி யாரும் எப்பொழுதும் கேள்வி கேட்டதில்லை. அவர்கள் வாழ் வார்கள், வாழ்ந்துகொண்டே இருப்பார்கள். யாருக்காக என்ற கேள்வி அவர்களுக்கு எழுந்ததே இல்லை.

இந்தக் குடும்பம் என்ற ஒரு சின்ன சொல்லை எப்பொ ழுது மனிதன் படைத்துக் கொண்டானோ அப்பொழுதே

அவன் பிறருக்காகத்தான் வாழ்கிறான் என்பது அமைந்து விடு கிறது. எனக்கு ஒரு குடும்பம் இல்லை. 'மே'-விற்கு ஒரு குடும்பம் இல்லை. ரங்கனுக்கு ஒரு குடும்பம் இல்லை. நாங்கள் எல்லாம் யாருக்காக வாழ்கிறோம். இங்கே யாரும் குடும்பம் அமைத்துக் கொள்ள முடியாது. எதிலும் எங்களுக்கு உறுதிப்பாடு இல்லை. ஏன் மத்தியதரக் குடும்பங்களிலும் இந்தக் கேள்வி மெல்லப் புகுந்து விட்டது. 'ஏதோ வாழ்கிறோம்' என்று சொல்லுகிறார்களே தவிர எதுக்கு வாழ் கிறோம் என்று யாராலும் சொல்ல முடியாத நிலைமை ஏற் பட்டு விட்டது. இந்தக் கேள்வி நிலையிலிருந்து தப்பித்துக் கொள்ள ஓரே ஒரு வழி இருக்கின்றது. அது யாருக்காக வாழ்வது என்பதை முடிவு செய்வதுதான்.

அவள் எனக்காக வாழ்ந்து வந்தாள். அது பெண்மைக்கே உரிய தனி இயல்பு. நான் சமுதாயத்துக்காக வாழ்கிறேன். இது எனக்கே உரிய தனி இயல்பு. அவள் என்னுடைய உறவை விரும்புகிறாள். ஆனால் என்னை அவள் விரும்பவில்லை. இது ஒரு புதுவகையான உறவு. உலகம் இதுவரை காணாத தனி உறவு. இப்படி நாங்கள் ஒருவரை ஒருவர் விரும்பாமல் உறவு கொள்வதால் என்ன பயன்? விருப்பத்தால் தானே உறவே வளர்கிறது? வெறும் உறவால் என்ன லாபம்?

எங்களைக் கடந்து நாங்கள் யாருக்காவது பயன்பட வேண்டும். அதில்தான் வாழ்க்கை இருக்கிறது. உதிரிகள் எங்கும் போய்ச் சேர்ந்து கொள்வார்கள். மறுபடியும் அவர்கள் உதிரிகளாக முடிவில் பயன்படுவதுதான் வாழ்க்கை யின் பயன் என்றால் அதற்காகவே பிறந்தவள்தான் அவள். சமுதாய நல்வாழ்வுக்கு அவள் பயன்பட்டாள். அவள் விளக் கியது போல் சமுதாய வாழ்வுக்கு அவள் அவசியம்தான். ஆனால் அவளுக்குக் கைம்மாறு அவள் ஒரு நடத்தை கெட்டவள் மறுபடியும் சமூகத்தில் அவளுக்கு இடம் கிடை யாது. பெற்ற தாயும் தகப்பனுமே அவளுக்காகத் தலை முழுகினார்கள் என்றால் அது அவசியமில்லாத செலவுதானே.

அவள் கழுத்தில் ஒரு நெக்லஸ் போட்டுக் கொண்டிருந்தாள். அதை அவள் மறைக்க விரும்பவில்லை. என்னிடம் அதைக் காட்டினாள்.

"ஏது இது?"

"பழங்காலத்துக் கதை தெரியுமா?"

"எல்லாக் கதைகளும் பழங்கதைகள்தான்"

"அதாவது மாதவி கதை அவள் தான் இந்தப் பொதுத் தொழிலில் பெயரும் புகழும் பெற்றவள். அவள் முதலில் மாலையைத் தான் வாங்கிக் கொண்டாள். அரசன் அந்த மாலையைக் கொடுத்தான். அதைக் கோவலன் வாங்கிக் கொண்டான். அது கதை. இங்கே கோவலன் ஒரு மாலையைக் கொண்டு வந்து தந்தான். அதைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?"

"இது இருக்க வேண்டிய இடம் வேறு. வீடு வாசல் குடி குடித்தனம் இப்படி ஒழுங்காக வைத்து வாழ்பவர்களுக்கு இது ரொம்ப அவசியம். நமக்கு எதற்கு?"

"இதை ரவுடி ரங்கன் கொடுத்தான்"

"ஆமாம் இதை முன்னாலேயே சொல்லிக் கொண்டிருந்தான். எந்த வீட்டில் புகுந்து கொள்ளை அடித்தானோ?"

"உங்கள் வீட்டில்"

"எங்கள் வீட்டில் அம்மாவுக்கு இது ஏது? எப்பொழுது பெண்ணைப் பெற்றார்களோ அதோடு நகை ஆசையை மறக்க வேண்டியதுதானே?"

"ஏன் உங்களுக்கு மருமகளுக்கு எதுவும் போட மாட்டீர்களா?"

"போடுவோம். போட்டோம். அதுதான் அவள் எடுத்துக் கொண்டு போய்விட்டாளே."

"ஏன் அதுவாக இது இருக்கக் கூடாதா?"

"நீ சொன்னால் இருக்கலாம். ஆமாம் அதுவே தான்"

"அல்சேஷன்; தம்வீட்டு வேலைக்காரன் அத்தனை பேரையும் கடந்து"

"அது உள்ளூர்த் திருடன்; கட்டாயம் முடியும்"

"நீ அவனுக்கு ஒப்புக் கொண்டாயா?"

"பின் நான் யாருக்காவது ஒப்பந்தப் பட்டால்தான் நல்லது. இல்லாவிட்டால் இப்படியே உதிரியாகப் போக வேண்டியதுதானே."

"என் அண்ணனுக்கு ஒரு கலியாணம் செய்து விட்டுத் தான் அப்புறம்".

"உனக்கு அண்ணன் இருப்பதாகவே நீ சொன்ன தில்லையா?"

"அண்ணன் மறந்து விட்டால் தங்கை என்ன செய்ய முடியும்?"

"ஏன் அவன் பணக்காரப் பெண்ணைக் கலியாணம் கட்டிக் கொண்டானா?

"சில பேர் தங்களை விட்டு வேறு விதமாக இந்த உல கத்தைப் பார்க்க மாட்டார்கள்" என்றாள்.

அவள் கண்களில் இரண்டு துளிகளைக் கண்டேன். நான் அவள் அழுது பார்ததது இல்லை. ஏழைகள் துன்பப்படு வார்கள். ஆனால், வாய்விட்டு அழமாட்டார்கள். காய்ப்பு ஏறிய உடம்பில் எங்கு அடிப்பட்டாலும் அவ்வளவாக உறைக்காது.

ரங்கன் அடி, உதை, குத்து இதில் உழன்றவன். எவ்வளவு அடித்தாலும் வாங்கிக் கொள்வான். செமை உதை வாங்குவான். ஆனால் அடங்க மாட்டான். அவனுக்கு ஒரே

ஆசை தனக்குப் பதவி வேண்டும் என்பது. தன்னை 'ரவுடி' என்று சொன்னால் போதும். போலீசுகாரர்கள்கூட அவனி டம்தான் நன்றாகப் பழகுவார்கள். அவன் துணிச்சல்காரன் என்பதால் நல்லவர்களுக்கு எல்லாம் அவனைக் கண்டால் பயம்தான்.

அவனைச் சுற்றி இந்தக் கூட்டமே சுற்றுகிறது. அவன் ஒரு வீரன். அவனை யாருமே எதிர்க்க மாட்டார்கள். அவன் தைரியத்தில் இந்தச் சில்லரை தேவதைகள்கூட கொஞ்சம் துள்ளும்; பிறகு அடங்கும். அவனுக்கு எதிரியும் இருந்தான். அறுப்புகார கந்தன் என்பது அவன் பெயர். அவன் கையில் சின்ன பிளேடு போன்ற கத்திதான் வைத்திருப்பான். அவன் எடுத்த உடனே ஒரு அறுப்புதான். கடைக்காரர்களுக் கெல்லாம் ஓரே பயம். அவன் வந்து கேட்டதை உடனே கொடுத்து விடுவார்கள்.

அதே தொழிலில் ரங்கன் இருந்தான். அதனால் இரண்டு பேருக்கும் அடிக்கடி தகராறு வரும். திடீர் என்று சோடா புட்டிகள் பறக்கும். தெருவில் கால் வைத்து நடக்க முடியாது. இவன் பக்கம் பத்துபேர். அவன் பக்கம் பத்துப் பேர். பரம்ப ரைகள் வளரும். ஒருவன் சால்பட்டா பரம்பரை என்பான். மற்றவன் கோல்பட்டா பரம்பரை என்பான். ரவுடிகளில் பரம் பரைகள் அமைந்தன.

குத்து, கொல் இதெல்லாம் பழகிக் கொள்வார்கள். பழங் காலத்து வீரம் இவர்கள் பயிற்சிகளில் இடம் பெற்றது. வீர பரம்பரையில் உதித்தவர்கள் போல் தங்களைப் பழகிக் கொள்வார்கள்.

ரங்கன் அம்மாக்கண்ணு மீது கண் வைத்திருப்பதைத் தெரிந்து கொண்டேன். கந்தன் அந்தப் போட்டியில் பங்கு பெற்றான். ஒரு நாள் நடு ரோட்டில் அவன் நன்றாகக் குடித்து விட்டு அவளை இழுத்தான்.

அப்பொழுதுதான் அம்மா கண்ணுவின் உயர்வு எனக்குத் தென்பட்டது. பெரிய அரசு குமாரிக்குக்கூட சுயம்வரம்

இவ்வளவு சிறப்பாக நடைபெறாது. ஒரு பெண்ணுக்குப் பல அரசர்கள் சண்டை போட்டுக் கொண்ட பிறகுதான் கலியாணமே நடந்ததாம். அது பழைய கதை; அந்தக் கதை இந்த வட்டாரத்தில் நான் பார்க்க முடிந்தது.

'வாம்மே' என்று இழுத்தான்.

அவள் பயப்படவே இல்லை. அவள் தன் கற்புக்காக என்றைக்கும் பயந்தது இல்லை. அவன் ரவுடித்தனத்துக்கும் அவள் பயப்படவில்லை.

''என்ன மச்சான் சொல்றே'' என்றாள்.

''வந்தையா வழிக்கு'' என்று அடங்கிவிட்டான்.

''எங்கூட வந்துவுடு'' என்றான்.

''அதுதான் நடக்காதண்ணே'' என்றாள்.

''மச்சான்'' என்று கூப்பிட்டபோது அவன் மயங்கினான். 'அண்ணே'என்றபோது தயங்கினான்.

''எப்படி நடக்காது நான் பார்த்துக்கிறேன்'' என்று கருவினான்.

''ரவுடி ரங்கன் என்னைக் குத்தகையா''

''பேசி இருக்கிறான்?''

''ஆமாம் அட்வான்சு கொடுத்திருக்கான்''

''நெக்லஸ்'' என்றாள்

''அப்படியா கதை''

நான் போய் மீட்கும்முன் ரவுடி ரங்கன் அங்கு வந்து விட்டான். கந்தன் அவள் கைப்பிடியை நெகிழ்த்தினான். அவள் காப்பாற்றப்பட்டாள்.

''மறுபடியும் அவளைத் தொட்டே''

"சரிதாண்டா பார்த்துக்கறேன் ஒரு கை" என்றான்.

எல்லாருக்கும் ஒரு பரபரப்பு இருந்தது. இரண்டு பெரிய கைகள் கலக்கப் போகின்றன என்று எதிர்பார்த்தார்கள். கந்தன் குடிபோதையில் மூழ்கி இருந்தான். ரங்கன் அவள் போதையில் மெய்ம் மறந்து கிடந்தான்.

நான் இதை எதிர்பார்க்கவில்லை. இந்த உதிரிகளின் கூட்டத்தில் இப்படி மோதல்கள் ஏற்படும் என்று எதிர் பார்க்கவில்லை.

இவர்கள் எல்லாம் வெறும் சோற்றுப் பட்டாளம் என்றுதான் நினைத்து வந்தேன். எங்கேயாவது கிடைத்தைச் சுருட்டிக் கொண்டு குடித்து எந்த நோக்கமும் இல்லாமல் வாழ்கிறார்கள் என்று நினைத்தேன்.

சினிமாப்பட்டு ஒன்று பிடித்த நினைவு எந்தப் படத்தில் என்று தெரிகிறது.

'எது சுகம் எங்கே சுகம்'

'என்ன சுகம்?' என்று தொடரும் பாட்டு இது.

"படைத்தான் கடவுள் பெண்ணை, ஒரு கோப்பையில் மது; மற்றொரு பக்கத்திலே மாது. மதுவும் மாதுவும் இருந்தால் உலகத்தில் சுவர்க்கத்தைப் பார்க்கலாம். இதைவிட வேறு என்ன இருக்கிறது" என்பதுதான் அந்தப் பாட்டு. எனக்கு அந்தப் பாட்டின் கருத்துத்தான் வருகிறது. அடிகள் நினைவுக்கு வரவில்லை.

இந்த இரண்டுக்கும் இவர்கள் அலைகிறார்கள். மேல்மட்டத்து மனிதர்களைப் போலவே வாழ்க்கையில் உயர்ந்த லட்சியங்களை இவர்கள் வைத்திருந்தார்கள். அவர்கள் கிளப்புகளில் என்ன செய்கிறார்கள். குட்டிகளும் புட்டிகளும் உருள்கின்றன என்றுதான் பேசிக் கொள்ளக் கேட்டு இருக்கிறேன். நவநாகரிகமான ஹோட்டல்களில் மங்கையரும்

மடையர்களும் கை கோர்த்துக் கொண்டு ஆடுகிறார்கள். அவர்கள் உடையில் பிரமாதமாக மிகப் பெரிய மனிதர்களாகக் காணப்படுகிறார்கள். உடையை நீக்கிவிட்டால் (தவறாக நினைக்க வேண்டாம்) உள்ளத்தை மட்டும் பார்த்தால் இந்தக் கூட்டத்தாருக்கும் அவர்களுக்கும் வித்தியாசம் இல்லையென்றுதான் என்னால் கூற முடிகிறது.

குடியும் கும்மாளமும் இவர்கள் இரவு நேர விளையாட்டுகள்; பொழுதுபோக்கு. யார் எவர் என்ற வேறுபாடு இவர்களுக்கு அதிகமாகத் தெரிவதில்லை. சே! இதெல்லாம் நான் எப்படி எழுதுவது?

இந்த இரண்டு வர்க்க மனிதர்களைப் பார்த்த பிறகுதான் மத்தியதர மக்களின் அருமை பெருமை எனக்குத் தெரிகிறது.

கொள்கைகளுக்காக வாழ்கின்ற மாணிக்கங்களை அங்கே பார்க்க முடிகிறது. கால் இழந்த ஒரே காரணத்தால் நான் இந்தக் கூட்டத்தில் வந்து சேர்ந்தேன். பாசபந்தங்களோடுதான் பழகினேன். ஆனால் மேல்மட்டப் பழக்கங்கள் அனைத்தும் இவர்களிடம் குடிகொண்டு இருந்தன.

கள்ளக் கடத்தல், குடி, சமுதாய ஒழுங்குகளை மீறுதல் எல்லாம் இரண்டிடங்களில் நிலவுகின்றன. அவர்கள் சேர்த்து வைக்கிறார்கள். இவர்கள் செலவு செய்கிறார்கள். இதுதான் வித்தியாசம்.

என்னால் அங்கு இருக்க முடியவில்லை. சலிப்பு ஏற்பட்டு விட்டது. அவளை அங்கு விட்டு வரவும் முடியவில்லை. அவள் மேல் மட்டத்துக்கும் பயன்படுவாள்; கீழ் மட்டத்துக்கும் அவள் தேவைப்படுகிறாள். ஆனால் நான் வாழ்ந்த இனம், வாழ விரும்பும் இனம் அங்கே இவளுக்கு இடமே கிடையாது என்பதை நினைத்துப் பார்க்கிறேன்.

இந்த வகையில் யோக்கியமாக வாழ்வதைத் தவிர வேறு அறியாத அப்பாவிக் கூட்டம், நான் வாழ்ந்த பிறந்த கூட்டம்.

உழைப்பை நம்பி வாழ்கிறார்கள். என் தம்பியும் நன்றாகத்தான் இருந்தான். உழைப்பைத்தான் நம்பி வாழ்ந்தான். கடுமையாக உழைத்துப் படித்தான். எப்படியோ அவனுக்கு இந்தப் போட்டி உலகம் கண்ணுக்குப் பட்டுவிட்டது. அவனோடு படித்த இளைஞர்கள் ஒரு சிலர் வாழ்ந்த அர்த்தமில்லாத வாழ்க்கையைப் பார்த்திருக்கிறான்.

பொதுவாக இந்த நாட்டில் சமூகத்தில் ஒரு கொடுமை இருக்கிறது. மேல் நிலையில் வாழ்கிறவர்கள் தம்பணத்தைக் காட்டிப் படித்த இளைஞர்களை வலை தேடிப் பிடிக்கிறார்கள். அவர்கள் தமக்கு நிகரான சம அந்தஸ்து உடையவர்களுக்குக் கொடுத்துக் கொள்ளட்டும். வாங்கிக் கொள்ளட்டும். இந்த இளைஞர்கள் அறிவும் ஆற்றலும் நிரம்பியவர்களாக இருக்கிறார்கள். பல்கலைக் கழகப் பட்டங்களைப் பெறுகிறார்கள். 'படித்தவன்' என்ற முத்திரை குத்தப்படுகிறது. அவனை உடனே விலைபேசி வாங்கி விடுகிறார்கள். இவன் முன்னுக்கு வருவதாக நினைப்பு. நடைமுறையில் அவன் அவர்கள் வீட்டு ஆள்; அவ்வளவுதான். அவர்கள் வியாபாரத்தை நிறுவனங்களைக் கவனித்துக் கொள்ளப்படுகிறார்கள். அதன் விலைதான் 'வரதட்சணை'. இவனுக்குக் கொடுக்கப்படுகிற விலை.

அவனுக்கு மதிப்பில்லாமல் போய்விடுகிறது; அவன் உழைப்புக்குப் பயன் இல்லாமல் போய்விடுகிறது. அவன் அந்தப் போலி வாழ்க்கையிலிருந்து விடுபட முயல்கிறான். காரும் கண்ணைப் பறிக்கும் கண்ணாடிகளும் வைர நெக்லஸ்களும் திகட்டிப் போய்விடுகின்றன! கிளப்பு டான்சுகள் பெர்மிட்டு குடிகள் இவை போதைகளாக அமைந்து விடுகின்றன. இந்த 'உதிரிகளின்' அலட்சியமான போக்கையும் கேளிக்கைகளையும் பார்க்கும் பொழுது அவர்களுக்கும் இவர்களுக்கும் எந்த வித்தயாசத்தையும் என்னால் காண முடியவில்லை. அவர்கள் மறைவாக நடத்துகிறார்கள். இவர்கள் மறைக்காமல் நடத்துகிறார்கள். அவர்கள் சரக்கு உயர்ந்தது. இவர்கள் மட்ட சரக்கை உபயோகப்படுத்துகிறார்கள்.

நான் மறுபடியும் எங்கள் வீட்டுக்கு எப்பொழுது போவேன் என்று துடித்தேன். என்னோடு பழகிவிட்ட காரணத்தால் 'மே' அவர்களோடு உறவு கொள்ள முடியவில்லை. அவளும் என்னைப்போல் பஞ்சத்து ஆண்டிதானே.

அந்த நெக்லஸ் என் தம்பி வீட்டிலிருந்து கொண்டு வரப் பட்டது. அதை அவளிடம் சேர்ப்பிக்க வேண்டும் என்ற கடமை உணர்வு எனக்கு ஏற்பட்டது.

''நான் அதைக் கொண்டு போய்க் கொடுத்து விட்டு வந்து விடுகிறேன்.''

''அவனுக்கு நான் என்ன பதில் சொல்வது?''

''அது திருட்டுச் சொத்துத்தானே''

''அது திருப்பிக் கொடுக்காவிட்டால்தான் நான் அவன் குத்தகைப் பொருள் ஆகிவிடுவேன்.''

''இல்லாவிட்டாலும் அவனுக்கு அடிமையாகத் தானே போகிறாய்?''

அந்த இரண்டு துளிக் கண்ணீரின் அர்த்தம் அப்புறம்தான் தெரிந்து கொண்டேன். நாம் உலகத்தில் பழகும்பொழுது அண்ணன் தம்பியாகப் பழகுகிறோம். அப்படி வாய் விட்டுச் சொல்கிறோம். அதே போல் தாயும் மகளும் என்று சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால், உள்ளத்தில் அப்படி நினைப்பது இல்லை. அக்கா தங்கை போல் பழகினோம் என்று சொல்கிறோம். ஆனால் உண்மையான உறவும் இருப்பது இல்லை. உறவு வேறு; பாசம் வேறு என்பதை அவள் கண்ணீர்தான் உணர்த்தியது. அவள் என்னை அண்ணன் என்று நினைத்தாள். அதில் பாசமும் இருந்தது உறவும் இருந்தது. நான் அவளைத் தங்கை என்று நினைத்தேன். அதில் பாசம் இருந்தது. ஆனால் உறவு இல்லை.

அவள் என்னைக் குறிப்பிட்டுப் பேசியபோது அதை நான் உணர்ந்து கொள்ளவில்லை. அதற்காகத்தான் அவள்

அந்த இரு கண்ணீர்த் துளிகளை வெளிப்படுத்தினாள். மனிதனின் சொற்கள் கருத்தை உணர்த்தத் தோற்றுவிக்கின்றன. அப்பொழுது இதயம் தன் கண்ணீரை வெளிப்படுத்தியது. அதன் மூலம் தன் உணர்வை எடுத்துக்காட்டுகிறது. அதுவும் தோற்றுவிட்டால் அழுகை வெளிப்படுகிறது. அவள் அழவில்லை. இரண்டாவது நிலையிலேயே நின்று விட்டாள்.

"என்னை மன்னித்துவிடு" என்றேன்.

"எதற்காக அண்ணா?"

அப்பொழுதுகூட அவளைத் தங்கை என்று கூப்பிட என்னால் முடியவில்லை. அவளிடம் பாசம் இருந்தது. நாங்கள் பாசமலர்கள்தாம். அவை கனிந்து உறவு என்ற கனியாக மாற முடியவில்லை.

அவள் அந்த நிலையில் முழுமை அடைந்து விட்டாள். அவளுக்கு இதயம் இருக்கிறது. பொதுவாக அந்த மாதிரி வாழ்க்கை உடையவர்களுக்கு இதயம் இல்லை என்று சொல்லுவார்கள். இதயம் ஒரு கட்டுக்குள் அடங்கியது. ரொம்பவும் சின்னதுதான். அதை அவள் தொழிலாக நடத்தும் பொழுது அவள் எப்படி இதயத்தைப் பிறர்க்கு அளிக்க முடியும். இதயம் நல்ல பொருள்களைத்தான் தாங்கும்; கெட்ட ரத்தம் சென்றால் அது அங்கே சுத்தப்படுத்தப்படுகிறது. கெட்டதுகளை மட்டும் இதயம் ஏற்றுக் கொள்வதில்லை. அவள் பாசம், பற்று எதையும் பிறரிடம் காட்ட மறுத்து விட்டாள். அந்தச் சின்ன இதயத்தை எனக்குத் தந்தாள். நான் அவளிடம் ஓடும் நல்ல இரத்தமாக இருந்தேன். என் நினைவுகள் அவள் இரத்த ஓட்டத்தில் கலந்து கிடந்தன. இரத்தத்திற்கு A.O. என்றெல்லாம் பிரிவினை காட்டுகிறார்கள். அவள் இரத்தத்தில் A.O. இருந்ததோ இல்லையோ எனக்குத் தெரியாது. அதில் நான் இருந்தேன். "உங்கள் ரத்தத்தின் ரத்தம்; சதையின் சதை" என்ற பேச்சைப் பலமுறை கேட்டிருக்கிறேன். அதன் அர்த்தம் அவளோடு உறவு கொண்ட பிறகு தான் தெரிந்தது.

என்னிடம் பிளந்த தன்மை இருந்தது. என் உள்ளத்தில் உறவுக்கும் இடம் பெற்றாள். இவள் என் பாசத்தில் இடம் பெற்றாள். இப்பொழுதுதான் புரிகிறது ஏன் அவளைத் தங்கையாக ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்பது. எனக்கு என் உடன்பிறப்பு அதுதான் தங்கை என்ற ஒருத்தி பிறவாமல் இருந்தால் எனக்கு நிச்சயமாக ஒரு தங்கை தேவைப் படுவாள். அந்த இடத்தை இவளுக்குக் கொடுத்திருப்பேன்.

மற்றொன்றும் என்னை அவளைத் தங்கையாக ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டது. சில சமயம் முரண்பாடுகள் ஏற்பட்டால் உறவை அறுத்துக் கொள்வதைப் பார்த்திருக் கிறேன்.

“நீ என் மகன் அல்ல; நான் உன் அப்பன் இல்லை” என்று பேசக் கேட்டிருக்கிறேன்.” இப்படி என் தந்தையும் தன் மகனைப் பார்த்துப் பேசியிருக்கிறார். அவனும் தனக்குத் தெரியாமலேயே அவரை ஒரு வேலைக்காரன் என்று அறி முகப்படுத்தி இருக்கிறான். இதற்குக் காரணம் என்ன? முரண் பாடுதான். அவருக்கும் என் தம்பிக்கும் ஏற்பட்ட முரண்பாடு என்ன? அவன் ஏணி வைத்து எட்டாத தூரத்தில் இருந்தான். அப்பா ஏணி வைத்துத் தூக்க முடியாத பள்ளத்தில் இருந்தார். இந்த ஏணிதான் இருவரையும் பிரித்தது. அவனுக்கும் தந்தை யிடம் பாசம் இருந்தது. இல்லாவிட்டால் அவன் அன்று வரத் தேவை இல்லை. கடைசி காலத்தில் மகன் கொள்ளி வைக்க வாவது வருகிறான் என்றால் அதற்குக் காரணம் என்ன? பாசம் தான், அதை அறுத்துக் கொள்வதற்கு அவன் வைக்கும் நெருப்புத் துணைச் செய்கிறது. பாசம் நீங்குகிறது. ஆனால் இன்னார் மகன் என்ற உறவு மட்டும் நிலைத்து இருக்கிறது. அவன் வசதிமிக்க வாழ்க்கை என்ற மாடியில் நிற்கிறான். அவர் வசதி என்றால் என்ன என்று அறிய முடியாத தொழிலாளியின் கூட்டத்தில் நிற்கிறார். இரண்டு பேருக்கும் உறவு உண்டாகுவ தற்கு வாய்ப்பே இல்லாமல் போய் விடுகிறது. உறவு

நிலைப்பது இல்லை. பாசம் வேறு; உறவு வேறு என்பதை என் தம்பியைக் கொண்டே நான் தெரிந்து கொள்ள முடிந்தது.

என் தம்பியிடம் எனக்குப் பாசம் இருந்தது. ஆனால் உறவு கொள்ள முடியவில்லை. அன்று என் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டானே அது பாசத்தின் முத்திரை. அதை இன்னும் தடவிக் கொடுக்கிறேன். அவன் சின்னக் குழந்தை யாக இருக்கும்பொழுது என்னையும் அறியாமல் அவன் கன்னத்தில் முத்தம் இட்டு இருக்கிறேன். அது பாசத்தின் அடையாளம். பொதுவாகச் சின்னப் பையன்களை முத்தம் இடுவதில்லை. இந்தப் பழக்கம் பெண்களிடத்தில்தான் இருக் கின்றது. ஆண்கள் அதை யாருக்கோ என்று ஒதுக்கி விடுகிறார்கள். பெண்கள் அதைக் குழந்தைகளுக்காவே என்று ஒதுக்கி வைக்கிறார்கள். நான் அம்மாவைப் பார்த்து அந்த உணர்ச்சியில் ஒன்றி விட்டேன். நான் அப்பொழுது அந்த நேரத்தில் பெண்மையை அடைந்து விட்டேன். என் மனம் குழைந்தது. அவன் அவ்வளவு அழகாக இருந்தான். அதனால் அவனிடத்தில் மற்றவர்களுக்கு ஒரு கவர்ச்சி இருந்தது.

முரண்பாடு இருந்தால் உறவு முறிகிறது. ஆனால் பாசம் நிலைக்கிறது. இந்தப் பெண்ணோடு எனக்கு ஏற்பட்ட முரண் பாடு என்ன? அவள் நடத்தை முன்னால் தெரிந்ததுதானே? அவள் என் தம்பியிடம் நெக்லஸ் வாங்கும் அளவுக்கு அவள் அவனிடம் கொண்ட தொடர்பு எனக்குப் பிடிக்கவில்லை.

எனக்குத் தெரியும் அது ரங்கன் கொடுத்தது அல்ல; அவன் எங்கள் வீட்டு நெக்லசைத்தான் கொண்டு வந்து தர வேண்டும் என்ற அவசியம் என்ன இருக்கிறது. அது என்ன அவ்வளவு அவசியமா என்ன? பெண்கள் உடம்பை மூடி மறைப்பதற்கே இந்த நகைகள் எவ்வளவு உதவி செய்கிறது தெரியுமா. எங்காவது பொது இடங்களில் செல்லும்பொழுது மூடி மறைக்கிறார்கள். தன் மார்பில் இருப்பதைப் பார்க்காத வர்கள் பார்த்து விடுவார்களே என்பதற்காகத்தான். இந்த

நகைகள் பெண்மையை மறைப்பதற்கு உதவுவதைப் பார்த்து இருக்கிறேன். அவ்வளவு எளிதாக அவனால் பொது இடங்களில் அடித்து இருக்க முடியாது. அவள் என்ன பஸ்ஸிலேயே போகிறாள். போக வேண்டிய அவசியம் அவளுக்கு ஏற்பட்டது இல்லை.

"நான் என்ன கூலிக்காரன் பெண் என்று நினைத்தாயா பஸ்ஸில் ஏறுவதற்கு என்று சொல்லி இருக்கிறாள். எங்கப்பா ஒன்றும் அந்த நிலையில் வைக்கவில்லை" என்று அவள் பேசி இருக்கிறாள்.

பிரபலஸ்தர்கள் பஸ்ஸில் ஏற முடிவதில்லை; என் தம்பியின் மனைவியைப் போல பணத்திமிர் பிடித்தவர்கள் பஸ்ஸில் ஏறுவதை அவமானம் என்று நினைக்கிறவர்களும் இருக்கின்றார்கள். அப்படி இருக்க அவன் எப்படி அவள் கழுத்தில் கை வைத்திருக்க முடியும்.

அது மட்டும் இல்லை. அது எங்கள் வீட்டு நெக்லஸ் என்பதால் அதை அவள் கழுத்தில் போட்டுக் கொள்வதில்லை. அது அவள் நெஞ்சை சுடுகிறது என்று நின்னைக்கிறேன். அதனால் ஒருவேளை மறுபடியும் உறவு வளைத்துக் கொள்ளுமோ என்று அஞ்சுகிறாள் என்று நினைக்கிறேன்.

அதை அவள் தொடுவதே இல்லை. அவன்தான் அதைப் பத்திரப்படுத்தி வைத்திருந்தான். அதுவும் அவன் சாதாரணமாக லாக்கரில் தான் வைத்திருப்பான். நிச்சயமாக ரங்கன் அதைத் தொட்டு இருக்க முடியாது. என் தம்பிதான் அதை அவளுக்குக் கொடுத்திருக்க வேண்டும். அவனுக்கு எவ்வளவு துணிச்சல், இதயமற்ற தன்மை. அது என் கால் உடைந்து அது தேடித் தந்த செல்வம். என் தியாகத்தின் ஒளி; அதை அவன் எப்படித் தவறாகப் பயன்படுத்தினான். ஏழைகளின் உழைப்பால்தான் நாட்டின் செல்வமே உருவாகிறது. இந்த ஊதாரிகள் அதை எப்படி எப்படியோ பறித்துக் கொள்கிறார்கள். அதை

எப்படி அவர்கள் விரயம் செய்கிறார்கள் என்பதை நினைக்கும்பொழுது அந்த முரண்பாட்டின் காரணம் உங்களுக்கு விளங்கும் என நினைக்கிறேன்.

தேவைக்கு மேல் ஒருவர் சம்பாதிப்பதே குற்றம் என்ற கொள்கை என்னுள் உருவாகி விட்டது. அது ஏனோ தெரியவில்லை. அதுதான் இந்த நாட்டின் தீமைக்கே காரணம் என்பதை நான் நினைத்து வந்தேன். அவளை இதுவரை மதித்ததே அவள் தேவைக்காகத் தவறு செய்கிறாள் என்பதால் தான். அதே உதிரிகளிடத்தில் எனக்கு ஒரு நல்லெண்ணம் இருப்பதே அவர்கள் தேவைக்கு மேல் தவறு செய்வது இல்லை. அவர்களிடத்தில் ஒரு நல்ல பழக்கம் இருக்கிறது. தனக்குப் பசி எடுத்தால்தான் கூலி சுமப்பார்கள். தனக்குத் தேவை என்றால்தான் பிக்பாக்கெட்டும் அடிப்பார்கள். போதிய அளவு கிடைத்து விட்டால் மறுபடியும் அந்த வேலைக்குப் போக மாட்டார்கள். அவர்களுக்கும் சில சமயம் தேவைகள் பெருகி விடுகின்றன. அம்மாகண்ணுகள் பிகுவு செய்தால் வீடு புகுந்து திருடுகிறார்கள். அவசியம் ஏற்பட்டால் கொலையும் செய்து விடுகிறார்கள். அந்த எல்லைக்குப் போகும்பொழுதுதான் அவர்கள் சமூக எதிரிகளாக மாறுகிறார்கள். எங்கேயும் தேவைக்கு மேல் உழைப்பது; சம்பாதிப்பது எல்லாம் தொல்லையும் தீமையும் தருகின்றன என்பதைக் காண முடிகிறது. அப்பொழுதுதான் அவர்கள் சுரண்டல் இனத்தைச் சேர்ந்து விடுகிறார்கள். அது எல்லா வகுப்புகளிலும் காணப்படுகிறது என்பதை எண்ணிப் பார்க்க முடிந்தது. அவர்களைச் சமூக எதிரிகள் என்று சொல்லுவது இல்லை. இத்தகைய முரண்பாட்டால்தான் இவளும் இந்தச் சுரண்டல் இனத்தில் அடி எடுத்து வைக்கிறாள் என்று நினைக்கும் பொழுது அவளிடம் உறவு கொள்ள முடியவில்லை. கொள்கையில் முரண்பாடு அமைந்து விடுகிறது. கொள்கையில் முரண்பாடு ஏற்பட்டுவிட்டால் அப்புறம் உறவு கொள்ள முடிவதில்லை. அதனால்தான் அவளை நான் தங்கையாக ஏற்று கொள்ள முடியாமல் போய் விட்டது. அவ

ளிடத்தில் பாசம் இருந்தது. உறவு முறிய ஆரம்பித்தது. அந்தக் கண்ணீரே அவளுக்கு உண்மையைக் காணத் தடையாக அமைந்து விட்டது. நான் என் நெஞ்சை அலசிப் பார்க்கிறேன். அவளிடம் இந்த முரண்பாடு ஏற்பட்டதால்தான் அவளிடம் என் உறவு கொஞ்சம் விலக ஆரம்பித்திருக்கிறது. அவளை உடனே என் தங்கை என்று வாயால் சொல்ல முடியாமல் போய்விட்டது. அதற்காகத்தான் அவள் வருந்தி இருக்கிறாள்.

ரங்கன் இதை எதிர்பார்க்கவே இல்லை. அறுப்புக்காரக் கந்தன் தனக்கு ஒரு போட்டியாக அமைவான் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. இந்தப் போட்டியில் அவள் மீது யாரும் கை வைக்க இடம் இல்லாமல் போய் விட்டது. இந்தக் கீழ் மட்டத்து மக்கள் இப்படி எதற்கும் சண்டைப் போட்டுக் கொண்டு இருப்பார்கள் என்பது இங்கு வந்த பிறகுதான் தெரிந்தது. இவர்களை மோதவிட்டுப் பணவசதி உடையவன் எதையும் சாதித்து விடுகிறான். இவர்கள் என்னதான் பாடுபட்டாலும் அவளுக்கு ஒரு நெக்லஸ் கொண்டு வந்துதர முடியாது. அது என் தம்பியால்தான் தர முடிந்தது. அரசியல் வாதிகளை எப்படிப் பணக்காரர்கள் விலைக்கு வாங்கிவிட முடியும் என்பதை இந்த நிகழ்ச்சியில் தெரிந்து கொள்ள முடிந்தது.

அவனுக்கு இவள் என்ன பதில் சொல்லப் போகிறாள். அது அவன் அவளுக்குக் கொடுத்ததாக அவள் வாய் விட்டுப் பேசவில்லை. அவன் கொண்டு வந்து கொடுத்தான் என்பது அவளுக்கு நாகரிகமாகத் தெரியவில்லை. ரங்கன் கொடுத்திருந்தால் அதில் அவளுக்குப் பெருமை. அதிலே வீரம் இருக்கிறது. அதுமட்டுமல்ல; என்னை அறிவதற்காக அவள் முயற்சி செய்தாள் என்பது அர்த்தம். ரங்கன் கொண்டு வந்து கொடுத்தான் என்ன சொல்கிறாய் என்பது அவள் கேள்வி.

அவளுக்கும் அதை உரியவரிடம் சேர்ப்பிக்க வேண்டும் என்ற விருப்பத்தால்தான் கொடுத்து இருக்கிறாள். மேல் மட்டத்து ஆள் இப்படி அழிவதை அவள் வெறுக்கவில்லை.

என் தம்பி அழிகிறானே என்பதில்தான் அவளும் அக்கரை காட்டினாள். அதைக் காட்டுவதற்குத்தான் அவள் அந்த நெக்லசைக் கொண்டு வந்து கொடுத்தாள்.

அதைச் சேர்ப்பது ஒருபுறம் இருக்கட்டும். அதை நாங்கள் எப்படிக் காப்பாற்ற முடியும். அதை எப்படி ஒளித்து வைப்பது. அது லஞ்சம் வாங்கும் அதிகாரிகளுக்குத்தான் தெரியும். எங்களுக்கு அந்தப் பழக்கம் கிடையாது. அதற்கா கவே அந்த இடத்தை விட்டு நீங்க வேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டு விட்டது. இனிமேல் காலத்துக்கும் எப்படி உதிரிக ளாக வாழ முடியும்.

அந்த நெக்லஸ் நான் அம்மாவுக்காக வாங்கச் சொன்னது. அவர்கள் எப்படி எப்படியோ அச்சாபீசில் சேர்த்து வைத்தது. எனக்கும் தெரியாமல் அவ்வப்பொழுது சேர்த்து வைத்த காசு அது. அப்பொழுது நாங்கள் கொஞ்சம் நன்றாக இருந்தோம். அச்சுத் தொழில் நன்றாக நடந்தது.

அப்பொழுதுகூட தம்பி குடும்பத் தொழிலில் கவனம் செலுத்த மாட்டான். அவன் கற்பனைகள் எல்லாம் மேலே பறந்தன. எப்படியாவது படிக்க வேண்டும்; முன்னுக்கு வர வேண்டும் என்று நினைத்தான். அவன் அதிருஷ்டம் நல்ல நிறமும் பெற்றிருந்தான். அவன் இந்தக் குடும்பத்தில் பிறக்கத் தகுந்தவன் அல்ல என்று நினைத்தார்கள். உழைப்பாளிகள் குடும்பத்தில் அழகாக யாரும் இருக்க மாட்டார்கள் என்று தவ றாக நினைத்தார்கள். அவன் பெரிய இடத்தில் பிறந்திருக்க வேண்டியவன் என்று நினைத்தார்கள். அல்லது பெரிய இடத்து மருமகனாக ஆக வேண்டும் என்று நினைத்து வந்தார்கள்.

அவனுக்கு ஆரம்பத்தில் எல்லாம் வியப்பாக இருந்தது. நான் எப்படி மத்தியதரக் குடும்ப அளவுகளைக் கொண்டு உதி ரிகளை மதிப்பிட்டேனோ அதேபோல் அவன் மேல் நிலையைக் கொண்டு எங்களை அளக்கத் தொடங்கினான்.

மேல் நிலையில் அவர்கள் பேச்சு எதை வாங்குவது; எதைப் பார்ப்பது; எதைச் சாப்பிடுவது என்பதைச் சுற்றிக் கொண்டு இருந்தது. எங்குப் பார்த்தாலும் கவர்ச்சி. புதுமை கொஞ்சி விளையாடியது. அவர்கள் வீட்டுக்கு ரகரகமான பெண்கள் வருவார்கள். 'ஹாய் ஊய்' என்று குரல் கொடுக்கும் கூட்டம் அது. தன் வீட்டில் பெண்கள் புடவை கட்டிப் பார்த்த பழக்கம். அங்கே பொதுவாகப் பெண்கள் புடவையே கட்டு வதில்லை. எல்லாம் 'பாண்டு' மாட்டிக் கொண்டிருந்தன. அவர்கள் முகத்தில் கவலை என்பதே தெரிந்ததில்லை. மயிர்மு டியை வார வேண்டும் என்ற தேவைகூட ஏற்பட்டதில்லை. இங்கே அப்படி இல்லை. "உட்காரு உன் தலையிலே என்ன இவ்வளவு பேன்" என்று தலையிலே குட்டி உட்கார வைத்துத் தலை வாருவார்கள். அங்கே "பாப்" முடி வெட்டி நாய்முடிபோல அழகாகக் கத்திரிக்கப்பட்டிருந்தது. இங்கே பெண்கள் வாய் சிவக்க வேண்டுமானால் வெற்றிலை பாக்குப் போட்டுக் கொள்ள வேண்டும். அங்கே இதழ்கள் மட்டும் சிவந்திருக்கும். வாய் சிவக்காது.

தங்கள் ஆடைக்குத் தரும் மதிப்பை அவர்கள் தம் தாய்மொழிக்கும் தந்தார்கள். அவ்வளவு குறைத்துக் கொண்டார்கள். எவ்வளவு குறைத்துக் கொள்ள முடியுமோ அந்த அளவு குறைத்துக் கொண்டார்கள். ஆங்கிலம்தான் அவர்கள் நாவுக்குப் பழக்கம். அது அவர்கள் ஆங்கிலப் பள்ளிகளில் ஆடவரோடு பழகும்பொழுது கற்றுக் கொண்ட ஆங்கிலம். எதையுமே அதிக சிரமம் இல்லாமல் எடுத்துக் கொள்ளும் கூட்டம் அது.

தேவதைகள் வந்து போவதுபோல அவனுக்கு முதலில் இருந்தது. முதலில் கொஞ்சம் கூச்சப்பட்டான். பிறகு அவர்கள் கூச்சப்படும்படி அதிகம் பழக ஆரம்பித்தான். அவனும் சரளமாக ஆங்கிலம் பேசக் கற்றுக் கொண்டான். கல்லூரியில் படித்தபோது அவனுக்கு எழுதப்படிக்க மட்டும் தெரியும். அவர்களிடம் பேசித்தான் ஆங்கிலமே கற்றுக் கொள்ள முடிந்தது.

அங்கே பலரும் ஒருவரை ஒருவர் ஒதுக்கி வாழ்வதைப் பார்த்திருக்கிறான். அப்பாவும் மகளும் நெருங்கிப் பழகிப் பார்த்தது இல்லை. அம்மாவும் மகளும் ரொம்ப தூரத்தில் இருந்தார்கள். எப்பொழுதும் கும்மாளம் சிரிப்பு. வேளைக்கு ஒரு உடை. நேரத்துக்கு ஒரு உணவு, காரங்கள் அங்கே பல. ஏன் பலகாரம் என்ற பெயர் அமைந்தது என்று அங்குதான் தெரிந்து கொள்ள முடிந்தது. பசி என்றால் அதன் அர்த்தத்தை அகராதி கொண்டுதான் பார்க்க முடிந்தது. ஆளைக் கொண்டு பார்க்க முடியாது.

'வரி ஏய்ப்பு' என்பது அவர்கள் வட்டாரத்தில் பழகும் பேச்சாக இருந்தது. அது பழகிவிட்ட தொழில். எதையும் அவர்கள் விலைக்கு வாங்கும் சக்தி இருந்தது. சட்டத்தை வக்கீலை கொண்டு விலைக்கு வாங்கினார்கள். வைத்தியனை விலைக் கொடுத்து வாங்கினார்கள். யாரையும் எதையும் வளைத்துக் கொள்ளும் திறமை இருந்தது. லஞ்சம் கொடுப்ப தற்கும் பின்வாங்க மாட்டார்கள். அரசியல் தலைவர்களை அம்மாகண்ணுகளாக ஆக்குவது அவர்களே. பெரிய காண்டிராக்ட் எடுத்து நடத்துவார்கள். அதற்காக அப்பாவி அமைச்சர்களை விலை பேசி அவர்களை இறுக்கி வைத்து விடுகிறார்கள்.

மக்கள் பிரதிநிதிகளாக வரும் எம்.எல்.ஏக்கள் அவர்கள் தரும் பாராட்டுகளுக்கு எளிதில் இரையாகி விடுகிறார்கள். தேர்தல் என்றால் அவர்கள்தான் பணம் உதவுகிறார்கள். அவர்கள் பணத்தைக் கொண்டுதான் ஏழைகளின் வாக்கு களை விலை பேசி வாங்குகிறார்கள். அரசியல் தலைவர்கள் மக்களிடம் சமுதாய சம உடைமைக் கருத்துக்களைச் சொல்லி வாக்கு கேட்கிறார்கள். அவர்கள் அதற்குப் பயன்படுத்தப் படும் பணம் இந்த மேல் மட்டத்திலிருந்து வருகிறது. அந்த லட்சியத்தையே இந்தப் பணம் கொண்டு விலைக்கு வாங்கி விட்ட பிறகு அவர்கள் எப்படிச் செயலாற்ற முடியும்?

தரையில் கால் படிய வேண்டிய தேவை ஏற்பட்ட தில்லை. செருப்பு இடை நின்று தடுக்கிறது. அது மட்டும் ஒரு

கடை வைக்கும் அளவுக்கு, முன்னால் குவிந்து கிடந்தன. 'ஆளுக்கு ஒரு வீடு' என்பது போல் ஒரு கார் இருந்தது. அதன் பழுதுகளைப் பற்றித்தான் பேசுவார்கள். பெட்ரோல் விலை அதிகமாகி விட்டது என்பது நாகரிக அடையாளப் பேச்சு. வேறு பேசுவதற்கு என்ன இருக்கிறது. ஜாதகம், ஜோசியம் இதெல்லாம் அவர்களை வலைப்போட்டு பின்னிப் பிணைத் தன.

மொத்தத்தில் பார்க்கும்பொழுது அங்கே வாழ்க்கையின் லட்சியமே சுகத்தைத் தேடுவது என்பது ஆகிவிட்டது. வாழ்க்கை சுகத்திற்கே என்ற தத்துவத்தை அங்கே கடை பிடிக்க வேண்டிய சூழ்நிலை அவனுக்கு ஏற்பட்டது. திறமை யாக ஈட்டுகிறார்கள். தம்வரை தமக்கு வேண்டிய தேவை களைச் சரிபடுத்திக் கொள்கிறார்கள். நிம்மதியாக இருக்கிறார் கள். மேல் மாடியிலே தென்றல் காற்று வீசுவது இயற்கை தானே. நிலவொளி அங்கே தானே தெளிவாகத் தெரியும். மின்னும் நட்சத்திரங்கள் அங்கிருந்து பார்ப்பதற்கே தனி அழகுதானே. அவனால் நிலா வெளிச்சத்தில் தங்கி இருக்க முடிவதில்லை. மின்னும் நட்சத்திரங்களையும் அவன் விரும் பினான். அதைத் தேடியும் அவன் கற்பனை சென்றது.

போகட்டும், அவர்கள் வாழ்க்கையின் விவரங்கள் எல்லாம் நமக்கு எங்கே தெரியப் போகிறது.

அவன் அங்கிருந்து மறுபடியும் கீழே வந்தால்தான் உருப் பட முடியும். மேல் மட்டத்தில் அவனைத் திருத்த நீதி நூல்கள் இல்லை. அவர்கள் நீதி எல்லாம் பிறரை எப்படிச் சுரண்டுவது, பிறரை எப்படி விலை பேசி வாங்குவது. நீதியையும் நேர்மை யையும் விலைக்கு வாங்கக் கூடிய ஆற்றல் பெற்றவர்கள் நீதிகளைப் பற்றி எப்படிப் பேச முடியும்.

ஒரு கொடியில் இரண்டு மலர்கள். ஒன்று ஒரு பெண்ணின் கூந்தலில் இடம் பெற்றது; மற்றொன்று இதழ் சிதறிக் கீழே விழுந்து விட்டது. முன்னது மலர்ச்சி பெற்றது.

பின்னது தளர்ச்சி பெற்றது. கீழே விழுந்தது நான். மேலே இருக்கின்றவன் அவன். மறுபடியும் பழைய நிலைக்கு வர வேண்டும். நானும் என் நிலைக்குச் செல்ல வேண்டும். மறு படியும் நாங்கள் சகோதரர்களாக வாழ வேண்டும். எங்களுக்குள் வேற்றுமை இருக்கக் கூடாது. ஒரு தாய் வயிற்று மக்கள் நாங்கள். எங்களுக்குள் ஏன் இந்த வேற்றுமை பெருக வேண்டும். இதுதான் இந்த நாட்டின் கேள்வியும், எங்கள் வீட்டின் கேள்வியும்.

அவன் அம்மாகண்ணுவை நாடியது அவனுக்குப் பெரிய வீழ்ச்சி. அவளை அவன் தவறாகப் பயன்படுத்துகிறான். அவள் ஒழுக்கத்தைச் சிதைக்கிறான். சிதைந்து விட்ட வாழ்க்கை தான். அதை மேலும் நாசப்படுத்துவதற்கு அவன் துணை செய்கிறான். நான் அவளை உயர்த்த விரும்புகிறேன். ஒழுக்கங்கள் சிதைகின்றன. அவை ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். இந்த முயற்சியில் நான் இருக்கிறேன். மறுபடியும் அவற்றைக் கெடுப்பதில் அவன் இறங்கி விட்டான்.

விழுந்து விட்ட சமுதாயத்தை உயர்த்த வேண்டும். ஆனால் நான் நொண்டி. என்னைப் போலவே என் சூழ்நிலை ஊனமுற்றதாக இருக்கிறது. அவள் தன் பெருமையை இழந் தவள்; நான் என் பிறப்பில் குறைபாடுகள் கொண்டவன். நாங்கள் குற்றவாளிப் பட்டியலில் இடம் பெற்றவர்கள். ரங்கன் படம் பத்திரிகையில் வரவில்லை. ஆனால் பொது இடங்களில் விளம்பரப்படுத்தப்பட்ட குற்றவாளிகள் ஜாக்கி ரதை என்ற பட்டியலில் இடம் பெற்றான்.

அறுப்புக்காரக் கந்தனை யாரோ அடித்துப் போட்டு விட்டார்களாம். அவன் இந்தக் கடைக்காரர்களைத் தொந்தரவு செய்து கொண்டு இருந்தான். ஒரு தட்டான் கடையில் புகுந்து அவர்களிடம் வீண் வாதம் வைத்துக் கொண்டான். 'எடு' என்று கேட்டு இருக்கிறான். சாதுமிரண்டால் காடு கொள்ளாது என்பார்கள். அவர்களுக்குத் திடீர் என்று கோபம் வந்து விட்டது. மக்கள் புரட்சி உள்ளம் அவர்களிடம் இயல்பாய்

அமைந்து விட்டது. இந்த மத்திய தர மக்கள் எவ்வளவு காலம் இதைத் தாங்கி கொண்டு இருப்பார்கள். அவர்களிடம் மட்டும் என்ன வீரம் இல்லையா? ஏதோ சில கட்டுப்பாடுகளுக்கு அடங்கிச் சாதுவாக இருக்கிறார்கள். அங்கே அந்த கடையில் மூன்று பேர் இருந்தார்கள். கையில் அவர்கள் வேலை செய்யும் ஊது குழல் இருந்தது. அதைக் கொண்டே அவனை அடித்து நீட்டி விட்டார்கள். போலீஸ்காரர்கள் அதைப் பற்றி அதிகம் அக்கரை எடுத்துக் கொள்ளவில்லை. அவர்களால் அடக்க முடியாத ஒரு ரவுடியைச் சமுதாயம் பழித் தீர்த்துக் கொண்டது. அவர்களுக்குக்கூட ஒரு மனநிறைவுதான். அவர்கள் வேலை குறைந்து விட்டது. அப்புறம் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை.

அதற்கப்புறம் ரங்கனின் கொட்டமும் கொஞ்சம் அடங்கி விட்டது. சட்டம் அவனை அவ்வளவாகப் பாதிக்காது என்று நினைத்தான். ஆனால் பொது மக்கள் கொதித்து எழுந்தால் அவன் தலை தூக்க முடியாது என்பதைத் தெரிந்து கொண்டான்.

அந்த நெக்லசை என் தம்பி மனைவியிடம் சேர்க்க விரும்பினேன். நேரே பஸ் ஏறி அவள் வீட்டுக்குச் சென்றேன். அவளுக்கு என்னைப் பார்த்ததும் பயம் வந்து விட்டது. நான் திருடத்தான் வந்தேன் என்று நினைத்துக் கொண்டாள்.

''உங்கள் வீட்டில் தான் திருடப் போகிறேன்'' என்று முன்னால் சொன்ன சொற்கள் அவள் காதில் எதிரொலித்தன. எனக்காகவே வளர்த்த அல்சேஷியன் என்னை நோக்கி வேகமாகப் பாய்ந்து வந்தது. கால்கை இருப்பவர்களுக்குத்தான் கல் உதவி. எனக்கு என் கட்டைகளே போதும். அது எதிர்பார்க்கவில்லை. மனிதன் கட்டையோடு நடப்பான் என்று. அப்படியே அசந்து விட்டது. அவள் அதற்காகச் செலவு செய்த பணம் அத்தனையும் வீண் ஆகிவிட்டது. அது என்னைப் பிடுங்கி விடும் என்று எதிர்பார்த்தார்கள். என்னை ஒன்றும் பிடுங்கிக் குதறவில்லை.

"நீங்கள் இருக்கும்போது நாயே தேவை இல்லையே" என்றேன்.

"ஏன் திருடத் தானே வந்தாய்" என்று கேட்டாள்.

"திருடியதைத் திருப்பித் தர வந்தேன்" என்றேன்.

"குற்றம் செய்து விட்டு மன்னிப்புக் கேட்க வந்தாயா?"

"நான் ஒன்றும் சமயவாதி இல்லை மன்னிப்புக் கேட்க. சமயத்திற்குத் தக்கபடி நடந்து கொள்ள"

"இது உன் நெக்லஸ்தானே?"

"இது எனக்கு அளிக்கப்பட்ட நெக்லஸ்"

"அதை மீண்டும் உங்களுக்கே அளிக்க வந்திருக்கிறேன்"

"நீங்கள் தப்பி ஓட முடியாது"

"கோழையாக இருக்கக் கூடாது என்பதற்காகத் தானே இறைவன் காலை எடுத்து விட்டான். கோழைகள்தான் அஞ்சி ஓடி விடுவார்கள்."

"உங்களைப் போலீசில் ஒப்படைக்கப் போகிறேன். கையும் களவுமாகப் பொருள் உங்களிடம் இருக்கிறது. நீங்கள் அன்று திருடப் போவதாகச் சொன்னீர்கள். உங்கள் பின்னால் ஒரு கூட்டமே இருக்கிறது."

"வறுமை இருக்கும் வரை அந்தக் கூட்டத்தை ஒழிக்க முடியாது. உண்மைதான். அவர்களை ஒழிக்க வேண்டு மானால் நீங்களும் ஒரு படி கீழே இறங்கி வரவேண்டும். நீங்கள் சுகவாசிகள். அந்தச் சுகத்தைக் கொஞ்சம் விட்டுக் கொடுத்தால் ஏழைகளும் சுகப்படுவார்கள். அவர்கள் திருட வேண்டிய அவசியமே ஏற்படாது. அந்தக் கூட்டத்தை உங்க ளால்தான் ஒழிக்க முடியும். உங்கள் முயற்சி வெற்றி பெறட்டும்".

"எங்களை வாழ விடமாட்டீர்கள் போல இருக்கிறது"

“உங்கள் விருப்பம் போல் வாழ விடமாட்டோம்'' அது உண்மைதான். இந்த நாட்டு மக்களும் வாழ வேண்டும் என்று சொல்லுவோம். அவ்வளவுதான்.''

அந்த நேரத்தில் தம்பி இல்லை என்று தெரிந்தது. இருந்தால் அவன் எப்படியும் தலைகாட்டி இருப்பான். அவளுக்கு உண்மை உணர்த்தி இருப்பான்.

உண்மை. எது உண்மை? அது எப்படி அவன் சொல்ல முடியும். சொன்னால் அவன் நிலைமை என்ன ஆகும்.

“நான்தான் கொடுத்தேன்'' என்று அவனால் சொல்ல முடியும்?''

அது எப்படி அவன் எனக்குக் கொடுக்க முடியும்? பாசம் அவ்வளவு தூரம் வளர்ந்தால் பிறகு உறவு நீடிக்குமே. உறவு அற்றுப் போகப் பாடுபடும் முயற்சியில் இறங்கிவிட்ட தம்பி மனைவி அதை ஒப்புக் கொள்வாளா?.

பழைய நிலை குடும்ப ஒற்றுமை; இந்நாளைய நிலை குடும்ப வேற்றுமை. உறவுகள் வேண்டும் என்பது பழைய நிலை. உறவுகள் அற்றுப்போக வேண்டும் என்பது இந்நாளைய நிலை; தனிக்குடித்தனம் என்ற பெயரால் நடப்பது என்ன? சுயநலமாக வாழ்வது எப்படி என்று செயல்படுத்துவதுதான். ஒரு குடும்பத்தில் நாலு பேர் அண்ணன் தம்பி இருந்தால் ஒருவன் பெரிய உத்தியோகஸ்தன்; மற்றொருவன் சாதாரண நிலை; மற்றொருவன் முடம் இப்படித்தானே இருக்கும். படித்தவன் வசதி உடையவன் தனியாகப் பிரிந்து விட்டால் மற்றவர்கள் கதி. கூட்டுக் குடும்பத்தின் அடிப்படை இதுதான். இந்த நாட்டில் அனைவருக்கும் வேலை கிடைக்கும் என்று எப்படிச் சொல்ல முடியும். நாலு பேரில் இரண்டு பேருக்கு வேலை கிடைப்பதில்லை. நாட்டு நிலைமைதானே வீட்டு நிலையும். சொத்தைப் பங்கிட்டுக் கொள்ள வரும்பொழுது சுமையையும் பங்கிட்டுக் கொள்ள வேண்டாமா? சமுதாய உணர்வே இப்பொழுது செத்து வருகிறது. அதிலே

இந்தக் கூட்டுக் குடும்பங்கள் சிதைவதையும் ஒன்றாகக் கூறலாம். அண்ணன் தம்பிகளே ஒருவர் கஷ்டத்தை மற்றவர் தாங்காவிட்டால் இந்தப் பரந்த உலகத்தில் ஒருவர் கஷ்டத்தை மற்றவர்கள் எப்படித் தாங்க முடியும்?

இன்று சமுதாயம் மூன்று நிலைகளில் செயல்படுவதே இந்தப் பிரிவினை உணர்வுகளால்தான். மேல்நிலை, இடை நிலை, கடைநிலை. இந்த மூன்று நிலைகள் மாறிச் சமநிலை அடையும் முயற்சியில் வெற்றி பெற்றால் தவிர இந்த நாட்டுக்கு விமோசனம் இல்லை. இந்த வகுப்புப் பிரிவுகள் தான் குடும்பச் சிதைவுகளுக்குக் காரணம் ஆகின்றன. உரிமை வேண்டும்தான்; தனிமை வேண்டும்தான். ஆனால் முற்றிலும் அறுத்துக்கொண்டு போகின்ற அளவுக்கு இந்த வகுப்பு வேறு பாடுகள் நாட்டில் தோன்றிவிட்டன என்று என்னை எண்ணச் செய்தது.

உள்ளே சென்றவள் வர நேரம் பிடித்தது. நான் சும்மா இருந்தேன். அதனால்தான் இவ்வாறு எண்ண முடிந்தது. பின்னால் ஒரு ஜீப் வந்து நின்றது அது போலீசுகாரர்களுக் காகவே தயார் செய்யப்பட்டது என்பதைக் தெரிந்து கொண்டேன். அதில் "Police" என்று ஆங்கிலத்தில் எழுதப் பட்டிருந்தது. ஓடமுடியாத நொண்டியைப் பிடிக்க ஒரு வண்டியா? அரசாங்கத்துக்கு எவ்வளவு பெரிய நஷ்டம். நாலு ஆட்கள்; ஒரு சப்-இன்ஸ்பெக்டர், இரண்டு கான்ஸ்டே பிள்கள், ஒரு மோப்பம் பிடிக்கும் நாய். இதைக் கண்டதும் அல்சேஷன் ஓய்வு எடுத்துக் கொண்டது. பின் வாங்கிவிட் டது. திருடு என்றாலே அவர்கள் நாயோடு வருவது வழக்கம் ஆகிவிட்டது என்று நினைக்கிறேன்.

இவ்வளவு விரைவில் இவர்கள் எப்படி வந்தார்கள். எப்படி வரமுடியும்? ஏன் வரவேண்டும்? அவர்கள் வீட்டில் 'போன்' இருக்கிறது. அவர்கள் பேசினார்கள். அதனால் வர வேண்டி ஏற்பட்டது. என் கையில் நெக்லஸ் இருக்கிறது.

அதனால் நான் திருடன். இப்பொழுது எனக்கு விஷயம் விளங்கிவிட்டது.

மறுபடியும் அந்த உதிரிகளுள் நான் ஒருவனாக ஆக்கப் பட்டேன் என்பதை உணர்ந்தேன். எங்காவது திருடு நடந்தால் அங்கே வந்து ஆட்களைப் பிடித்துப் போவதைப் பார்த்திருக் கிறேன்.

அந்த சப்-இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"உன்னை ரயிலடியில் பார்த்திருக்கிறேன்."

"பயணிகள் இறங்கும் இடம்; ஏறும் இடம்" என்றேன்.

"அங்கே அல்ல; அந்தப் பொரிக்கிகளின் கும்பலில்"

"அங்கே தனியாக யாரையுமே பார்க்க முடியாது. ரயில டியில் எப்பொழுதும் கும்பலாகத்தான் இருக்கும்"

"அதைச் சொல்லவில்லை. நீ ரவுடி ரங்கன்"

"நான் அல்ல. அது என் நண்பன்"

"நண்பன். நீயும் அவனும் கூட்டாளிகள் தானே"

"பாட்டாளிகள் எல்லாம் என் கூட்டாளிகள்தான்" என்றேன்.

"நீ என்ன கம்யூனிஸ்டா"

"ஏழை கம்யூனிசம் பேசிப் பயனென்ன"

"பின் பணக்காரனா பேசுவான். சரியான ஆளப்பா நீ" என்றார்.

"இந்த நாட்டில் எல்லோரும் பேசப் போகிறார்கள் அதற்கு உரிய காலம் நெருங்கிவிட்டது."

"நீ என்ன நக்சலைட்டா"

"நொண்டியைப் பார்த்துக் கேட்கும் கேள்வியா இது. பிர மாதம் நீங்கள் கேட்பது."

"அவர்களை எல்லாம் கண்காணிப்பது எங்கள் கடமை"

அது சரி அவர்கள் இனித் தோன்ற மாட்டார்கள். நாட்டில் ஜனநாயகம் வெற்றி பெற்றுவிட்டது. இனி கம்யூனிசமும் ஜனநாயக அடிப்படையில் இந்த நாட்டில் கால் ஊன்றப் போகிறது இப்படியே மக்கள் பஞ்சம், பட்டினி, கொலை, திருடு இதிலேயே ஆழ்ந்து விடுவார்கள் என்று எதிர்பார்க்கிறாயா? அரசாங்கம் ஏழ்மையை விரைவில் போக்க முயற்சி செய்கிறது."

"அந்த ஏழ்மை எங்கே இருக்கிறது என்று நினைக்க வேண்டும். அது இந்தப் பங்களாக்களில் தான் இருக்கிறது. அவர்கள் அறிவில் ஏழ்மை குடி கொண்டிருக்கிறது. அதை முதலில் போக்க வேண்டும்."

"ஏழையாகப் பிறப்பது குற்றம் என்று எவனோ சொன்னானாம். அது ஏழ்மையே இல்லாத நாட்டில் பேசிய பேச்சு. தேவைக்குமேல் சம்பாதிப்பது குற்றம். அந்த நோய்தான் இந்த மேல் மட்டத்தில் மிகுதியாகப் பரவிக் கிடக்கிறது. இதை இவர்கள் உணரவேண்டும்."

"தேவை இருந்தால் தவறு செய்யலாம். தேவையே இல்லாமல் தவறு செய்கின்றவர்களால் தான் இந்த நாட்டின் நல்வாழ்வு பாதிக்கப்படுகிறது. லட்சம் லட்சமாக லஞ்சமும் ஊழலும் நடத்தினார்களே அவர்கள் ஏழைகளா? அந்தப் பணம் அவர்களுக்குத் தேவை இல்லை. அவர்கள்தான் குற்றவாளிகள்."

"எங்கள் கூட்டத்தைக் குறிப்பிட்டாயே அவர்கள் தேவைக்குமேல் எப்பொழுதுமே திருடியதில்லை. தேவைக்கு மேல் தவறு செய்யவே மாட்டார்கள். இந்த நெக்லஸ் எங்களுக்குத் தேவையில்லை. இதை ஏன் நாங்கள் திருடப் போகிறோம். இது திருடியது அல்ல."

"களவு போன நெக்லஸ் அது. அது உன் கையில் இருக்கிறது. அந்த அம்மாவுக்குத் தெரியாமல் யாரோ எடுத்துப்

போய் இருக்கிறார்கள். அது உன் கையில் இருக்கிறது. அப்பொழுது நீதான் திருடன்.''

''அது யாராவது என் கையில் கொண்டு வந்து கொடுத்திருக்கலாம். அல்லவா''.

''அந்த ஆளை நீ காட்டிக் கொடுக்கும் வரை நீதான் திருடன். அதுதான் சட்டம்''.

அந்த சப்-இன்ஸ்பெக்டர் சட்டம் தெரிந்தவர். அறிவாளி. முரட்டுத்தனம் அவரிடம் இல்லை. நான் நொண்டி என்பதால் என்னிடம் பொறுமையாகப் பேசினார். உண்மையில் நான் அவரைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

மேல் நாட்டிலேதான் குற்றவாளியைக் கண்ணியமாக நடத்துவதாகக் கேட்டு இருக்கிறேன். நம் நாட்டில் இதுவரை அப்படி நடத்தியதாகப் பத்திரிகையில் செய்தி வரவில்லை. அப்படி நடத்த வேண்டும் என்று அமைச்சர்கள் பேசும் பேச்சே செய்தியாக வருகிறது. ஒரு வேளை அந்தச் செய்தியை அந்த சப்-இன்ஸ்பெக்டர் படித்து இருக்கலாம். மனம் மாறி இருக்கலாம்.

''குற்றமும் தண்டனையும்' இந்த நாட்டில் சரியாக இல்லை என்பதை உணர்ந்தேன்.

சட்டத்தின் பிடியில் அகப்பட்டால்தான் ஒருவன் குற்றவாளி ஆகிறான்; அது வரை அவன் குற்றவாளி அல்ல. குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதில்லை; சட்டத்தின் பிடியில் அகப்படுபவர்கள் மட்டும் தண்டிக்கப்படுகிறார்கள்.

சட்டப் பிடியில் அகப்பட்ட பிறகு நான் குற்றவாளிதான். மற்றொரு ஆளைக் காட்டிக் கொடுக்கிறவரை நான் குற்றவாளிதான். யாரைக் காட்டிக் கொடுப்பது.

அன்றுதான் அங்கே திருடுவதற்காக அந்தப் பக்கம் ரங்கன் வந்திருந்தான். அவன் அம்மாகண்ணுக்கு ஒரு

நெக்லஸ் கொண்டு வருவதாக உறுதி கூறி இருந்தான். அவன் அந்தப் பக்கமாக நோட்டம் விட்டான்.

போலீசு ஜீப்பு அங்கு இருப்பதைக் கண்டான். நான் அவர்கள் மத்தியில் விசாரிப்பதைப் பார்த்தான். நான் நெக்லஸ் திருடியதாக அவனுக்கு யாரோ அங்கே சொன்னார்கள்.

அவன் வேறு விதமாக நினைக்கத் தொடங்கினான். நானும் நெக்லஸ் திருடி அதை அவளுக்குத் கொடுத்து நிலைத்த வாழ்வை ஏற்படுத்திக் கொள்ள முயன்றாதாக நினைத்தான்.

அவனால் இந்தச் நிலையைப் புரிந்து கொள்ள முடிய வில்லை. அவன் என்னிடம் நெருங்கினான்.

அவனைப் பார்த்ததும், அவனை அழைத்துப் பேச வேண்டும் என்று நினைத்தேன். அவனிடம் பேச வேண்டும் என்று கூறினேன். போலீசார் அனுமதித்தார்கள்.

“ரங்கன்! இந்த நாட்டில் திருடர்களைக் கண்டுபிடிப்பது இல்லை. திருடப்பட்ட பொருளை வைத்துத்தான் ஆட் களைப் பிடிக்கிறார்கள்” என்றேன்.

“அதுதான் பார்த்தேன். உனக்கு எப்படி இந்தப் புத்தி வந்தது என்று”

“இதைத் திருடிய ஆள் கிடைக்கிற வரை நான்தான் திருடன்.”

“அவன் கிடைப்பான் என்று நம்புகிறாயா?”

“அவ்வளவு துணிவு அவனுக்கு எப்படி வரும்; வர மாட்டான். நான் அவனுக்காகச் சிறை ஏற்கத் தயார் செய்து கொள்ளவேண்டியதுதான்.”

“ஒருவேளை அவனே வந்து ஒப்புக் கொண்டால்”

“அவனை ஒப்புக் கொள்ள நான் விடமாட்டேன். அதனால் அவனுக்கு நன்மை இல்லை. நான் காலில்லாத நொண்டி. நான் இங்கு இருந்து சாதிக்கப் போவது என்ன? நியாயமாக நொண்டி இருக்க வேண்டிய இடம் சிறைதான். அவனால்தான் எங்கேயும் அசையாமல் இருக்க முடியும்.”

அதற்குள் நாங்கள் லாக்கப்பை நெருங்கி விட்டோம். ரங்கனும் உடன் வந்தான். அவனைக் கண்டால் போலீசுக்கே ஒரு மரியாதை, அவனிடம் அவர்களுக்கு நெருங்கிய பழக்கம்.

லாக்கப்பில் தனியாக என்னைச் சந்திக்க ரங்கனை அனுமதித்தார்கள்.

“எனக்கு ஒரே கவலை”

“என்னண்ணே என்னால் முடிந்தவரை செய்யாமல் இருப்பேனா”

“அம்மாகண்ணுதான். அவள் மறுபடியும் லாட்ஜீகளுக்குப் போகக் கூடாது. அவளை நிராதரமாக விட்டு விட்டுப் போகிறேன். அதுதான் எனக்கே கவலையாக இருக்கிறது.”

“அதெல்லாம் நீ ஒண்ணும் உள்ளே போக மாட்டே நான் பார்த்துக்கிறேன்.”

“வக்கீல் வைத்து ஆடினாப் போச்சு. உண்மையிலே நீ திருடி இருக்க முடியாது”

“சொத்து என் கையில் தானே இருக்கிறது. இருந்தது.”

“அது யார் உன் கையிலே கொடுத்தது”

“அம்மாகண்ணு”

“அவள் கையிலே யார் கொடுத்தது?”

“அதுதான் சொல்லக் கூடாது. சொல்ல முடியாது”

“அவள் யார் கொடுத்ததாகச் சொன்னாள்”

"நீ கொடுத்தாய் என்று தான் சொன்னாள்"

"அப்படீன்னா நானேதான் திருடன். நீங்கள் வெளியே போக வேண்டியதுதான். அந்த அனாதை அம்மாகண்ணுவைக் காப்பாற்றுவதற்கு நீங்கள் கட்டாயம் அவசியம் வெளியே இருக்க வேண்டியதுதான். நீ உன் தங்கைக்குச் செய்ய வேண்டிய கடமை. அவள் என் மீது எவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறாள். பார்த்தாயா அண்ணே! அதைக் கட்டாயம் நான் காப்பாற்றியாக வேண்டும். நான் கொண்டு வந்து கொடுத்தேன் என்று சொன்னால் அவள் என் ஆற்றலில் நம்பிக்கை வைத்திருக்கிறாள் என்று அர்த்தம். கொடுத்தவளே உங்களிடம் உண்மையைச் சொன்ன பிறகு நீங்கள் ஏன் உள்ளே போக வேண்டும். அந்த அனாதை அம்மாகண்ணுவைக் காப்பாற்றுவதற்கு நீ கட்டாயம் அவசியம் வெளியே இருக்க வேண்டியதுதான். நீ உன் தங்கைக்குச் செய்ய வேண்டிய கடமை. இதை நான் ஒப்புக் கொள்ளமாட்டேன்."

"நீ தான் கொடுத்தாய்; நான் இல்லை என்று மறுக்கவில்லை. உன்னை நான் காட்டிக் கொடுக்க விரும்பவில்லை. நீ அம்மாகண்ணுவுக்கு அவசியம் தேவைப்படுகிறாய். எனக்கும் அவளுக்கும் உறவு இருக்கிறது. ஆனால் அவள் என்னை விரும்பவில்லை. இது ஒரு புதுவகையான உறவு. இதனால் எந்த நன்மையும் இல்லை. அவள் உன்னை விரும்புகிறாள். ஆனால் உன்னிடம் உறவு கொள்ள விரும்பவில்லை. அவளை என்னை விரும்பச் சொல்ல முடியாது. அவள் உன்னை உறவு கொள்ளச் செய்யமுடியும். நீ தான் அவளுக்கு ஏற்றவன். அவளுக்கு ஒரு கவுரவமான வாழ்வைத் தர வேண்டுமானால் நீதான் அவளுக்கு ஆதரவு தரவேண்டும். ஆனால் நீ சொல்லும் உறவை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். நாலு பேர் அறிய அவளை மணம் செய்து கொள்ளவேண்டும்."

"அவள் நகரத்துக்கு வந்ததே ஒரு ஆம்படையானைத் தேடி. அப்படித்தான் அவள் சொல்லி இருக்கிறாள்.

அவளுக்கு இப்பொழுதுதான் நீ கிடைத்திருக்கிறாய். எனக்கு ஒரு சந்தர்ப்பத்தைக் கொடு. நீங்கள் எல்லாம் அடிக்கடி போய் வருகிற அத்தச் சிறை எப்படி இருக்கிறது என்று அதையும் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இந்த அரிய சந்தர்ப்பத்தை நான் இழக்க விரும்பவில்லை. நீ அதைத் திருடிக் கொடுக்க வில்லை. அது உன்னால் முடியாது. அவள் நீ திருடியதாகச் சொன்னது அவள் உன்னிடம் வைத்த மதிப்பினால். அவள் உள்ளத்தில் நீ இடம் பெற்றிருக்கிறாய். நெக்லஸ் கொடுத்தால் அது உன்னால் கொடுக்கப்பட வேண்டும். அதை நீ அவ ளுக்கு உன் கையால் அணிய வேண்டும். அதைத்தான் அவள் தனக்குப் பெருமையாக நினைத்திருக்கிறாள். அது அவள் இப்படி நினைத்திருக்கிறாள். அதனால்தான் அவள் அப்படிச் சொல்லி இருக்கிறாள்.''

அங்கிருந்த கான்ஸ்டேபிள் ''என்னப்பா ஏதோ உங்களுக்குள் பேச்சு''

''இது எங்கள் குடும்ப விவகாரம்'' என்றேன். அவ்வாறு கேட்டது அதே பழைய கான்ஸ்டேபிள்தான். ரயிலடியில் நானும் என் தம்பியும் பேசிக் கொண்டிருந்தபோது குறுக் கிட்டான். ஆனால் அன்று அவன் அதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அப்பொழுது சிரித்தான். இப்பொழுது சிரிக்க வில்லை.

''என்னப்பா அப்பேர்ப்பட்ட குடும்ப விவகாரம்; என் கிட்டே சொல்லக் கூடாதா''

''என் தங்கையை இவருக்குக் கொடுக்க நிச்சயம் செய்து விட்டேன். அவருக்குக் கலியாணம் செய்துவிட்டு உடனே உள்ளே வந்து விடுகிறேன். அதற்கு மட்டும் உத்திரவு கொடுக்க வேண்டுகிறேன்.''

''உனக்கு ஜாமீன் கொடுக்க வேண்டுமே''

''அது என் தங்கையால் முடியும். அவளுக்கு ஒரு மாஜிஸ்ட்ரேட்டு தெரியும். அவள் வந்தால் அவளால் அது முடியும்'' என்றேன்.

அதற்குள் என் தங்கை வந்தாள். அதுதான் அம்மா கண்ணு. அவள் கண்ணகி போலக் கொதித்து எழுந்தாள். யார் உங்களைத் திருடன் என்று சொன்னது. "கள்வனோ என் அண்ணன்". அவளைக் கத்தி நடிக்கச் சொன்னால் அவள் கத்தி இருப்பாள்.

"யார்'யா சொன்னது அவர் திருடினார் என்று? அந்த நெக்லசைக் கொண்டு வந்து வை. அதன் சொந்தக்காரி வரட்டும் நான் கேட்கிறேன்" என்றாள்.

எனக்குப் பழைய பாண்டியன் அவைக்களம் நினைவுக்கு வந்தது.

"கள்வனோ என் கணவன்?" என்று கதறினாள் அந்தக் கண்ணகி. பாண்டியன் அவைக் களத்து முன்னால் நின்றாள். கொண்டுவா அந்தச் சிலம்பை என்று கேட்டாள். அதை உடைத்தாள். அதிலிருந்து மாணிக்கப் பரல் தெறித்து அந்த மன்னன் வாயில் பட்டது. நீதி பிறந்தது. அவள் நீதியை நிலை நாட்ட வந்தாள்.

நான் சொன்னேன். "இங்கே நீதி தேவை இல்லை. எது நல்லதோ அதுதான் நீதி. உன்னை உண்மையைச் சொல்ல அழைக்கவில்லை. உண்மையை ஏற்றுக் கொள்ளத்தான் அழைத்தேன். நீதி வேறு; உண்மை வேறு. நீதிக்காக நீ போராட வேண்டியது இல்லை. உண்மைக்காகப் போராடு."

எது உண்மை? அதை வெளியே சொன்னால் என்ன நன்மை? எண்ணிப்பார். எது நன்மை தருகிறதோ அதுதான் உண்மை. நீ என்னிடம் சொன்ன உண்மை என்ன? ரங்கன் தானே கொண்டு வந்து கொடுத்தான்?. இப்பொழுது நீ எப்படி மாற்றிச் சொல்ல முடியும்? அதை அவன்தான் கொண்டு வந்து கொடுத்தான். ஆனால் அந்த உண்மை போலீசுக்குத் தேவை இல்லை. நகை என்னிடம் இருந்தது. நான் குற்றவாளி. நான் வேறு யாரையும் காட்டிக் கொடுக்காதவரை நான்தான் குற்ற வாளி. நீ அவசரப்பட வேண்டாம். என் தங்கை என்

பேச்சைக் கேட்டு நடப்பாள் என்று நம்புகிறேன். அவள் மறுத்துப் பேசமாட்டாள் என்று நினைக்கிறேன். நான் ஜாமீனில் வெளியே வரவேண்டாம். அதற்காகத்தான் உன்னைக் கூப்பிட்டேன். நீ போய் உன் பழைய வாடிக்கைக் காரரை அழைத்துவா. அது செய்தால் போதும்.''

அவளால் மறுத்துப் பேச முடியவில்லை.

''எப்படியோ நீ வெளியே வந்தால் போதும்'' அது தான் அவள் சொன்னது.

நான் வெளியே போய் என்ன செய்யப் போகிறேன். நான் யாருக்காக வாழப்போகிறேன். அவள் திருமணத்தைப் பார்த்து விட்டு மறுபடியும் நான் உள்ளே போகவே விரும்பு கிறேன். இந்தச் சமுதாயத்தில் எனக்கு என்ன வேலை இருக்கிறது? எனக்கு என்று இந்த உலகத்தில் கண்ணீர் வடிக்க என் தங்கை ஒருத்தியைத்தான் கண்டேன். அவள் இனி உதிரி யாக வாழத் தேவை இல்லை.

அடையாளம் காட்ட முடியாத அந்தஸ்துக்காரர்களுக்கு அவள் இனிப் பயப்பட வேண்டிய இல்லை. அவளும் சமூ கத்தில் தலை நிமிர்ந்து வாழக்கூடிய தகுதி பெற்றால் அது போதும்.

அதற்குள் என் அம்மா ஓடோடி வந்தாள்.

''அடப்பாவி'', இதற்காகவா உன்னை ஆளாக்கினேன், நீ ஒரு மனிதனா?'' என்று கேட்டாள்.

''இல்லை அரை மனிதன்'' என்று சொன்னேன். ஆரம் பத்தில் கதைத் தொடக்கத்தில் உங்களுக்கு என்னை அறிமுகப் படுத்தும் பொழுதே சொன்னேனே. அந்த வாசகத்தைத்தான் இப்பொழுது அம்மாவிடம் சொன்னேன்.

''இந்த உலகத்தில் என்னைப்போல் அரை மனிதர்கள் இருக்கிறார்கள், ஆடை இல்லாத மனிதன் அரை மனிதன் என்று கேள்விப்பட்டு இருப்பாய். வாழ வழி இல்லாத மனி

தனும் அரை மனிதன்தான். கால் இல்லாத மனிதனும் அரை மனிதன்தான். உழைத்துச் சாப்பிட முடியாத என்னைக் காப்பாற்ற வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு; அதற் காகத்தான் அவர்கள் என்னை விருந்தாளியாக வைத்திருக் கிறார்கள்.''

''உனக்கு எப்படிடா மனம் வந்தது அதைத் திருட ''யார் அவள்தானா அம்மாகண்ணு?'' என்று போனவளை நிறுத்திக் கேட்டாள்.

''அந்தக் கழிசடைக்காகத்தான் இதைத் திருடினாயா?''

என்ன அழகான வார்த்தை. அவளுக்குச் சூட்டிய பட்டம் 'கழிசடை' எனக்குள் சிரித்துக் கொண்டேன்.

''அவள்தான் என்னை ஜாமீனில் விடப் போகிறாள்'' என்றேன்.

''விடுவாள். உன்னை அவள் தன் கையின் கீழே போட்டுக் கொண்டு.''

''ஊனமுற்றவருக்கு ஆதரவு தருகிறாள்; அதை எப்ப டிம்மா மறுக்க முடியும்?''

''அதைவிட நாக்கைப் பிடுங்கிச் செத்துப் போகலாம். ஒரு முழம் கயிறு.''

''அப்படி என்றால் நீங்களும் அப்பாவும் எப்பொழுதோ பிணமாகிக் கிடக்க வேண்டியதுதான்.''

''அப்டீன்னா''

''அவள்தான் உங்களுக்கு மாதா மாதம் மணியார்டர் செய்தாள். அப்பாவுக்குக் கண்ணிலே காட்டிராக்ட் வந்ததே அப்பொழுது யார் மணியாடர் அனுப்பியது''.

''தம்பி''

''அவன் பெயரில் வந்தது. அது அவள் அனுப்பியது.''

“அடப்பாவி”

“யாரை’ம்மா சொல்றே”

“யாரைச் சொல்றதுன்னுதானே தெரியவில்லை”

“அம்மா யாரையும் அவர்கள் செய்கிற தவறை வைத்து முடிவு செய்யக் கூடாது. அவர்களால் பிறர்க்கு நன்மையா தீமையா என்பதை வைத்துத்தான் முடிவு செய்ய வேண்டும். ஒவ்வொருவரும் உயிரோடு வாழவேண்டுமானால் ஏதாவது தவறு செய்யத்தான் நேர்கிறது. தவறு செய்யத்தான் வேண்டும். ஆனால் தேவைக்கு மேல் தவறு செய்யக் கூடாது. அவள் அந்தத் தவறுகள் செய்யாவிட்டால் உங்கள் இருவரையும் காப்பாற்றி இருக்க முடியாது. நீங்கள் இரண்டு பேரும் மானம் கெட்டு உங்கள் மருமகளிடம் போய் நிற்க வேண்டும். அவள் கையேந்தி நிற்க வேண்டும். அவள் வளர்த் திருக்கும் அல்சேஷியன் நாய் உங்கள் இடத்தை உங்களுக்குக் காட்டி இருக்கும். ஒரு சில தவறுகள் செய்தாலே அவர்கள் கெட்டவர்கள் என்று நினைக்கிற பழக்கும் உங்களுக்கு ஊறிவிட்டது.”

“நான் பழகிய கூட்டம் தவறிலேயே வாழ்கிறவர்கள். அவர்களிடம் மிக உயர்ந்த பண்புகளைக் காண முடிந்தது. யாரும் தேவைக்கு மேல் தவறு செய்யமாட்டார்கள். ஆனால் தம்பி தேவைக்கு மேல் தவறு செய்யப் பழகிவிட்டான். அவன் மிக நல்லவன்; அவன் மேல் எந்தக் குறையும் காணமுடியாது. உங்கள் மருமகள் படித்தவள்; பண்பு உள்ளவள், ஒழுக்கத்தில் உயர்ந்தவள். அவளை நீங்கள் மதிப்பீர்கள். அவள் மிக உயர்ந்த குடும்பத்தைச் சார்ந்தவள். எந்தத் தவறும் செய்யாதவள். ஆனால் அவள் யாருக்காவது நன்மை செய்கிறாளா? அவளால் இந்தச் சமூகத்துக்கு எந்த நன்மையாவது உண்டா? நீங்கள் பட்டினியால் வேதனைப் படும்பொழுது அவள் வந்து நின்றாளா?”

''அப்பாவுக்கு வேலை இல்லை; கண்ணில் ஒளி இல்லை. அவள் உங்களுக்கு வாழ்வில் ஒளி தந்தாளா? அவளால் யாருக்கு நன்மை? அவர்கள் வண்டிச் சக்கரம் என் காலைப் பிரித்து நீக்கிவிட்டது. என்னை உழைக்க முடியாமல் செய்து விட்டது. அவர்கள் பணத்தால் அதைச் சரிப்படுத்த முடிந்தது. அதைக் கொண்டு அவனைப் படிக்க வைத்தோம். அவனையும் அவள் அழைத்துக் கொண்டு போய் விட்டாள். அவளை இந்தக் 'கழிசடை' நீர்தான் காப்பாற்றினாள். அது தான் பயிர்க்கு உரம் சேர்க்கிறது. செடி கொடிகள் வளர உதவுகின்றது. அவள் அசல் கழிசடை நீர்தான். அதனால்தான் அவள் உங்களைக் காப்பாற்ற முடிந்தது.

அப்பொழுது அந்த உண்மையைச் சொல்லி இருந்தால் நீங்கள் அந்தப் பணத்தை வாங்கி இருக்கமாட்டீர்கள். உங்களுக்கு யார் ஒரு காசு தந்திருப்பார்கள். உங்களுக்கு எந்தத் தவறும் செய்யத் தெரியாது. மத்தியதரக் குடும்பத்தில் பிறந்து விட்டீர்கள். ஒருவர் பொருளுக்கு ஆசைப்பட மாட்டீர்கள். மிஞ்சுவது என்ன. நீங்கள் எங்காவது வீட்டு வேலை செய்து பிழைத்திருக்க வேண்டும். உங்கள் உடலை வளைத்து வருத்தி எப்படியாவது காலம் கடத்தி இருப்பீர்கள். அந்தக் கிழவர் இந்த நாட்டுக்கு ஒளி வழங்கும் எழுத்துகளைக் கூட்டும் அவர் வாழ்வு என்ன ஆகி இருக்கும்? அதனால் யாரையும் அவர்கள் தவறுகளைக் கொண்டே நல்லவர்கள் கெட்டவர்கள் என்று சொல்லக் கூடாது. அவர்களால் இந்த உலகத்துக்கு நன்மையா தீமையா என்றுதான் பார்க்க வேண்டும். தவறுகளைத் திருத்திவிடலாம். ஆனால் சுரண்டலைத் தடுக்க முடியாது. அவர்கள் நல்ல குணம் அவர்களுக்குத்தான் நன்மை'' என்று அம்மாவிடம் என் உள்ளக் குமுறலை எல்லாம் கொட்டி அவள் மனத்தை மாற்றினேன்.

'அப்படி என்றால் உனக்கும் அவளுக்கும்.''

''தொடர்பு இல்லை; உறவு இருந்தது. அது அவள் தங்கை; நான் அண்ணன் என்பது; ஆனால் தவறான

முறையில் நான் அவளை விரும்பியது இல்லை. அவளும் என்னை விரும்பியது இல்லை.''

''யார் யாரோ எப்படி எப்படியோ கதை கட்டி இருப் பார்கள். காதல் புகுத்தாவிட்டால் கதையே அமைக்க முடியாது. அது உண்மைதான். இப்பொழுது அவளுக்குக் காதலை வைத்திருக்கிறேன். இனிமேல்தான் கதையே முடியப் போகிறது'' என்றேன் நான்.

அது நல்ல காவல் நிலையம். பண்பட்ட போலீசுக்கா ரர்கள் இருந்தார்கள். எங்களைப் பேசவிட்டார்கள். அவர்கள் அதில் தலையிடாமல் இருந்தார்கள். இப்பொழுது நாடு இந்த வகையில் மிகவும் முன்னேறுகிறது என்பதைக் கண்டு எனக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது.

குற்றவாளிகள் என்றால் ஒதுக்கப்படுகிறவர்கள். அவர்கள் அவமானத்துக்கு ஆளாக வேண்டியவர்கள் என்ற தவறான கருத்து எப்படியோ உருவாகிவிட்டது. அவர்கள் தண்டிக்கத் தக்கவர்கள்; ஆனால் அவமானத்துக்கு உள்ளாக வேண்டியவர்கள் அல்ல.

பிரபலஸ்தர்கள் கையில் விலங்கிடப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டவர்கள் என்ற செய்தியைப் பிரபலப்படுத்தி னார்கள். அது தண்டனை அல்ல. அவமானத்துக்கு உள்ளாக்குவது. ஓடிவிடக் கூடிய வாய்ப்பு இருந்தால் கையில் அல்ல காலில் விலங்கிடலாம். அவமானப் படுத்துவதற்காக விலங்கிடப்படுவது அவ்வளவு நாகரிகமாகப் படவில்லை. என்னைப் பொறுத்தவரை என் கால்களுக்கு விலங்கு தேவை இல்லை. அந்த வகையில் நான் கவுரவமாகத்தான் நடத்தப் பட்டேன். அதற்கு என் இல்லாத கால் உதவியது. அதைத்தான் வாழ்த்தினேன்.

அம்மா அவள் கதையைக் கேட்டாள். ஆனால் முழுக் கதையைச் சொல்லவில்லை. அவர்களுக்கு வேண்டிய அள வுதான் சொன்னேன்.

"அப்பா உன் முகத்தில் விழிப்பதாக இல்லை" என்றார்.

"அப்படித்தான் ஒவ்வொரு அப்பாவும் இந்தக் காலத்தில் அவசரப்பட்டுச் சொல்லி விடுவார்கள். எனக்குத் தெரியும் அவர் வரமாட்டார் என்று"

"அவன் எக்கேடு கெட்டுத் தொலையட்டும் எனக்கு என்ன" என்றுதான் சொல்லுகிறார்.

"இப்படித்தான் ஒவ்வொரு தந்தையும் இப்பொழுது பொறுப்பில்லாமல் நடந்து கொள்கிறார்கள். அதில் அவர் ஒன்றும் விதிவிலக்கல்ல."

"முன்னால் அவன் தன்னை வேலைக்காரன் என்று சொன்னதை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இப்பொழுது அவர் என்னைத் திருடன் என்றே நம்பிவிட்டார்; அதை நான் தாங்கிக் கொள்ளவேண்டும்."

"அப்படீன்னா நீ திருடவில்லையா? அவளுக்காக அதை நீ திருடித் தரவில்லையா? அது அவளிடம் தான் இருந்ததாமே"

"அவளிடம்தான் இருந்தது. அதை ரங்கன் அவளுக்குக் கொடுத்தான். அதை அவள் என்னிடம் கொடுத்தாள்."

"அப்படியானால் ரங்கன்தான் திருடினான். அவன் உள்ளே போகட்டும்."

"அவன் உள்ளே போய்விட்டால் அம்மாகண்ணுவின் கதி? உன் மகன் தான் அவளை வைத்துக் கொள்ள நேரிடும்."

'பளீர்' என்று ஒரு அறை என் கன்னத்தில் விட்டாள்.

"அம்மா! இது மூன்றாவது அறை. ஏசுநாதர் இரண்டு கன்னத்தைக் காட்டச் சொன்னார். மூன்று முறை அடிவாங்க வேண்டும் என்று அவர் எண்ணிப்பார்த்து இருக்கமாட்டார். மறுபடியும் இயேசு பிறந்தால் அவரிடம் இதைத்தான்

சொல்வேன். மறுபடியும் அவர் பிறக்கப் போவதாகக் தான் சொல்லிக் கொள்கிறார்கள்.''

''அவளை என் மகன் வைத்துக் கொள்வானா? ஏண்டா அந்த அளவுக்கு நீ கெட்டுவிட்டாயா?''

''இல்லேம்மா அப்படி உலகம் பேசும். அவள் என்னோடு இருப்பாள். அப்பொழுது உன்னைப்போல் இருக் கிறவர்கள் அப்படித்தான் பேசிக்கொள்வார்கள். அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க வேண்டும். அது என் தங்கைக்குச் செய்யவேண்டிய கடமை; அதனால் தான் அவன் வெளியே இருக்கவேண்டும்.''

''பழி ஒரு இடம்; பாவம் ஒரு இடமா! இதை நான் ஒருக் காலும் ஒப்புக் கொள்ளமாட்டேன். நீ வெளியே வந்துதான் ஆகவேண்டும்''.

'நான் வெளியே வந்து ஆக வேண்டியது இல்லை. அதை நான் உணர்கிறேன்''

''ஏசு சிலுவையில் அறையப்பட்டாரே ஏன் தெரியுமா?''

''அவரை யாரும் காப்பாற்ற முன் வராததால், அவள் அன்னை மரி சும்மா இருந்துவிட்டாள்.''

''இல்லே'ம்மா மற்றவர்கள் பாவத்தைப் போக்க''

''அதற்காக நீ சிறை செல்லுவதை நான் ஏற்க முடியாது''

''உங்களால் அது முடியாது; தம்பி உன்னை விட்டுப் பிரிந்தான் உன்னால் தடுக்க முடிந்ததா? மேலே போகும் பொழுது உன்னால் தடுக்க முடியாது. கீழே விழும்போதும் உன்னால் தடுக்க முடியாது.''

''அவன் மேலே போனால் ஏன் தடுக்க வேண்டும்?''

''சம நிலைதான் என்றைக்கும் நல்லது. ரொம்பவும் ஒரு சிலர் மேலே போவதால்தான் பலர் கீழே போகவேண்டி ஏற்ப

டுகிறது; மற்றவர்கள் கீழே போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அவன் மேலே போவதைத் தடுக்கவில்லை. நீங்கள் தாழ்ந்துவிட்டபோது அவன் வந்து உங்களைத் தாங்க வில்லை. இப்பொழுது நீங்கள் உயர்வதற்காக நான் தாழ்ந்து போக அவசியம் ஏற்படுகிறது. ஒரு சிலர் தியாகத்தால்தான் இந்த உலகமே உயர்கிறது.''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது, நீ தப்பு செய்ய வில்லை. அதனால் நீ சிறைக்குப் போகக் கூடாது.''

''அப்படீன்னா தப்பு செய்கிறவர்கள் தான் சிறைக்குப் போகிறார்கள் என்கிறாயா?''

''ஒன்று இரண்டு தவறுகள் ஏற்படலாம். அதனால் உள்ளே போகிறவர்கள் தவறு செய்யவில்லை என்று எப்படிக் கூறமுடியும்.''

''இப்படி உள்ளே போகிறார்கள்; வெளியே வருகிறார் கள்; ஏன்?''

''குற்றவாளிகள்''

''அது அவர்களுக்குத் தண்டனை அல்ல. அவர்களை என்ன செய்வது என்று தெரியாமல் உள்ளே அடைக்கப்படு கிறார்கள்.''

''சமூக விரோதிகள்''

''அப்படியானால் தம்பியும் ஒரு சமூக விரோதிதான். அவன் தன் உழைப்பை நம்பி வாழவில்லை. யாரோ அவன் மாமனார் சொத்தை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறான். அந்த வகையில் அந்தக் குடும்பத்தில் அவன் ஒரு அட்டை தானே? அவர்கள் உழைப்பை இவன் உறிஞ்சுகிறான் என்பதுதானே பொருள்?''

''அவர்களுக்கு இருக்கிறது. அவன் சாப்பிடுகிறான்.''

''அது கூடாதம்மா! அது அவர்களே வைத்துக் கொள்ளட்டும். தன் உழைப்பால் அவன் முன்னுக்கு வா

வேண்டும். அவர்கள் அவன் கேளிக்கைகளுக்குத் தரு வார்கள். சுகபோக வாழ்வுக்கு உதவுவார்கள். ஆனால் தர்மத்துக்கும் நியாயத்துக்கும் உதவமாட்டார்கள். வேண்டு மென்றால் ஒன்று செய். தம்பிதான் கொடுத்தான் என்று ஓர் உண்மையைச் சொல்லச் சொல். நானும் தப்பித்துக் கொள்கிறேன். ரங்கனும் தப்பித்துக் கொள்வான்.''

''உண்மையாக இருந்தால்தானே அப்படிச் சொல்ல முடியும்?''

''எது நன்மையைத் தருமோ, அதுதான் உண்மை; இத னால் எனக்கு நன்மை விளைகிறது.''

''அவள் சும்மா இருக்கமாட்டாளே''

''உண்மை சொல்லுவதுக்கு ஏன் அஞ்சவேண்டும்?''

''அது அவனுக்கு நன்மை தராதே. உன் சொற்படிப் பார்த்தால் எது நன்மையைத் தருமோ அதுதானே உண்மை. அது அவனுக்கு நன்மையைத் தராதபோது அது பொய் தானே?''

''பின் அந்த முயற்சியை விட்டு விடு, அவனிடம் சொல்லிப்பார்''.

''நான் எப்படிப் போவேன்?''

''அம்மா! பாரதக் கதையைப் படித்திருக்கிறாயா?''

''அண்ணன் தம்பி சண்டை தானே?

''நீங்கள் அப்படி ஒன்றும் சண்டை போட்டுக் கொள்ள வில்லையே''.

''அவன் நாடாள்கிறான்; நான் காடாளப் போகிறேன். எனக்கு நாட்டில் உலவ வரம் கேட்கிறேன். அவன் மறுத்தால்''

''பொறுத்துத்தான் பார்க்க வேண்டும்''

“அந்தப் பாரதக் கதையில் குந்திதேவி கன்னனிடம் சென்று வரம் கேட்டாள் தெரியுமா?”

“அதைப் போல்”

“நீயும் அவனிடம் சொல்ல வேண்டும். அவன் தாயை மறந்துவிட்டான். நீ அவனுக்குத் தாய் என்பதை முதலில் உணர்த்து.”

“அப்புறம்”

“ஒரு முறை விட்ட அம்பை மறுபடியும் விடாதே என்று கேட்டாள்”

“அது போல்”

“அவன் செய்த தவறுகளையே மீண்டும் செய்ய வேண்டாம் என்று சொல்”

“அப்படி என்றால்”

“அது அவனுக்கு விளங்கும். உனக்குத் தெரியாது. இந்த அளவு பேசு. அவன் நிச்சியமாக இங்கு வருவான்: உண்மையைச் சொல்லுவான். அவனுக்கும் நன்மை எனக்கும் நன்மை”.

“நீ பேசுவது எனக்கு ஒன்றுமே புரியவில்லை.”

“எனக்கு அந்தக் கூட்டத்திலேயே அவர்களிடம் கதை பேசிப் பழக்கம். அவர்களும் கதை சொல்வார்கள். அதனால் என்னால் எதையும் வெளிப்படையாகக் கூறமுடியாது. கதை வடிவில்தான் கூறமுடியும்.”

## 6

அம்மா குந்தியானாள். குந்தி கன்னனிடம் சென்றாள். அம்மாகண்ணு அர்ச்சுனனோடு சென்றாள். தருமன் இங்கே

தனி ஆட்சி செய்து கொண்டிருக்கிறேன். அந்த 'லாக்கப்பில்' என்னை அவர்கள் போட்டு அடைத்து வைக்கவில்லை. நான் வெளியே அங்கும் இங்கும் உலவ விட்டார்கள் நான் நொண்டியாதலால்.

என் பழைய கூட்டம் அங்கு மாறிமாறி வந்து இடம் அடைத்துக் கொண்டார்கள். மருத்துவமனையில் நோயா ளிகள் குவிவதைப் போல அங்கே வந்து குவிந்தார்கள்.

குறவன் ஒருவன் இருந்தான். அவனிடம் பேச்சுக் கொடுத்தேன்.

*"நீ ஏன் என்ன செய்தாய்?"*

*"திருடியதாகச் சொல்கிறார்கள்"*

*"அப்பொழுது நீ திருடவில்லையா?"*

*"திருடு என்றால் யாருக்கும் தெரியாமல் எடுப்பது. நான் எடுக்கும் பொழுதுதான் பார்த்து விட்டார்களே. அப்பொழுது எப்படித் திருடு ஆகும்?"*

*"அது கொள்ளை; கொள்வது கொள்ளைதானே"*

*"எனக்கு வேண்டியதை எடுத்தேன். ஒரு பெட்டியை எடுத்தேன்"*

*"அந்தப் பெட்டி எதற்கு?"*

*"அதில் எனக்குத் தேவைப்படுவது பணம். அதை மட்டும்தான் எடுக்கத் திறந்தேன்."*

*"பின்?"*

*"அதற்குள் அவசரப்பட்டு விட்டார்கள். என்னை எடுக்கா தபடி தடுத்துவிட்டார்கள்."*

*"இப்பொழுது என்ன செய்யப் போகிறாய்?"*

*"எனக்கு என்ன தெரியும்?"*

''உன்னை வெளியே விட்டால்''

''மறுபடியும் திருடுவேன்''

''அதனால்?''

''உள்ளே போவதுதான் நல்லது. கொஞ்ச நாள் நான் கஷ்டப்பட வேண்டி இருக்காது, ஏன் நீ கூட என் கூடத்தானே வரப் போகிறாய்?'' என்று கேட்டான்.

அவன் என்னோடு தோழமை கொண்டாடினான்.

என்னோடு ஒரு 'அம்மாகண்ணு' அழைத்து வரப் பட்டாள். அவளை விசாரித்துக் கொண்டிருந்தார்கள்.

''உன் பெயர் என்ன?''

''காந்தா''

''நீ ஏன் இந்தத் தொழிலுக்கு வந்தாய்?''

''அழகாக இருப்பதால்''

''மூஞ்சைப்பாரு'' என்று ஒருவன் அங்கே முணு முணுத்துக் கொண்டிருந்தான்.

அவள் அழகாக இருந்தாள். இவன் முணுமுணுப்பதற்கு நியாயமே இல்லை.

''வேறு தொழில் ஏதாவது''

''இன்னும் இந்த நாடு அவ்வளவு தூரம் முன்னேற்றம் அடையவில்லை'' என்றாள்.

குற்றவாளிகளை உள்ளே அனுப்புவதால் பயன் இல்லை. அவர்களுக்கு வாழ்க்கை அமைத்துக் கொடுக்க வேண்டும். நான் ஒருத்திக்கு வாழ்க்கை அமைத்துக் கொடுத்தேன். ஒரு ரவுடியைத் திருத்த முடிந்தது. அவனைச் சமூக மனிதனாக மாற்ற முடிந்தது. இந்தக் குறவனையும் இவளையும் எப்படித் தனி ஒருவனால் மாற்ற முடியும். சமுதாயம் இதைப்பற்றித் தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பெண்ணுக்கு நல்ல வாழ்வு அமையும் சூழ்நிலை உருவாக வேண்டும். ஆண் உழைப்பதற்கு ஏற்ப வாய்ப்புகள் அமைய வேண்டும். இப்படி நினைக்கிறேன். எப்படிச் செயல்படுத்து வது? நான் நினைக்கிற சமநிலைச் சமுதாயம் அமையுமானால் இந்தக் குற்றங்கள் குறைந்துவிடும். தேவைக்கு மேல் யாரும் சேர்க்க மாட்டார்கள். அதிகம் உழைக்க வேண்டியதும் இராது. மனிதன் மனிதனாக வாழ முடியும். அவன் இரும்புப் பெட்டியில் போய் ஒளிந்து கொள்ளவேண்டிய தேவையே ஏற்படாது.

இப்பொழுது என் நிலைமை. நான் உள்ளே போவதைத் தவிர வேறு வழி இல்லை. தம்பி துணிந்து இந்த உண்மை யைச் சொல்லமாட்டான். என்னைக் காப்பாற்ற அவன் முனை யமாட்டான். நான் வெளியே இருந்தால் அவன் அம்மா கண்ணுவை அடைய முடியாது. நான் உள்ளே தள்ளப்பட்டு விட்டால் அவன் சுலபமாக அவளை விலைக்கு வாங்கிவிட முடியும். நெக்லஸ் என்ன ஒரு வீடே கூட வாங்கிக் கொடுக்க முடியும். அவன் இன்பத்துக்கு அவள் கருவியாக இருக்க வேண்டும். எத்தனை பெரிய இடங்களைப் பார்த்து இருக் கிறேன். பகலில் ஆள் இருக்கமாட்டான். இரவில் மட்டும் தலை காட்டுவான். அவள் கவுரவமான வாழ்க்கை நடத் துவாள். அந்த நிலையில் அவளுக்கு அவன் கவுரவம் அளிக்க முடியும்.

அவனுக்கு எப்படித் தெரியும் அவள் ரங்கனை மணக்கப் போகிறாள் என்று. உதிரிகள் என்றுமே உதிரிகளாகத்தான் இருக்கப் போகிறார்கள் என்றுதான் அவனைப் போன்ற வர்கள் எண்ணுவார்கள். அவனுக்கு இந்த உண்மை தெரிந் தால் நிச்சயமாக மனம் மாறுவான். இப்படி எண்ணிக் கொண்டிருக்கும் பொழுது வெளியே என் தம்பியும் அம்மா கண்ணுவும் வந்து நின்றார்கள்.

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. "நான் பணத்துக்கே மசி யவில்லை. பலத்துக்காகவா பணியப் போகிறேன்," என்று

சொல்லி இருந்தாள். இப்பொழுது அவள் பணத்துக்குப் பணிந்து விட்டாளே. என் விடுதலைக்காக அவள் அந்தத் தவறைச் செய்யத் துணிந்துவிட்டாள் என்று நினைக்கிறேன். என் குடும்பத்தைக் காப்பாற்ற அவள் அவனோடு தொடர்பு கொண்டாள். இப்பொழுது என்னைக் காப்பாற்ற அவனோடு பிணையத் தீர்மானித்துவிட்டாள். சே! ஒரு தவறை அனும தித்தால் தவறுகள் தொடர்ந்து நடக்கின்றன. அப்பொழுதே அவள் அந்தத் தவறுகளைச் செய்ய விட்டிருக்கக் கூடாது. அவள் என்னிடம் சொல்லி விட்டா தவறு செய்தாள்.

"எனக்கு ஒரு பெரிய உபதேசம் செய்தாள். நீங்கள் மானத்தோடு வாழ வேண்டியவர்கள். நடுத்தரக் குடும்பங்கள் தம் நிலை கெடக் கூடாது. அதை ஒட்டித்தான் இந்தச் சமுதா யத்தின் நன்மை ஒழுங்கு கட்டுப்பாடுகள் இருக்கின்றன" என்று சொன்னாள். "என் நடத்தையைக் கேட்பவர் கிடை யாது. நீங்கள் பசி எடுத்தால் தாழ்ந்த தொழிலுக்குப் போய் விடுவீர்கள். உடனே உன் அம்மா வீட்டு வேலை செய்யப் போய்விடுவார். நான் பசி எடுத்தால் அது நான் சொல்லத் தேவை இல்லை. என் அண்ணன் குடும்பம் தாழ்ந்து போவதை நான் ஒப்புக் கொள்ள முடியாது" என்றெல்லாம் பேசி அவள் விருப்பம் போல் நடந்து கொண்டாள். அவளை அந்த உதிரிகளின் நியாய அநியாயங்களைக் கொண்டு அப்பொழுது அளவிட்டேன். அப்பொழுது அவளைச் சரி என்று கூறமுடியாவிட்டாலும் கண்டிக்க முடியாத நிலையில் இருந்தேன்.

இப்பொழுது நான் அவளை உயர்த்தி இருக்கிறேன். அவள் தேடிய ஒரு ஆம்படையானைத் தேடித் தந்த பிறகு அவள் மறுபடியும் மானம் கெடும் வாழ்வுக்குப் போவதை நான் ஒப்புக் கொள்ள முடியாது. அவள் இப்பொழுது என் தங்கை என்று ஏற்றுக் கொண்ட பிறகு அவளைத் தவறு செய்யவிடமாட்டேன். அவள் மாஜிஸ்ரேட்டை அழைத்து வருவாள் என்று எதிர்பார்த்தேன். அவள் என் தம்பியை அழைத்து வந்து விட்டாள்.

"ஏன் என் தம்பியை அழைத்து வந்தாய்?"

"மறந்து விட்டீர்கள்; வாடிக்கைக்காரர் ஒருவரைத் தானே அழைத்து வரச் சொன்னீர்கள். அதனால்தான் அழைத்து வந்தேன்."

"மாஜிஸ்ட்ரேட்டு?"

"அவர் திருந்திவிட்டார்."

"அன்று என்னைக் கோர்ட்டில் பார்த்த பிறகு அவர் மாறி விட்டார். அன்று நான் குற்றவாளியாகக் கூண்டில் இல்லை. அவர்தான் குற்றவாளிக் கூண்டில் நின்றார். "பார்த்தால் நல்ல வராக இருக்கின்றீர். நீங்கள் இந்தத் தவறு இனிமேல் செய்ய வேண்டாம்!" என்று நான் அவருக்குச் சொல்லவில்லை. அவர் மனச்சான்று அவருக்கு அவ்வாறு கூறிவிட்டது. அவர் அதற்குப் பின் அந்தப் பக்கம் சென்றது இல்லை. அவரை எப்படி மறுபடியும் நான் சந்திப்பது. எங்கே சந்திப்பது. வீட்டில் சந்திக்க முடியாது. கோர்ட்டில் சந்திக்க முடியாது. அவர் ஓடும் கரை நான் நிறுத்த முடியாது. மறுபடியும் அவர் என்னைப் பார்க்க விரும்பவில்லை. என்னால் அவரைப் பார்க்க முடியாமல் போய்விட்டது."

"அடுத்தது நினைவில் வைத்துக் கொள்ளக் கூடிய மனிதர் உங்கள் தம்பிதான். அவரைத்தான் அழைத்து வர முடிந்தது." என்றாள்.

"எனக்கு என் தம்பி ஜாமீன் கொடுக்க வந்திருக்கிறான் அல்லவா?"

"கேசு வாப்பஸ் வாங்க வந்திருக்கிறார்."

"அப்படியானால் யார் திருடியது"

"கேசு வாப்பஸ் வாங்கிவிட்ட பிறகு இந்தக் கேள்வி எழு வதற்கு நியாயமே இல்லை."

"அவனுக்கு வாப்பஸ் வாங்க அவனுக்கு என்ன உரிமை இருக்கிறது. அது அவன் மனைவி செய்யவேண்டியது."

அதற்குள் அவனே உள்ளே வந்தான்.

"உனக்கு இந்தப் பெண் தெரியுமா?"

"பாதி தெரியும். அதாவது அவள் உன்னோடு சுற்றிக் கொண்டிப்பாள் அந்தப் பாதி தெரியும். ரயிலடியில் அவளையும் உன்னையும் பார்த்திருக்கிறேன்."

நான் எப்படி அவனைப் பற்றி அவ்வாறு கூறமுடியும்?

நான் அவளோடு பகிரங்கமாகச் சுற்றுகிறேன். அவன் அவளைக் கள்ளக் கடத்தல் செய்யும் பொழுது எப்படி என்னால் காண முடியும். அதைக் கண்டாலும் எப்படிச் சொல்ல முடியும்.

"அவள் வந்து சொன்னாள். உன்னை ஜாமீனில் மீட்டுத் தரும்படி"

"ஆக உன் மனைவி உன்னிடம் சொல்லவில்லை. அதை விட முக்கியமான மற்றொருத்தி உன்னிடம் சொல்லி இருக்கிறாள்"

"அவள் சொன்னாள். என்பதற்காக அல்ல. நீ அகப் பட்டுக் கொண்டிருக்கிறாய் என்பதற்காகத்தான் வந்தேன்"

"என்னை வெளியே விடுவதால் உனக்கு என்ன லாபம்?

"அது என் கடமை"

"கடமை என்ற சொல்லை நினைவுப்படுத்தியதே இந்த அம்மாகண்ணுதான். உன் மனைவி உன் கடமையை உணர்த் தவில்லை."

"அவளைப் பற்றி ஏன் இழுக்கிறாய்"

"அவள்தான் என்னை இங்கே இழுத்து வந்திருக்கிறாள்"

"நீ ஏன் நெக்லசோடு வந்தாய்?"

"அதை உன்னிடம் சேர்ப்பிப்பதற்காகத்தான்."

“இந்த ஏழைகள் கையில் அது இருந்தால் அதை வைத்துக் காப்பாற்ற முடியாது என்பதால்தான்.”

அம்மாகண்ணு நாகரிகம் தெரிந்தவள். நாங்கள் பேசும் பொழுது அவள் அங்கே இல்லை; வெளியே எனக்காகக் காத்துக் கிடந்தாள்.

“அது எப்படி உன் கையில் வந்தது?”

“இதே கேள்வியைத்தான் சப்-இன்ஸ்பெக்டர் கேட்டார். நீ கேட்பது எந்த அடிப்படையில்?”

“யார் உன்னிடம் கொடுத்தார்கள்?”

“நீ யாரிடம் கொடுத்தாய்?”

அவன் தலை குனிந்தான்.

“இது யார் சம்பாதித்தது? அம்மா சீட்டு நாட்டு கட்டிச் சேர்த்து அவள் மருமகளுக்கு வாங்கித் தந்தது. அதை நீ அம்மாகண்ணுகளுக்குக் கொடுப்பதற்காக அல்ல.”

அதற்குள் என் பழைய நண்பர் சுமைதாங்கி என்னைத் தேடிக்கொண்டு வந்தார். நான் ‘லாக்காப்பில்’ இருப்பதை யாரோ கேட்டுச் சொல்லி இருக்கிறார்கள்.

“என்னப்பா உனக்கு ஏன் இந்த நிலைமை. நீயா திருடினாய்? நான் நம்பமாட்டேன்.”

“நம்பித்தான் ஆகவேண்டும். வேறு வழியில்லை. இல்லா விட்டால் என் தம்பி திருந்தமாட்டான். நான் கெட்டு விடுவேனே என்று நினைத்து என் கன்னத்தில் ஓங்கி அறை கொடுத்தான். அவனுக்கு அந்த உரிமை இருந்தது. இப்பொழுது இவன் கெட்டுவிட்டானே அதற்கு நான் என்ன செய்யவேண்டும். நானும் ஓங்கி அறை விடுவதுதானே நியாயம். எங்கள் வீட்டுச் சொத்தை இவன் திருடி யாரோ நடைவாசிக்குத் தருகிறான் என்றால் என்ன அர்த்தம். அவன் உயர்ந்து விட்டான். நான் அடிக்க முடியாது. அவன் என்னை

அடித்தான். அதனால் தாழ்ந்து விடவில்லை. நான் மிகவும் உயர்ந்துவிட்டேன். அடுத்து போலீசுகாரன் என்னை அடித்தான். இயேசுவாக உயர்த்தப்பட்டேன். அதற்கு அப்புறம் அம்மா அடித்தார்கள். அதற்கு மேல் நான் உயர இடமில்லை.''

''என் காலை எதற்காக இழந்தேன் தெரியுமா? இவனை ஓடோடிக் காப்பாற்றுவதற்காக. அந்தச் சக்கரத்தில் அவன் அகப்பட்டு உயிர் விட்டு இருப்பான். அந்த அவலக் காட்சியை என் கால் தடுத்துக் காப்பாற்றியது. பிறகு என் உழைப்பால் உயர்ந்தான். பிறகு மறந்தான். அதற்கு அப் புறம் அவன் உயர்வான் என்று பார்த்தேன். அவன் உயர வில்லை. அவன் படித்த மேல்நாட்டுப் படிப்பு; ஆங்கிலப் படிப்பு.''

''எந்தக் கார் என்மீது ஏறியதோ, அதிலேயே அவன் ஏறினான். அப்பொழுதே அவன் ஒரு முதலாளி என்பதைக் காட்டிவிட்டான். ஏழையின் உழைப்பில் உயர்பவன், அவன் மீது சவாரி செய்பவன்தான் முதலாளி. அந்த மனோபா வம்தான் இவனுக்கு வந்துவிட்டது.''

''அதற்குமேல் அவன் மேல்நிலைக்குச் சென்றான். அவர் களிடத்தில் உள்ள கெட்ட பழக்கங்களுக்கு இரையாகி விட்டான். அதன் அடிப்படை சுயநலம். எல்லாம் தமக்கே வேண்டும் என்ற தத்துவத்தின் வாரிசுக்காரர்கள் அவர்கள். அவர்களோடு சேர்ந்து விட்டான்.''

''இந்தக் குடும்பத்தை அடியோடு மறந்துவிட்டான். இவனுக்காக என் அப்பா எவ்வளவு உழைத்து இருப்பார்கள். அம்மா இவனுக்காக எவ்வளவு எடுத்து இருப்பார்கள். இந்தக் குடும்பத்தின் சுகதுக்கங்களை மறந்து விட்டான். குடும்பச் சுமையை என்மேல் போட்டுவிட்டான். நானே எனக்குச் சுமையாக இருக்கும் பொழுது நான் எப்படி இந்தச் சுமையைத் தாங்க முடியும்?''

"என் குடும்பத்தில் இவன் மீது அபார நம்பிக்கை வைத்தி ருந்தார்கள். அவர்கள் கஷ்டப்படும்போது மாதாமாதம் ரூபாய் அனுப்பிக் கொண்டிருந்தான். அதை வைத்துதான் அவர்கள் குடும்பம் ஒரு வகையாக நடந்து. நான் நொண்டி. நான் ஒன்றும் செய்ய முடியாமல் போய்விட்டது."

அதற்குள் அவன் இடைமறித்து "நான் ஒன்றும் அனுப்ப வில்லை. நான் அனுப்பவில்லை என்பதைத்தான் இவர் இப்படிச் சுட்டுகிறார்" என்றான்.

"உண்மை. அவன் பணம்தான். அவன் அனுப்பியது தான் அவனுக்கு அது தெரியாது. பெரியவர்கள் பிறருக்கு உதவி செய்யும்போது இரண்டாம் பேருக்குத் தெரியாமல் செய்வார்கள் என்பதற்காக என் தம்பி எடுத்துக்காட்டு."

"நான் அனுப்பவே இல்லை" என்றான்.

"அது இரண்டாம் பேருக்குத் தெரியாது. மாதாமாதம் அம்மாகண்ணுக்கு இவன் வரும் பொழுது பணம் கொண்டு வந்து தருவான். அவள் அதைத் தனக்கு என்று ஒரு காசும் எடுத்துக் கொள்ளமாட்டாள். அப்படியே குடும்பத்துக்கு அனுப்பி வந்தாள். ஆறுமாதம் அந்தக் குடும்பத்தைக் காப்பாற் றியது என் தம்பிதான்"

அவன் தலைகுனிந்து நின்றான்.

"அதற்கப்புறம் இந்தக் குடும்பத்தைக் காப்பாற்றிய அம்மாகண்ணுவைப் பாராட்டி அவளுக்கு ஒரு நெக்லஸ் மாலையைப் பரிசாகத் தந்தான். அவள் அதை என்னிடம் காட்டி அதைப் பெற்றுக் கொள்வதா வேண்டாமா என்று கேட்டாள்."

"அவனுக்குச் சொந்தம் இல்லாத நகையை அவன் எப்படிக் கொடுக்க முடியும். அதை முதலில் சேர்ப்பதுதான் நம் கடமை என்று உணர்த்தினேன்."

"அதைக் கொண்டு போய் அந்த அம்மையாரிடம் கொடுக்கச் சென்றேன். அவர்கள் என் சேவைக்குப் பாராட்டி னார்கள். திருட்டுப் பட்டம் சூட்டி என்னை ஜீப் வண்டியில் ஏற்றிப் பெரிய கவர்னரை அனுப்புவதை போலப் போலீ சோடு அனுப்பி வைத்தார்கள்."

"வீடு வாசல் இல்லாமல் எப்படி எப்படியோ காலம் கடத் திய எனக்கு இந்த அழகிய போலீசு நிலையத்திற்கு அனுப்பி வைத்தார்கள்."

"இங்கே இவர்கள் மிகக் கண்ணியமாக நடத்தினார்கள். குற்றவாளிகளை வெறுக்காத மனிதர்கள் யாராவது இருக்கி றார்கள் என்றால் அது போலீசுக்காரர்கள்தான். அவர்கள் பிழைப்பே இவர்களால்தானே நடக்கிறது. நோயாளியை எந்த வைத்தியரும் வெறுப்பதில்லை. அந்த நோயோடுதான் அவர் போராடுவார் இவர்களும் என்னை எந்தப் பிரிவில் சேர்ப்பது. எந்தத் தண்டனையைச் சிபாரிசு செய்வது என்பதில்தான் ஆராய்ச்சி செய்வார்கள். எது அதிகம்? ஒரு குற்றவாளியைச் சிறையில் தங்க வைக்க உதவும் என்று யோசித்துப் பார்த்து உதவுவார்கள்.

"இடையில் எனக்கு ஒரு சின்ன ஆசை. இவளை இப்படி நெக்லசுக்கும் காசுக்கும் விலைக்கு விற்காமல் இவளுக்கு ஓர் ஆம்படையானைத் தேடித்தர வேண்டும் என்று ஆசைப் பட்டேன். என் தம்பி இவளை வைத்துக்கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டான். அவள் ஆசைப்பட்டது ஓர் ஆம்ப டையான், இவன் எப்படி அவளுக்கு ஆம்படையான் ஆக முடியும்."

"ஆம்படையான் என்றால் என்ன அர்த்தம். அகமு டையான் என்று தான் அர்த்தம்; அதாவது அவன் அந்த வீட்டில் சதா தங்கி இருக்க வேண்டும். யாராவது ஐயா இருக்கி றாரா என்று கேட்டால் உடனே வெளியே வரவேண்டும்."

"தபால்காரன் கொண்டு வரும் கடிதங்களில் அவன் பெயர் முகவரியில் இடம் பெறவேண்டும். எடுத்த பேச்சுக்கு எல்லாம் எங்கள் வீட்டுக்காரர் என்று அவள் பெருமையாகப் பேச வேண்டும்."

"அவன் வேலைக்குப் போகும் போது அவள் வெளியே வந்து நின்று வழி அனுப்ப வேண்டும். வரும் போது வழி மேல் விழி வைத்துக் காத்திருக்க வேண்டும். மாலை வேளை காற்று வாங்க இருவரும் உரிமையாக வெளியே போக வேண்டும். அவனுக்காக அவன் முன்னால் தியேட்டர்களில் ரிசர்வ் செய்து வைக்க வேண்டும்; மொத்தமாகச் சொன்னால் அவன் ஒரு முழு நேர வேலைக்காரனாக இருக்கவேண்டும். அது இவனால் முடியுமா. ஏற்கனவே இவன் ஒருத்தி காலால் இடும் வேலையைத் தலையால் செய்யும் தாசானு தாசனாக ஆகிவிட்ட பிறகு இவன் எப்படி மற்றொருத்திக்கு அடிமை யாக முடியும். துணிந்து அவள் என் மனைவி என்று சொல்லா விட்டாலும் 'துணைவி' என்று சொல்லவாவது முடியுமா?"

"இதெல்லாம் போகட்டும். ஆசை அறுபது நாள்; மோகம் முப்பது நாள்; தொண்ணூறு நாளுக்குப் பிறகு இவன் அவ ளோடு கொள்ளும் உறவு என்ன? அவள் பழைய வரலாற்றின் பெருமையை எண்ணி ஒரு காவியம் புனைவது தானே. இவனுக்கு அது எல்லாம் எப்படி முடியும்."

"அவள் உதிரியினத்தைச் சார்ந்தவள். அங்கே இருந்த ஒருவனைத் தேடிக்கொண்டாள். அவன் அவளுக்காகக் கீழ்ப் படிவான். அவனுக்காக வாழ்வது போன்ற உணர்ச்சி அவ ளுக்கு ஏற்படும்; இவனோடு வாழ்ந்தால் அவள் காசுக்காக வாழ்கிறாள் என்றுதான் நினைப்பான். நிச்சயமாக இவன் அவள் விரும்பும் ஆம்படையான் ஆகமுடியாது. இந்த நிலை யில் இவன் மறுபடியும் சின்ன ஆசையிலிருந்து விடுபட வில்லை. அவள் மறுபடியும் அந்த உதிரியினத்தில் இருப் பாள். எப்பொழுதாவது தனக்குப் பயன்படுவாள் என்ற

தவறான ஆசை. அதுதான் அவளோடு வந்திருக்கிறான் அவளுக்கு நல்லவனாக நடிக்க.''

எப்படி இவ்வளவும் பேசி முடித்தேன்? நேரே எப்படி இவ்வாறு செய்திகளை நேருக்கு நேர் முகத்துக்கு முகம் சொல்ல முடியும். அதற்கு ஒரு சுமை தாங்கி தேவைப்பட்டார். அவரும் அங்குச் சரியான நேரத்தில் வந்து சேர்ந்தார்.

''கன்னம் புளித்துப் போச்சு ஏன் என்று முன்கேட்ட பொழுது எல்லாம் நம் சகோதரர்கள் என்று சொன்னாயே! அவர்தான் இவரா?''

''அவரேதான் இவர். அப்பொழுதும் என் உறவைத்தான் சொன்னேன். இப்பொழுதும் அதைத்தான் சொல்கிறேன். உறவை நாசமாகக்கூடாது. அதிலேதான் நம் சமுதாயக் கட்டுப் பாடு இருக்கிறது.''

''அந்த உறவுக்காகத்தான் இப்பொழுது வந்தேன்'' என்றான்.

''என்ன முடிவோடு வந்திருக்கிறாய். நீதான் இந்த நெக்லஸ் கொடுத்தது என்ற உண்மையை ஒப்புக்கொள். அது தான் நல்லது. நீ என்னிடம் கொடுத்தாய் என்றால் அது உனக்கு நன்மை. அவளிடத்தில் கொடுத்தாய் என்றால் உனக்கு அங்கே மேல் நிலையில் ஒரு அதிர்ச்சி ஏற்பட்டுவிடும். நீ என்னிடம் கொடுத்தாய். சகோதர பாசத்துக்காக என்று சொல். அது உனக்குப் பெருமை. இது உன் குடும்பப் பொருள். அவள் அதை மதிக்காமல் வைத்திருந்தாள். அதனால் தை எடுத்துக் கொடுத்தேன் என்ற சொல். அது அவளுக்குப் பாட மாக இருக்கட்டும். நான் உன் ஜாமீனுக்காகக் காத்து இல்லை. நீ ஜாமீன் கொடுத்து நான் வெளிவர அவ்வளவு தாழ்ந்து போகவில்லை. வழக்குப் பதிவு செய்ததே உன் மனைவி என்றால் நான் உன்னால் ஜாமீனில் வெளியே வருவேன்

என்பது எனக்கு அவமானம்தான். அதனால் உன் ஜாமீன் எனக்குத் தேவையில்லை. இல்லை; முதல் உண்மையே சொல்லிவிடு. நீ அம்மாகண்ணுக்குத்தான் கொடுத்ததாகச் சொல்லிவிடு. இல்லை அந்தத் துணிவு உனக்கு இல்லை என்றால் அம்மாகண்ணுவை விட்டே சொல்ல வைக்கிறேன். முதலிலே பாசம் உறவு என்ற அடிப்படையில் நான் சொல்வது. மற்றது உண்மை நீதி என்ற அடிப்படையில் நான் பேசுவது. இரண்டுக்கும் உனக்கும் சம்மதம் இல்லை என்றால் நான் குற்றவாளிதான். அந்த முடிவிலிருந்து நான் மாற முடியாது'' என்று முடித்தேன்.

அதற்குமேல் அவனால் பேசமுடியவில்லை. அந்தத் துணிவு அவனுக்கு ஏற்படவில்லை. துணிந்து அவன் தன் மனைவியிடம் பகைமை தேடிக்கொள்ள முடியாமல் போய் விட்டது. நான் உண்மையைச் சொல்லமாட்டேன். அதனால் அவனுக்கு இழிவை உண்டாக்கமாட்டேன் என்பதில் அவன் நம்பிக்கை வைத்தான்.

இனி அம்மாகண்ணு அவனுக்குக் கிடைக்கமாட்டாள். நான் சொன்ன ஒரு ஆம்படையானாக அவன் ஆக முடியாது. அதனால் அவன் மறுபடியும் மனம் மாறிவிட்டான். வேதாளம் மறுபடியும் முருங்கை மரம் ஏறிவிட்டது என்று சொல்லுவார்களே அதுபோல் ஆகிவிட்டான். ஒரு குற்றவாளியைத் தன் அண்ணன் என்று சொல்லிக் கொள்ள வெட்கப்பட்டான். அங்கு இருப்பதே அவமானம் என்று அந்த இடத்தைவிட்டு அவன் வெளியேறி விட்டான்.

குந்திதேவி கன்னனிடம் போகவில்லை. நேரே கண்ண பெருமானிடம் சென்றாள். எப்படியாவது தன் மகனைச் சிறைக்குப் போகாது காப்பாற்ற வேண்டும் என்று சொன்னாள். அந்தக் கண்ணபெருமான் வேறுயாருமில்லை. அவன் என் தங்கையின் கணவன். அவன் பெயரும் கண்ண பெருமான், பி.ஏ.பி.எல். அவன் சட்டம் படித்த வக்கீலாக

இருந்தான். அவனைப்பற்றி இதற்கு முன்னால் உங்களுக்குச் சொல்ல வாய்ப்பில்லை சந்தர்ப்பம் வரும் பொழுதுதானே நாம் வக்கீலிடம் போக வேண்டியிருக்கிறது. அம்மாவிற்கு எப்படியும் என்னை உள்ளே வைக்கக்கூடாது என்பதுதான்.

அவளைப் பொருத்தவரை ரங்கன் தான் திருடன். அவன் தான் எடுத்துக் கொடுத்து இருக்கிறான். ரங்கனைக் காட்டிக் கொடுக்கக்கூடாது என்று அம்மாவிடம் சொல்லியிருந்தேன். அவன் உள்ளே போய்விட்டால் அம்மாகண்ணு ஒரு பிரச்ச னையாவாள் என்பதை எடுத்துக் கூறி இருந்தேன். அம்மா கண்ணு இந்தக் குடும்பத்தைக் காப்பாற்றி இருக்கிறாள். அதே நன்றி உணர்வு அம்மாவுக்கு மிகுதியாக இருந்தது. ரங்கனைக் காட்டிக் கொடுக்க அம்மா விரும்பவில்லை. அதனால்தான் அவள் நேரே கண்ணபெருமானிடம் சென்றாள்.

என் தங்கையும் அவனோடு வந்திருந்தாள். அப்பொழு துதான் என் தங்கையின் அருமை எனக்குத் தெரிந்தது. உடன் பிறந்த சகோதரனைவிட தங்கை எவ்வளவு பாசமும் அன்பும் கொண்டு விளங்குகிறாள் என்பதை உணரமுடிந்தது. அவள் கண் கலங்கி நின்றாள்.. அவளைப் பார்த்தபொழுது அம்மா கண்ணுவைப் பார்ப்பது போன்ற உணர்வு ஏற்பட்டது. என் தம்பி வெளியேறியதும் அம்மாகண்ணும் உள்ளே வந்தாள். அவள் எங்கள் குடும்பத்தில் ஒருத்தியாக ஆகிவிட்டாள். அதைப்போன்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது அவளைப் பார்க்கும்பொழுது.

வக்கீல் பேசவில்லை அவர் அம்மா சொல்ல எழுதிக் கொடுத்தார். "நான் எனக்குச் சொந்தமான நகையை என் மரு மகளிடம் கொடுக்கச் சொல்லி என் மூத்த மகனிடம் அனுப்பி வைத்தேன். அதை அவன் அங்கே கொடுக்கச் சென்றான். அவள் அதைத் தவறாக உணர்ந்துவிட்டாள். அவள் வீட்டி லிருந்த நகை என்று நினைத்தாள். நகை அவளுக்கு உரியது அல்ல. அது அவளுக்கு உரியது என்றால் அதை எடுத்து

என்றைக்காவது கழுத்தில் போட்டிருக்க வேண்டும். அதை அவள் போட்டதே இல்லை. அவள் இந்த வழக்கைப் பதிவு செய்தது தவறு. எனவே என் மகனை விடுதலை பண்ண வேண்டும்'' என்று எழுதிக் கொடுத்தாள்.

எது நன்மையோ அதுதான் உண்மை. ஏன்? நான் சொல்லிக் கொடுத்த பாடம் அம்மாவுக்கு நன்றாக ஏறி இருந்தது. கண்ணனின் கூரிய மூளை இதற்குப் பயன்பட்டது. பாரதப் போரில் கண்ணபெருமான் போரை மூட்டிவிட்டான். இந்த வழக்கில் போரைத் தவிர்த்தான் இந்தக் கண்ண பெருமான். எனக்கே ஆச்சரியமாக இருந்தது.

போலீச் சப்-இன்ஸ்பெக்டர் அந்தக் கடிதத்தை என் தம்பி மனைவி அவளுக்கு போன் செய்தார். அதைப் படித்துக் காட்டினார். அதை ஒப்புக் கொள்ள முடியாது என்று அவள் சொல்லி விட்டாள். ஆகத் தன் மகனைக் காப்பாற்றுவதற்காக அவ்வாறு கூறப்படுகிறது என்றாள். நேரில் வரும்படி அவர் போனில் பேசினார்.

சில நேரத்துக்கு எல்லாம் தம்பியும் அவளும் வந்து இறங்கினார்கள். அவன் ஒன்றும் பேசவில்லை. அவனிடம் பேசுவதற்கு ஒன்றும் இல்லை. அவளையே பேசவிட்டான். அவன் பெண்ணுக்கு உரிமை கொடுத்தான்.

அவள் சப்-இன்ஸ்பெக்டர் முன்னால் நாற்காலியில் உட்கார்ந்தாள்.

''இது அவர்களால் எப்பொழுதோ எனக்குக் கொடுக்கப் பட்டது. இதில் அவர்களுக்கு உரிமை இல்லை. எங்கள் வீட்டில்தான் இருந்தது. என் கணவர் இதை லாக்கரில் வைத்திருந்தார். சில நாளுக்கு முன்னால்தான் அதை வெளியே எடுத்தார். அவர் தன் அலமாரியில் வைத்திருந்தார்.''

"ஏன் அதைத் தன் அலமாரியில் வைத்திருந்தார்" இது கேட்டது கண்ணன்.

"அதைப் போட்டுக் கொள்ளச் சொன்னார். நான் போட்டுக் கொள்ளவில்லை"

"ஏன் போட்டுக் கொள்ளவில்லை?"

"அவர்கள் நகையை நான் போட்டுக் கொள்வதில்லை என்ற வைராக்கியம் வைத்திருக்கிறேன்"

"ஆக உங்களுக்கு இதில் அனுபவ பாத்தியதையும் இல்லை" - வக்கீல்.

அவளால் பேச முடியவில்லை.

அம்மா பேசினார்கள்.

"இது அவர்கள் நகை என்றால் அவர்களிடம் கொடுத்து விடுங்கள். என் மகன் சிறை போவதைப் பற்றி நான் கவலைப் படவில்லை. அதை அவர்கள் கழுத்தில் அணியச் சொல்லுங்கள். நான் அவர்கள் நகை என்பதை ஏற்றுக் கொள்கிறேன்."

"முடியாது. இதை அவமானமாகக் கருதுகிறேன். அவர்கள் நகையை மதிப்பதில்லை"

"அவர்கள் மகனை" - வக்கீல்

"அவர் என் கணவர். அதனால் அவரை மதிக்கிறேன்"

"பலபேர் இந்த நாட்டில் பிறந்தவர்கள். இதில் வாழ்பவர். ஆனால் பிறந்த மண்ணை மதிப்பதில்லை. அதில் இவர் ஒருவர்" என்று நான் என் கருத்தைச் சொன்னேன். மேலும் அவளைப் பார்த்துச் சொன்னேன்.

''ஏன்'மா இந்த நகையை நீங்கள் போட்டுக் கொள்ளுங்கள். உங்கள் கொள்கை வெற்றி பெறும். நொண்டி இங்கே வெளியே உலவுவது அவமானம். அவன் இரயில டிக்குப் போய்விடுவான். நீங்கள் அங்கே யாரையாவது வண்டி ஏற்றப் போக வேண்டியிருக்கும். அங்கே என்னைப் பார்க்கும்பொழுது உங்கள் சிநேகிதர்கள் யாராவது ஏதாவது கேட்பார்கள். அது உங்களுக்கு அவமானம்; தம்பிக்குக் கோபம் வரும். என்னை உடனே சுலபமாக அறைந்து விடு வார்கள். நீங்கள் எங்காவது திருடலாமே என்று சொல்ல வேண்டிவரும்'' என்றேன்.

அந்த நகையை சப்-இன்ஸ்பெக்டர் எடுத்து வெளியே வைத்தார். அந்த நகைக்குச் சொந்தக்காரர் அதைக் கழுத்தில் போட்டுக் கொள்ளலாம் என்று சொன்னார். அம்மா அவசரப் படவில்லை.

மறுபடியும் அந்தப் பாரதக் கதைதான் நினைவுக்கு வருகிறது.

குந்திதேவி கன்னனை ஆற்றில் விட்டபோது ஒரு பேழையுள் அவனை விட்டாளாம். அதோடு ஒரு சேலையையும் வைத்து அனுப்பினாளாம். அது அவள் சொந்தச் சேலையாம்.

பின்னால் அவன் அங்க தேசத்துக்கு அதிபதியான பிறகு அவன் தாய் என்று பல பேர் சொல்லிக் கொண்டு வந்தார் களாம். அதை உடுத்தியவர்கள் எல்லாம் சாம்பலாய்ப் போய் விட்டார்கள். குந்திதேவிதான் வந்து அந்தச் சேலையை உடுத்திக் கொண்டாளாம்.

என் தம்பி மனைவி அதை எடுக்க மறுத்து விட்டாள்; அவள் தன் வைராக்கியத்தை விட்டுக் கொடுக்க விரும்ப

வில்லை. அது அவர்களுடையது தான் என்று சொல்லி விட்டாள். அவள் வழக்கை வாப்பஸ் பெற்று விட்டாள்.

அந்த நகை என் அம்மா வாங்கிக் கொண்டாள். எனக்கு எல்லாம் ஆச்சரியமாக இருந்தது. அதை அவள் தான் கழுத்தில் போட்டுக் கொள்ளப் போகிறாள் என்று எதிர்பார்த்தேன். குந்தி தேவி தன் சேலையை உடுத்திக் கொண்டு அழகாகக் காட்சி அளிக்கப் போகிறாள் என்று எதிர்பார்த்தேன்.

அங்கேயே அம்மாகண்ணுவைக் கூப்பிட்டாள்.

''இங்கே வா'' என்றாள். எல்லோரும் விழித்த கண் மூடாமல் அம்மாகண்ணுவையும் அம்மாவையும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவள் யார் என்பதே என் தங்கையின் கேள்வி. அவள் புருஷனுக்கும் அவள் ஒரு புதிராக இருந்தாள்.

''இந்தா இதை உன் கழுத்தில் மாட்டிக் கொள்'' என்று சொல்லி அம்மாவே அதை அவள் கழுத்தில் மாட்டினாள்.

''இது கலியாணப் பரிசு'' என்று முடித்தாள்.

எல்லோருக்கும் ஆச்சரியமாக இருந்தது.

''இது யார் இந்த அக்காள்?'' என்று அவளை என் தங்கை கேட்டாள். ''நீ தான் சொல்லி விட்டாயே. அவள் உன் உடன் பிறவாச் சகோதரி. அவள் உன் அண்ணனின் அன்புத் தங்கை'' என்றேன். எல்லோரும் வெளியேறினோம்.

அம்மாகண்ணுவை என் தாயார் உடன் அழைத்துச் சென்று விட்டாள். நானும் என் நண்பர் சுமைதாங்கியும் உடன் விடப்பட்டோம்.

''உன் தம்பியை நீ காட்டிக் கொடுத்திருக்க வேண்டும்''

அப்புறம் மற்றவர்களுக்கும் எனக்கும் வேறுபாடு இல்லாமல் போய்விடும். அவன் என் தம்பி. அவன் அவ

ளோடு நிம்மதியாக வாழ வேண்டும். அதைக் கெடுக்கக் கூடாது. 'பாவ மன்னிப்பு' தந்தார் இயேசு. பாவத்துக்குத் தண்டனை தரவில்லையே அவர்."

"சரியான ஆளப்பா நீ எதற்கெடுத்தாலும் இயேசு வையே அழைக்கிறாய்."

"ஆம் பாவச் சுமைதாங்கி அவர். நீ ரயிலடியில் சுமை தாங்கி! நான் இந்தக் குடும்பத்தின் சுமைதாங்கி" என்று கூறி என் கதையை முடித்தேன்.



# நூல்கள் கிடைக்குமிடம்

அணியக வெளியீடுகள்

ஆசிரியர் : ரா.சீ

1. அணியகம், சென்னை-30. © 644 9630
2. பாரி நிலையம், சென்னை - 108.
3. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
4. ஹிக்கின் பாத்தம்ஸ், சென்னை - 2.
5. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
6. நியூ புக் லாண்ட், சென்னை - 17.
7. கிரி டிரேடிங் ஏஜென்சி, சென்னை-4.